முன்னாள் புலிகளுக்கு விஷம்; குற்றவாளிகள் இதற்காவது தண்டிக்கப் படுவார்களா?
பக். 12 - 13

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 273 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 09, வியாழக்கிழமை 25.08.2016

# மக்கள் கருத்தை புறக்கணித்தது கொழும்பு அரசு

### காணாமற்போனோர் அலுவலகத்துக்கு விசாரணையாளர்களை நியமித்ததில் ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓகஸ்ட் 25

காணாமற்போனோர் அலுவலகத்துக்கு உள்நாட்டு விசாரணையாளர்கள் 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாக அரசு நேற்று அறிவித்தது. அரசின் இந்த அறிவிப்பு மக்களுடைய கருத்துக்களைப் புறமொதுக்கிய செயல் என்று, சமூக ஆர்வலர்களும் – காணாமற்போனோர் விடயங்களில் நெருக்கமாகப் பணியாற்றுபவர்களும் அதிர்ச்சியும் – கண்டனமும் வெளியிட்டனர்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் அலுவலகத்துக்கு முற்றிலும் உள்நாட்டு >> 23ஆம் பக்கம்

# மாணவர்கள் வெளியேற்றம்

### பேராதனைப் பல்கலை. விடுதியிலிருந்து இரவோடு இரவாக வீடு திரும்பினர்

கொழும்பு, ஓக. 25

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீட இரண்டாம் வருட சிங்கள மாணவர்கள் சிலரால் நடத்தப்பட்ட தாக்குதலால், அந்தப் பீடத்தின் முதலாம் ஆண்டு தமிழ் – முஸ்லிம் மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு வெளியேறினர்.

இரண்டாம் வருட மாணவர்களால் அழைப்பு விடுக்கப்பட்ட கூட்டத்திற்கு வருகைதராத காரணத்தால் அந்தப் பீடத்தின் முதலாம் வருட தமிழ் – முஸ்லிம் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர். தாக்குதலையடுத்து பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் கூட்டம் நடைபெற்றது.

இந்தநிலையில் இன்று தொடக்கம் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என துணைவேந்தர் தெரிவித்திருந்த நிலையில், >> 23ஆம் பக்கம்

முச்சந்தி முரளி



எல்லாம் காலம் கடத்தும் வேலைகள்தான் பாருங்கோ...

### பயங்கரவாதச் சட்டத்தை நீக்க முடிவு எதுவுமே எடுக்கவில்லை அரசு

கொழும்பு, ஓக. 25

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் அரசு இது வரை எந்தவொரு முடிவும் எடுக்க வில்லை.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வருமான இரா. சம்பந்தன் நாடாளுமன்றில் >> 23ஆம் பக்கம்

# நல்லூரில் கச்சானைத் தடைசெய்ய வேண்டும்

### அது அவசியம் என்கிறார் நல்லை ஆதீன முதல்வர்



யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லூர் கோயிலைச் சுற்றியுள்ள பொது வீதிகளில் – சுற்றாடலில் – கச்சான், சுண்டல் விற்பனையைத் தடை செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள். "கச்சானையும் சுண்டலையும் உண்டு விட்டு வீசும் குப்பைகள் ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதிகளை அலங்கோலப்படுத்துகின்றன" என்றார் அவர்.

'நல்லைக் குமரன்' மலர் வெளியீடு நாவலர் கலாசார மண்டத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து >> 23ஆம் பக்கம்

# ஜனாதிபதி மைத்திரி மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

### ஆஸி. ஊடகங்களில் நேற்று பரபரப்புச் செய்தி

கொழும்பு, ஓக. 25

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இலங்கை அதிகாரிகளுக்கு ஆஸ்திரேலிய நிறுவனமொன்று பெருந்தொகைப் பணத்தை இலஞ்சமாக வழங்கியதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டன.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சராக இருந்தவேளை, அந்த நிறுவனத்திடமிருந்து அரசியல் நன்கொடையைக் கோரியதாகவும் அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அந்த நாட்டின் சமஷ்டி பொலிஸார் இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளன. >> 23ஆம் பக்கம்

# யாழ். கோட்டையில் குண்டுகள் இரு நாள்களில் மீட்பு



யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ். கோட்டைக்குள் இருந்து கடந்த இரண்டு நாள்களில் கைக்குண்டு ஒன்றும் மோட்டார் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

'யாழ். கோட்டையின் சீரமைப்புப் >> 23ஆம் பக்கம்

# மாங்குளம் சந்தையில் பொருளாதார வலயம் அமைக்கத் தீர்மானம்

### பணிகளை ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25

மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ள பொருளாதார வலயம், அங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பொதுச் சந்தையை விரிவுபடுத்தியே நிர்மாணிக் கப்படவுள்ளது. அதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வடக்கு அதிகாரிகளுக்குப் பணித்தது கொழும்பு அரசு.

பொருளாதார வலய நிர்மாணம் தொடர்பில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டது. வடக்கில் பொருளாதார வலயம் வவுனியாவில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. வவுனியாவில் இடத்தை அடையாளப்படுத்துவதில் சர்ச்சை ஏற்பட்டிருந்தது. இதன் பின்னர் இரண்டு இடங்களில் பொருளாதார வலயம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, பொரு >> 24ஆம் பக்கம்

# விக்கியின் புறக்கணிப்பால் கொழும்பு அரசு அதிருப்தி

கொழும்பு, ஓக. 25

வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடத்தப்பட்ட முதலீட்டு மாநாட்டை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் புறக்கணித்தமைக்குக் கொழும்பு அரசு நேற்று அதிருப்தி வெளியிட்டது.

"அரசு எதைச் செய்தாலும் வடக்கு மாகாண முதல்வர் அதை விரும்புவதில்லை" – என்று சுற்றுலாத்துறை, கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க விமர்சித்தார்.

நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் >> 23ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ச்சிபூர்வ அரசியலையே நடத்துகிறோம்

## அதனால் தான் எமக்கு இந்த நிலை என்கிறார் வடக்கு முதலமைச்சர் விக்கி

யாழ்ப்பாணம், ஓக. 25

நாங்கள் உணர்ச்சிபூர்வமான அரசியலை நடத்தி வருகின்றோம். உணர்ச்சிபூர்வமான சூழலிலே எங்களுக்குள் நான் பெரிதா, நீ பெரிதா, யார் முதல் வந்தது, யார் பிறகு வந்தது என்று பலவிதமான கேள்விகள் எழலாம். இவ்வாறு கேள்விகள் எழுவதால்தான், மனிதாபிமானத்துடன் யார் யார் எங்கு இருக்கின்றார்கள், அவர்களுக்கு என்ன உரித்துக்கள், பன்னாட்டுச் சட்ட ரீதியாக எவற்றை அவை குறிக்கின்றன என்பதன் அடிப்படையில், எதை எதையெல்லாம் செய்ய வேண்டும் என்று யோசிக்காது சிந்திக்காது வெறுமனே உணர்ச்சிபூர்வமாக யோசிப்பதால்தான் எங்களுடைய அரசியல் இந்த நிலமைக்கு வந்திருக்கின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லைக்குமரன் மலர் வெளியீடு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

காந்தி இலங்கை வந்த காலத்திலே எங்களுடைய இளைஞர்கள் அவருடைய அகிம்சைப் போராட்டத்துக்காக எப்படியெல்லாம் மக்களிடம் இருந்து பணத்தைச் சேகரித்தார்களோ, அதே போன்று இன்றைய கால கட்டத்திலே நங்கள் அகிம்சையோடு சேர்ந்து ஒரு புதிய முறை சகாப்தத்தை உருவாக்க வேண்டிய கடப்பாட்டிலே நிற்கின்றோம். ஆயுதம் ஏந்தினோம் மௌனிக்கப்பட்டது. ஆனால் எங்களுடைய போராட்டங்கள் நிறுத்தப்படவில்லை. போராடிக் கொண்டே இருக்க வேண்டிய நிலை உள்ளது. ஆயுதங்கள் இன்றி எங்களுடைய தனித்துவமான மனித இயல்பை, மனித வளத்தை நாங்கள் பாவிக்க வேண்டும். எங்களுடைய அறிவை நாங்கள் பாவிக்க வேண்டும். அந்த நிலையிலே எங்களுடைய இளைஞர்கள் எதிர்காலத்தை வேறொரு விதமாக அர்ப்பணிப்புடன் ஆக்கிக் கொள்ள வேண்டும் அல்லது வகுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கொழும்பில் என்னைக் காணும் சிங்கள நண்பர்கள், நீங்கள் சற்றே விட்டுக் கொடுக்கலாமே, நீங்கள் ஏன் அடம்பிடிக்கின்றீர்கள், மற்றவர்கள் எல்லாம் கொஞ்சம் குறைத்துக் கொள்கின்றார்களே, நீங்கள் மட்டும் ஏன் இப்படிச் செய்கின்றீர்கள் என்று கேட்கின்றனர். நாங்கள் எங்கள் உரிமைகளை, எங்களுக்குத் தேவையானவற்றை உண்மையை எடுத்தியம்புகின்றோம். நீங்கள் அதனைப் பிழையாகப் புரிந்து கொண்டால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

கிழக்கு மாகாண ஆளுநருடன் விமானத்தில் வந்தேன். அவர் என்னிடம், வடக்கு கிழக்கு இணைக்கவேண்டும் என்று கேட்கின்றீர்கள். அது எப்படிச் சரியாகும். சிங்கள மக்கள் காலம் காலமாக இருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன என்பது எமது மக்களின் எண்ணம். வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்று குறிப்பிடுவது பிழை.

காலாதிகாலமாக தமிழ் மொழி தான் வடக்கு-கிழக்கில் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்று நான் குறிப்பிட்டதற்கு, இல்லையே பௌத்த மதத்தின் சின்னங்கள் இருக்கின்றனவே என்று ஆளுநர் ஒஸ்ரின் குறிப்பிட்டார். இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள். அதனாலேயே பௌத்த சின்னங்கள் இருக்கின்றன. அது சிங்கள மக்கள் வாழ்ந்த இடம் என்று எப்படி நீங்கள் கூற முடியும் என்று கேட்டதற்குப் பதில் வழங்கவில்லை.

சரித்திர ரீதியாக பிழையான எண்ணங்களை, பிழையான தகவல்களைச் சேகரித்து எங்களுடைய மக்களிடையே சில பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டு இருகின்றன. இதற்கு ஆளுநர் உங்களுடைய எண்ணங்கள், சிந்தனைகள் வேறு விதமாக இருக்கின்றது. எங்களுடைய எண்ணங்கள், சிந்தனைகள் வேறுவிதமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டிருந்தார்.

இது சரித்திர சம்பந்தமான விடயம் தானே. அகவே சரித்திர சம்பந்தமுடைய விடயத்தை நாங்கள் உலகரீதியான சரித்திர ஆசிரியர்களை அழைத்து நான் சொல்வது சரியா அல்லது நீங்கள் சொல்வது சரியா என்பதை ஆராய்ந்து பார்ப்போம் என்று சொன்னேன். இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா என்று கேட்டார். இவ்வாறு நடந்து எங்களுடைய மக்களுக்கு உண்மை புலப்பட்டால் தான் இந்தவிதமான பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்பதை நான் அவருக்குக் கூறினேன் - என்றார் முதலமைச்சர்.

(கு-5-ரி7)

# ராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த காணி விடுவிப்பு

## வவுனியா நகர சபைக்குச் சொந்தமானது



வவுனியா, ஓக 25

வவுனியா குடியிருப்புப் பகுதியில் கடந்த 26 வருடங்களாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த நகரசபைக்குச் சொந்தமான காணி, நேற்று உத்தியோகபூர்வமாக நகர சபையினரிடம் கையளிக்கப்பட்டது.

வவுனியா குடியிருப்பில் நகர சபைக்குச் சொந்தமான கட்டடத் தொகுதியில் கடந்த 26 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த இராணுவ முகாம் மூடப்பட்டுக் கட்டடம் நேற்று மாலை உத்தியோகபூர்வமாக வவுனியா மாவட்டச் செயலர் எம்.பி. றோகண புஸ்பகுமாரவிடம் கையளிக்கப்பட்டது.

குடியிருப்பு இராணுவ முகாம் காணியானது போர்க் காலங்களில் சோதனைச் சாவடியாகச் செயற்பட்டது. இராணுவ முகாமைச் சூழ கோவில்கள், பாடசாலை, பொது மக்களின் குடியிருப்பு, சிறுவர் பூங்கா மற்றும் வவுனியா பொது வைத்தியசாலை போன்றன அமைந்திருந்தமையால் இதனை விடுவிக்குமாறு மக்கள் பலமுறை கோரிக்கைகள் விடுத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே குறித்த பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வைப் பதிவு செய்வதற்குச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இந்த நிகழ்விற்குச் சென்றிருந்த வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசாவுடன் தொடர்பு கொண்டு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி பெற்றுத் தருமாறு கோரிய போது, விசேட அதிரடிப் படையின் அதிகாரியுடன் தொடர்பு கொண்ட பின்னர் அனுமதி இல்லை என்ற பதிலே எனக்கு அனுப்பப்பட்டது என்று தெரிவித்தார்.

காணி கையளிக்கும் நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலாளர், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(கு-21)

# மூன்று பொலிஸ் நிலையங்கள் முல்லைத்தீவில் இன்று திறப்பு

முல்லைத்தீவு, ஓக 25

முல்லைத்தீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 3 பொலிஸ் நிலையங்கள் இன்று வியாழக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளன.

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, முள்ளியவளைப் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட 3 பொலிஸ் நிலையங்களே இன்று முற்பகல் 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளன.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் விருந்தினராகச் சட்டம், சமாதானம் மற்றும் தென் மாகாண அபிவிருத்தி அமைச்சர், சாகல ரத்நாயக்க கலந்து கொள்ளவுள்ளார் என்று ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசந்த ரட்னசிங்க தெரிவித்தார்.

(கு-102-500)

# யாழ்ப்பாணம் – கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டம் சீன நிறுவனத்திடம்

## கைச்சாத்தானது ஒப்பந்தம்




யாழ்ப்பாணம் – கிளிநொச்சி குடி தண்ணீர் விநி யோகத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான ஒப்பந்தம், சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களில் திட்டம் நடை முறைப்படுத்தி முடிக்கப்படவுள்ளது. சீன இயந்திர பொறியியல் கூட் டுத்தாபனம் மற்றும், பிஸ்னஸ் புறமோட்டர்ஸ் அண்ட் பார்ணேர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனங்களுக்கு, அரசினால் இந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி தேசிய நீர் வழங்கல் வடி காலமைப்புச் சபை தலைமையகத்தில் இது கைச்சாத்திடப்பட்டது. இந்தத் திட்டமானது எமது நாட்டுக்குத் தேசிய அடிப்படைத் தேவையாக உள்ளதோடு இதன் மூலம் சுமார் 3 லட்சம் மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் பிஸ்னஸ் புறமோட்டர்ஸ் நிறுவனங்கள் இந்தத் திட்டத்தை விரைவாகவும் நிலையானதாகவும் பூர்த்தி செய்வார்கள் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைத் தலைவர் [illegible] அன்சார் தெரிவித்தார். "இந்தக் கூட்டு முயற்சியானது எமது நிறுவனத்துக்குப் பெரும் மகிழ்ச்சியையும் கௌரவத்தையும் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தை எமது நிறுவனத்துக்கு வழங்கியமை குறித்து இலங்கை அரசுக்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்" என்று சீன இயந்திர பொறியியல் கூட்டுத் தாபனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் வாங் யி குறிப்பிட்டார். இரணைமடுக் குடிதண்ணீர் திட்டமானது ஒரு தேசியத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இலங்கை அரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. திட்டத்தை நடை முறைப் படுத்துவதற்கு இரண்டு வருடங்கள் எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரின் உறவுகளைஒன்றிணைத்து புதிய அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 25

காணாமற்போனோரின் உறவுகளை இணைத்து அமைப்பாக உருவாக்கும் நோக்கிலான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் யாழ். நகரில் நடைபெற்றது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். காணாமற்போனோரின் உறவுகளில் சிலரும் பங்குபற்றினர்.

காணாமற்போனோர் தொடர்பில் பிரதேச ரீதியாக தகவல் திரட்டப்படவுள்ளது. அதனூடாக வடக்கு மாகாணத்திற்குரிய தகவல் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. இதன் மூலம் மாகாண ரீதியில் காணாமற்போனோரை ஒன்றிணைத்து அமைப்பு உருவாக்கப்படவுள்ளது என கலந்துரையாடலை ஏற்பாடு செய்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த மாதம் 30 ஆம் திகதி பன்னாட்டு காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டு கொழும்பில் பேராளர் மாநாடு இடம்பெறுகிறது. இதில் வடக்கிலிருந்து காணாமற்போனோரின் உறவுகளின் குடும்பங்கள் அழைத்துச் செல்லப்படவுள் ளன. இதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

(வ-5-101)

# புதிய அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக. 25

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் புதிய அதிபராக ரி.வரதன் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டார்.

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அதிபர் நேற்றுடன் ஓய்வு பெற்றுச் சென்றார். இதனால் புதிய அதிபருக்கான நேர்முகத் தேர்வு அண்மையில் இடம்பெற்றது. குறித்த நேர்முகத்தேர்வின் அடிப்படையில் கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முரசு மோட்டை முருகானந்தாக் கல்லூரியின் அதிபர் ரி.வரதன் தேர்வாகினார். இந்த நிலையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் புதிய அதிபராக வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் ரி.வரதனுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

(வ-105)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2794 திகதி 24.08.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
13 36 60 63 K
போனஸ் இல. 68
சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 13,754,975/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
2016.08.27 ஆம் திகதி சனிக்கிழமை

Galaxy Star
வெற்றி வாரம் 086 திகதி 24.08.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
11 04 27 55 56
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,994,960/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது அழைப்பு 1919

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹா

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



சின்னத்துரை சுந்தரலிங்கம்

(சங்கானை நிகரை அம்பாள் சனசமூக நிலைய தலைவரும் சங்கானை J/179 கிராமசேவகர் பிரிவுமுதியோர் சங்க தலைவரும் சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவரும்)

இன்று (25.08.2016) வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கின்றார். அவரது சேவைகள் மேன்மேலும் வளர எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாகலிங்கம் சுவாமிகள் வீதி,
சங்கானை.

செ.மதனகீதன்

## தொண்டைமானாறு வெளிக்கள நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் -2016

மேற்படி வருடாந்த பொதுக்கூட்டம் 12.09.2016 இல் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**இடம்:**-தொண்டைமானாற்றில் அமைந்துள்ள வெளிக்கள நிலைய அலுவலகம்

**காலம்:**-12.09.2016 திங்கட்கிழமை காலை 9.30 மணி

செயலாளர்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்,
வைத்தீஸ்வரா கல்லூரி , யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹா

## உளமார பாராட்டுகின்றோம்



சின்னத்துரை சுந்தரலிங்கம்

இன்று (25.08.2016) வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றநீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கின்றார். அவரது சேவைகள் தொடரவும் இன்னும் பல்லாண்டு சீரும் சிறப்புடனும் வாழ நிகரை ஞான வைரவப் பெருமான் அருள் புரிய வேண்டி வாழ்த்துகின்றோம்.

நிகரை வீதி,
சங்கானை.

வாழ்த்துவோர்
ஜெயபாலன் குடும்பம்
பேரப்பிள்ளைகள்: காதேவ், காமேஸ்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்கானை நிகரையம்பதி வாழ் பிரபல சமூகசேவகர் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய

சின்னத்துரை சுந்தரலிங்கம்

ஐயா அவர்கள் இன்று (25.08.2016) வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கின்றார். அவரது சேவைகள் மேன்மேலும் வளர எமது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நாகலிங்கம் சுவாமிகள் வீதி,
சங்கானை.

ந. இராசதுரை குடும்பம்
குலசிங்கம் குடும்பம்.

# தனியார் பஸ் வேட்டையில் யாழ்ப்பாணப் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக. 25

வழித்தட அனுமதிப்பத்திரமின்றி யாழ்ப்பாணம் – கொழும்புக்கிடையில் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டாவது அதிசொகுசு பஸ்ஸும் நேற்றுப் பிடிபட்டது.

கடந்த வாரம் அதி சொகுசு பஸ் ஒன்று இதே குற்றச்சாட்டில் யாழ்ப்பாண போக்குவரத்து பொலிஸாரினால் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது. சாரதியை நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். அவருக்குப் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. பதில் நீதிவான் சறோஜினி இளங்கோவன் இவ்வாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில் இதே குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் – கொழும்பு பணியில் ஈடுபடும் மற்றொரு அதிசொகுசு பஸ்ஸும் நேற்றிரவு யாழ்.பொலிஸாரால் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது.

அதில் பயணித்த பயணிகள் தாம் பயணிக்க வேண்டும் பஸ்ஸை விடுமாறு பொலிஸாரிடம் கோரினர். எனினும் வழி அனுமதிப்பத்திரமின்றிப் பயணிப்பதால் எக்காரணம் கொண்டும் பஸ்ஸை விட முடியாது என்று உறுதியாகத் தெரிவித்து விட்டனர்.

(வ-4,103)

## CNCI Achiever Awards - 2016
For Industrial Excellence




இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனத்தினால் 18.08.2016 அன்று கொழும்பு கலதாரி ஹொட்டேலில் நடத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய கைத்தொழில் சாதனையாளர்களிற்கான விருது வழங்கும் விழாவில்

சிறந்த தொழிலதிபர் விருதினையும்

இலங்கை தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையினால் 04.12.2015 அன்று நடத்தப்பட்ட வட மாகாண தொழில் முயற்சியாளர்களிற்கான விருது வழங்கும் விழாவில் உற்பத்தித் தொழிற்றுறைக்கான

சிறந்த தொழில் முயற்சியாளர் விருதினையும்

நாம் பெற்றுக் கொள்வதற்கு எம்மோடு தோளோடு தோள் நின்ற எமது பாசமிகு ஊழியர்களிற்கும் எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கும் எமக்கு என்றும் அனுசரணையாக நிற்கும் கற்கோவளம் வாழ் மக்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

தலைமை நிறைவேற்று அதிகாரி
ஜெயந்தா கைத்தொழிற்சாலை
ஜெயந்தா கைத்தொழில் பூங்கா (தனி) வரை,கற்கோவளம், பருத்தித்துறை.

## இன்று(25.08.2016) வியாழக்கிழமை இந்தியா, மும்பாயில் நடக்க இருக்கும் சீரடி சாயி பாபாவின் தீர்த்தோற்சவம்



ஸ்ரீ சாயி நாதரின் திரு மஞ்சன தீர்த்த உற்சவமும் ஸ்ரீ தத்தாரேயரின் (புதிய எழுந்தருளி விக்கிரகம்) கும்பாபிஷேகமும் பாரதத்தின் கோதாவரி நதிக்கரையில் காலை 9.00மணிக்கு ஆரம்பமாகி மதியம் 11.45 மணிவரை நடைபெறவுள்ளது. மேற்குறிப்பிட்டட நேரத்தில் ,யாழ் நாவலர் வீதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ சர்வ மங்கள சாயி நாதருக்கு விஷேட அபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து வழமைபோல் மதிய ஆராத்தியும் மாலை ஆராத்தியும் நடைபெறும். ஸ்ரீ சாயி பத்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஸ்ரீ தத்தாரேய சொருபரினதும், ஸ்ரீ சீரடி சாயிநாதரினதும் திருவருளைப் பெற்று உய்யுமாறு வேண்டி நிற்கிறோம்.

ஓம் சாய்ராம்.

சீரடி சாயி மந்திர்,
314 ,நாவலர் வீதி,
நல்லூர் ,யாழ்ப்பாணம்
தொ.இல.0777222568 ,0776044218.

தேவாலயத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்பட்ட வர்த்தகரை விடுவிக்க ரூ.2 கோடி கேட்கும் கடத்தல்காரர்கள்

கொழும்பு, ஓக. 25

பம்பலப்பிட்டியில் கடத்தப்பட்ட வர்த்தகர் மொஹமட் சகீமை விடுவிக்க இரண்டு கோடி ரூபாவைக் கப்பமாகக் கேட்டுள்ளனர் கடத்தல்காரர்கள்.

மொஹமட் சகீமைக் கடத்தியவர்கள், அவரது தந்தையைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கப்பம் கேட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

'உங்கள் மகன் எங்களிடம் பாதுகாப்பாக இருக்கின்றார். அவரை விடுவிக்க வேண்டுமாயின் இரண்டு கோடி ரூபா செலுத்த வேண்டும்' என்று தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்கள் தெரிவித்தனர் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்ட வர்த்தகர் தொடர்பில் இதுவரை அவரிடம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ள 15 வர்த்தகர்களிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்துகின்றனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள், வழக்குகள் குறித்தும் இந்த விசாரணையின் போது கவனம் செலுத்தப்பட்டது.

வர்த்தகருடன், முரண்பட்டவர்களுடனும் விசாரணை நடத்தப்படவுள்ளது. கடத்தப்பட்ட இடத்தில் காணப்படும் சி.சி.ரி.வி கமராக்களின் காட்சிகள் ஆராயப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)




# இலங்கையின் தேர்தல் நடைமுறை நியாயமானதாக அமையவில்லை

## சுயாதீனமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 25

இலங்கையின் தேர்தல் நடைமுறைகள் நியாயமானதாக அமையவில்லை.

இவ்வாறு சுயாதீனமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பு சுட்டிக்காட்டியது.

நிதி அரசியல், பலவீனமான அரசியல் கட்சிகள் மற்றும் வன்முறைகள் ஆசிய நாடுகளின் தேர்தல்களின்போது தாக்கம் செலுத்துகின்றன என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டமாசோ ஜி மக்புவல் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை மற்றும் நேபாளத்தில் வேட்பாளர்கள் தங்களது வருடாந்த சம்பளத்தின் 15 மடங்கைத் தேர்தலுக்காகச் செலவிடுகின் றனர். இந்த மோசமான முன்னுதாரணம் காரணமாகத் தகுதியானவர்கள் தேர்தலில் போட்டியிட விரும்புவதில்லை. இலங்கை உள்ளிட்ட நாடுகளில் தேர்தலின் போது வேட்பாளர் எவ்வளவு நிதியை செலவிட முடியும் என்ற வரையறையை ஏற்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் காணப்படவில்லை. இதனால் தேர்தல்கள் நியாயமான முறையில் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

இலங்கை, பிலிப்பைன்ஸ், கம்போடியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் அரசியல் கட்சிகளின் பலவீனத்தை வெளிப்படையாகவே காணக்கூடியதாக இருக்கின்றது.

பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட சில நாடுகளில் உள்ள அரசியல்வாதிகள் தங்களது உடைகளை மாற்றுவது போல கட்சிகளை மாற்றுகின்றனர். ஆசிய நாடுகள் இந்தியாவை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நாட்டில் கட்சி மாறும் ஒருவர் தனது நாடாளுமன்ற ஆசனத்தை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனை ஏனைய நாடுகளும் பின்பற்றவேண்டும் – என்றார். (ற-5)

# ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் சரணவுக்கு எதிராக 9 வழக்குகள்

கொழும்பு, ஓக. 25

முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன மீது ஊழல் மோசடி தொடர்பில் 9 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பில் டிசெம்பரில் விசாரணை நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக சரண குணவர்தன் இருந்த போது மேற்கொண்ட முறைகேடுகள் தொடர்பிலேயே 9 வழக்குகளும் இலஞ்ச ஊழல் பிரிவினரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த 9 வழக்குகள் தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என, கொழும்பு மேலதிக நீதிவான் அருனி ஆட்டிகல அறிவித்தார். இலஞ்சச் சட்டத்தின் 70 ஆவது பிரிவின் கீழ் இவர் மீது இலஞ்ச ஊழல் பிரிவு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## கேள்வி கோரல்

பூநகரி வாடியடியில் அமைக்கப்படும் புதிய எரிபொருள் நிலையத்திற்கான கட்டட, தளவேலைக்குரிய கீழ் காண் வேலைத்திட்டங்களுக்கான கேள்வி கோரல்

1. மேசன் கூலி - 1 நாள் கூலி எவ்வளவு. உணவு அடங்கலாக
2. கூலியாள் - 1 நாள் கூலி எவ்வளவு. உணவு அடங்கலாக
3. சுவர் பூச்சு ஸ்குவயருக்காகிய கூலி எவ்வளவு
4. J.C.P வேலை ஒரு மணித்தியாலத்திற்காகிய கூலி எவ்வளவு
5. தள வேலைக்கான கிரவல் 3 கியூப் கொண்ட 1 டிப்பர் லோட் எவ்வளவு
6. கட்டட பாவனைக்கான தண்ணீர் பவுசர் மூலம் வழங்கல் 1 லீற்றருக்கு எவ்வளவு

* கேள்வி பத்திரம் ஏற்றுக்கொள்ளும் நடைமுறை 24.08.2016 தொடக்கம் 31.08.2016 வரை பொறுப்பேற்றுக்கொள்ளப்படும்.
* விண்ணப்பங்கள் யாவும் மூடி ஒட்டப்பட்ட தபால் உறையில் என்ன வேலைக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிட்டு கேள்வி கோரல் என மேற்பக்கத்தில் குறிப்பிட்டு **தலைவர், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி என்னும்** முகவரிக்கு 31.08.2016 இற்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
* மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**து. இரத்தினசிங்கம்**
**தலைவர்,**
**077 246 3027**

**ம.ஜெயகுமார்**
**பொது முகாமையாளர்**
**077 816 3029**

(சி.25024 (13)

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்னெலிகொடவுக்கு புலிகளுடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை

## குற்றப் புலனாய்வுத்துறை திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 25
கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு விடுதலைப் புலிகளுடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை. விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்தது.
இவ்வாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.
ஹோமகம நீதிமன்றத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
"பிரகீத் எக்னெலிகொடவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கவில்லை. புலிகளிடம் இருந்து நிதியுதவி பெறவில்லை. தீவிரவாதச் செயற்பாடுகள் தொடர்பாக அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை காணப்படவில்லை. விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டது" என்று குற்றப் புலனாய்வுத்துறை சார்பில் முன்னிலையான அதிகாரிகள் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.
பிரதிப் பொலிஸ் மா அதிபர், இராணுவ, கடற்படை, விமானப் படைத் தளபதிகளிடம் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் மூலம் இது தெரிய வந்தது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.
எந்த தீவிரவாதச் செயற்பாடுகளிலும் எக்னெலிகொட தொடர்புபட்டார் என்று பதிவுகள் எதுவும் இருக்கவில்லை என்று முப்படைகளின் தளபதிகள் உறுதியாகத் தெரிவித்தனர் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டனர்.
வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள எட்டு இராணுவப் புலனாய்வு அதிகாரிகளையும், செப்ரெம்பர் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹோமகம நீதிவான் உத்தரவிட்டார்.
(ற-5)

# 'தமிழ் அமுதம்' நிகழ்வுகள்

தென்மராட்சி, ஓக. 25
தென்மராட்சி இலக்கிய அணியின் 'தமிழ் அமுதம்' நிகழ்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 5 மணிக்குச் சங்கத்தானையில் உள்ள தமிழ்க் கோட்ட மண்டபத்தில் இடம்பெறும்.
யாழ். இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில், புரவலர் கௌரவம், எழிலுரை, கௌரவ உரை, விவாத அரங்கு ஆகியவை இடம்பெறவுள்ளன.
புரவலர் கௌரவ நிகழ்வில் மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளையின் ஓய்வுநிலை முகாமையாளர் க.சண்முகலிங்கம், சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் இ.ரவீந்திரன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.
கௌரவ உரையை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டுவும், எழிலுரையை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் தி.வேல்நம்பி 'என்றும் வழிகாட்டும் இதிகாசங்கள்' என்னும் தலைப்பிலும் நிகழ்த்துவர்.
'மகா பாரத காப்பியத்தில் கற்றோர் மனதை பெரிதும் கவர்ந்து நிற்பது' என்னும் விவாத அரங்கில் 'சகுனியின் சூழ்ச்சியே' என்னும் தலைப்பில் எஸ்.சிவஸ்கந்த சிறீயும், 'கர்ணனின் கொடையே' என்னும் தலைப்பில் லோ.துசிகரனும், 'தர்மனின் பொறுமையே' என்னும் தலைப்பில் த.சுதனும், 'கிருஸ்ணனின் தந்திரமே' என்னும் தலைப்பில் அ.வாசுதேவாவும் கருத்துக்களை முன்வைக்கவுள்ளனர். அரங்குக்கு நடுவராக கவிஞர் த.நாகேஸ்வரன் பங்கேற்பார்.
(ற-5-9)

### சுகாதார விதிகளை மீறிய உணவகங்கள் சீல் வைக்கப்பட்டன

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாது இயங்கி வந்த மூன்று உணவகங்களை மூடி, அரக்கு முத்திரையிடுமாறு (சீல்) சுகாதாரப்பரிசோதகர்களுக்கு உத்தரவிட்ட நீதிவான் 3 உணவக உரிமையாளர்களுக்கும் ஒரு இலட்சத்து 15ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.
வவுனியா மாவட்டத்தில் பட்டாணிச்சூர் பகுதியில் இயங்கும் உணவகங்களைச் சோதனை செய்யச் சென்ற வவுனியா மாவட்ட சுகாதாரப் பரிசோதகர் மூன்று உணவகங்கள் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்குவதைக் கண்டுபிடித்தார்.
மூன்று உணவக உரிமையாளர்களுக்கும் எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் நீதிவான் எவ். லெனின் குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மூன்று உணவக உரிமையாளர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து மேற்கண்டவாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-115)

# மக்கள் கருத்து நிராகரிப்பு எனும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது

## அமைச்சர் ராஜித கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 25
பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் நிராகரிக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. பொறிமுறைகள் சரியான பலமடையும் வரையில் எவரும் அவசரப்பட வேண்டாம். இந்த ஆட்சியில் உண்மைகள் கண்டறியப்படும். இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
காணாமற்போனோர் அலுவலகம் நிறுவும் சட்டத்தில் மக்களின் கருத்துக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று நல்லிணக்கச் செயலணி தனது அறிக்கையில் குற்றஞ் சுமத்தியது. இது தொடர்பில் அரசின் நிலைப்பாட்டைத் தெரிவித்தபோதே அமைச்சர் ராஜித இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:
நாம் உண்மைகளைக் கண்டறியும் பொறிமுறைகளைப் பலமாக முன்னெடுத்து வருகின்றோம். மனித உரிமைகளை பலப்படுத்துவது மிகமுக்கியமான காரணியாகும். அதில் புதிய அரசமைப்பு உருவாக்கத்தையும் தாண்டி, காணாமற்போனோர் தொடர்பில் ஆராயும் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. காணாமற்போனோர் தொடர்பில் ஆராயும் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் செயற்பாடுகள் இன்னும் முழுமைப்படுத்தப்படவில்லை.
இந்த அமைப்பு எவ்வாறு செயற்படும், அதன் வரைவுகள் மற்றும் அங்கத்தவர்கள் தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் ஒன்று எடுக்கப்படவில்லை. அவ்வாறு இருக்கையில் இதன் செயற்பாடுகள் தொடர்பிலான விமர்சனங்களை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ற-5)

# தொழிலின்போது இறந்தோரின் குடும்பங்களுக்கு இழப்பீடு

## ரூபா 1 லட்சம் நிரந்தர வைப்பிலிடப்பட்டுக் காசோலைகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 25
கடற்றொழில் நடவடிக்கையில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா நிலையான வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 குடும்பங்களுக்கும், மன்னாரைச் சேர்ந்த 6 குடும்பங்களுக்கும், முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு குடும்பத்துக்கும் அதற்கான காசோலை நேற்று வழங்கப்பட்டது. யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது.
வடக்கு மாகாண அரசு நிறுவப்பட்ட பின்னர் கடற்றொழில் நடவடிக்கையின்போது உயிரிழந்த குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும் என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சால் அறிவிக்கப்பட்டது. அதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது.
29 குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டு - பணம் வைப்பிலிடப்பட்டு - காசோலைகள் தற்போது வழங்கப்பட்டன.



மாகாண கூட்டுறவு ஆணையாளர் காசோலை வழங்குகிறார்.

வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நிகழ்வில் தெரிவித்ததாவது:
பனையில் இருந்து தொழிலின் போது விழுந்து உயிரிழந்தவர்களுக்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடற்றொழிலாளர்களுக்கும் தொழில் நடவடிக்கையின்போது உயிரிழந்தவர்களுக்கு இவ்வாறான திட்டம் ஆரம்பிக்க வேண்டும் என்று மே தினக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த விடயத்தை மாகாண சபையில் தெரியப்படுத்தி அனுமதி பெறப்பட்டது. இலங்கையின் பொருளாதாரத்தில் போருக்கு முன்னர், காத்திரமான பங்களிப்பை வடக்கின் மீன்பிடித்துறை வழங்கியது. போர் அதனை நிர்மூலமாக்கியது. கடலுக்குள் கடல் வலயச் சட்டத்தைக் கொண்டுவந்தனர். போரின் பின்னரும் கடற்றொழிலாளர்களுக்கு தென்னிலங்கையிலிருந்து வருகின்ற படகுகள் பாதிப்பைக் கொடுக்கின்றன. மயிலிட்டி என்பது எங்களுடைய இயற்கையான துறைமுகம். எங்களிடம் தருவதற்கு அரசு தயாரில்லை. பாதுகாப்புக்காக வைத்திருப்பதாகத் தெரிவிக்கின்றனர். சலாவ ஆயுதக் கிடங்கில் வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இழப்பீடு போதாது என்று மீளவும் கோரியவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் இழப்பீட்டுக்கோரிக்கை விடுத்தால் அரசு அதனைக் கண்டுகொள்வதில்லை.
மயிலிட்டியில் ஆயுதக் கிடங்கு உள்ளது. இங்குள்ள வெடிபொருள்கள் இரவோடு இரவாக உலங்கு வானூர்தி மூலம் அண்மையில் எடுத்துச் செல்லப்படுகின்றன. அவை திருகோணமலை கடலில் கொட்டப்படுகின்றன என்று இராணுவ அதிகாரிகள் மூலமாகவும், வேறு தகவல்கள் மூலமாகவும் அறிந்தோம். அதனால் கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை காணப்படுகின்றது - என்றார். (ற-5-ரி3)

**உடன் தேவை**
நல்லூரில் இயங்கும் உணவகம் ஒன்றுக்கு ஓரளவு சமையல் தெரிந்த வேலையாள்கள் தேவை. (ஆண், பெண்) நல்லூர் உற்சவகாலத்திற்குள் உடன் தேவை. (J 4039)(12.18)
075 098 3921

**காணியும் மண்டபமும் விற்பனைக்கு**
உரும்பிராய் சந்திக்கு அண்மையில் 3 ¾ பரப்பில் அமைந்துள்ள மண்டபம் உடன் விற்பனைக்கு உண்டு. (J 3897)(12.18)
077 412 2022

**கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
ஊர்க்கோழி, வான் கோழி, பன்றம் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு (J 3897)(12.18)
077 245 3673

**aat college**
aat கற்கைக்கான புதிய பிரிவுகள்
04.09.2016 ஆரம்பம் (சனி, ஞாயிறு)
நெல்லியடி- 3.30 pm
புதுக்குடியிருப்பு- 09.00 am (J 3897)(12.18)
077 078 2326

**பெயர்மாற்றம்**
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயைச் சேர்ந்த **வைத்திலிங்கம் கமலாதேவி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **வைத்திலிங்கம் கலாதேவி** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(J 4039)(12.18) **வைத்திலிங்கம் கலாதேவி**

**காணி விற்பனைக்கு**
நீர்வேலியில் 4 பரப்புத் தோட்டக் காணியும் (கமுகுகளுடன்), சரசாலை மத்தியில் 10 பரப்புக் காணியும் உடனடியாக விற்பனைக்குள்ளன.
077 592 6028, 077 232 5140

**கடை/ காணி விற்பனைக்கு உண்டு**
விசாலமான வீடு, நான்கு கடைகள் விற்பனைக்குண்டு. கட்டாப்பாலைவீதி, மானிப்பாய். (பிரபல பாடசாலைகளுக்கு அருகில்)
5 பரப்பு 9 குளி வீட்டுடன், மாதகல் வீதி பண்டத்தரிப்பு சந்திக்கு அருகில் 12 ½ பரப்பு கடையுடன் விற்பனைக்கு உண்டு. விலைகள் பேசி முடிவெடுக்கப்படும். (V893)(12.18)
077 611 0049, 076 770 1703

**பெயர்மாற்றம்**
நாவற்குழி தெற்கு, கைதடியைச் சேர்ந்த **கண்மணி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **இராசமலர்** என பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(J 4039)(12.18) **அ. இராசமலர்**

**பணிநிலை வேண்டுகை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு
01. Electrician - Rs.18000/=
02. Showroom Marketing Sales & Executives (Girls)- Rs.18000/=
03. Showroom boys -Rs.18000/=
04 Heavy Vehicle Drivers - Rs 25000/=
➤ 25 Days Work for Month
➤ Time 9.00 AM 8.00 PM
ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
கிங்ஸ் லைக்ரோனிக்ஸ், வேம்படி சந்தி அருகில்
12, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 454 6699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றில் ஆடை கிழித்து சண்டையிட்ட பெண்கள்!

கொழும்பு - புதுக்கடை நீதிவான் மன்றத்தில் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு சண்டையிட்ட இரண்டு பெண்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.சாந்தமாலி பெரேரா (வயது-28) மற்றும் சுதாச்சாரி மாலினி (வயது-42) ஆகியோரே அவர்கள். இருவேறு குற்றச்சாட்டுக்களில் மாலினியின் கணவரும் அவரது மகளும் மறியலில் உள்ளனர். அவர் களுக்காகப் பிணைகோரிய மனு விசாரணையின்போது, சாந்தமாலி, "திருடியின் தாய் வந்துள்ளாள்" என்று கூச்சலிட்டார். ஆத்திரமடைந்த மாலினி நீதிமன்றத்துக்குள் அவருடன் முரண்பட்டதையடுத்து, இருவரும் ஆடையைக் கிழித்து, அடித்துக் கொண்டனர். இதனால் நீதிமன்றைக் குழப்பியமைக்காக மறியலில் வைக்கப்பட்டனர். (ற-5)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தையா
சுவாமிநாதன்

தோற்றம் 16.12.1929
மறைவு 01.09.2010

திதி: அட்டமி (ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி)
அமைதிக்கு இருப்பிடமாய் வாழ்ந்து
எம்மைப் பாசமுடன் வளர்த்து
பண்புடன் வாழவைத்த எங்கள்
அப்பாவை ஆண்டுகள் ஆறு என்ன
நூறு சென்றாலும்
எங்கள் மனதில் நிலையாக
இருப்பீர்கள் அப்பா

உசன்,
மிருசுவில்.
(J 4018)
(14,17,18)
உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி



சரவணை
சேவாமன்றத்தின் தொடக்க
உறுப்பினரும்
சரவணையைப்
பிறப்பிடமாகவும்
சரவணை நாகேஸ்வரி
மகாவித்தியாலய ஆரம்ப
கால மாணவரும் அதன்
ஆசிரியராகவும் அதன்
அதிபராகவும் இருந்து
ஒய்வு பெற்ற

**பண்டிதர் சங்கரப்பிள்ளை குமரேசையா**

அவர்கள் கனடாவில் இறைவனடி சேர்ந்தார். அவர்களது பிரிவால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களது ஆத்மா சாந்தியடைய கதிர்வேலாயுத சுவாமியைப் பிரார்த்திக்கின்றோம்.

சரவணை சேவாமன்றம்.

## 4 ஆம் ஆண்டு நினைவுகளில்

மண்ணில் 10 . 02 . 1950



விண்ணில் 25 . 08 . 2012

**அமரர் இந்திரா சபாரத்தினம்**

நான்கு வருடங்கள்..... ஆயினும் அன்பு அக்கா !
உங்கள் நினைவுகள் பத்திரமாய் பக்குவமாய்
உள்ளத்தில் நிறைந்திருக்கும் உயிர்ப்புடன் தினம் இருக்கும்
காலச் சக்கரத்தின் கனவேக ஓட்டத்தில்
நினைவுகள் பின் தங்கிவிடும் தொலைவில் மறைந்துவிடும்
ஆனாலும் உங்கள் நினைவு புத்தம் புதிதாக
எப்போதும் உடனிருக்கும் எப்படித்தான் எங்கள் அக்கா ? !
காலம் தோற்று விட்ட அதிசயமான அற்புதம் நீ !
நாளும் எம்மோடு சேர்ந்திருக்கும் தெய்வம் நீ !

உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

" திலகவாசம் "
தபாலக வீதி, சாவகச்சேரி.
இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

# அநீதிகளை தமிழ் மக்கள் எதிர்த்தால் இனவாதம் பூசுகின்றனர் தென்னிலங்கை அரசியல்வாதிகள்

## *நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் சரவணபவன் எம்.பி.*

யாழ்ப்பாணம், ஒக. 25

நல்லிணக்கம் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. அநீதிகளைத் தமிழ் மக்கள் எதிர்க்கும்போது, நாம் இனவாதம் பேசுகின்றோம் என்ற தோற்றப்பாடு பன்னாட்டுச் சமூகத்திடம் முன் வைக்கப்படுகின்றது. அப்படியான நடவடிக்கைகள் நல்லிணக்கத்துக்கு உதவப்போவதில்லை.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விலங்குத் தீனி தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

மனிதர்களின் பாதுகாப்பைப் புறமொதுக்கிவிட்டு மிருகங்களின் பாதுகாப்புப் பற்றிப் பேசுவது அபத்தமானதெனவே நான் நம்புகின் றேன். மனித உயிர்கள் மீதும், மனித உணர்வுகள் தொடர்பாகவும் அக்கறை காட்டாத போக்கானது, தமிழ் மக்கள்மீதும் அவர்கள் தேவைகள்மீதும் காட்டப்படும் அலட்சியப் போக்கின் தொடர்ச்சியோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் புத்தர் சிலைகளும் விகாரைகளும் அமைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்கள் பெரும் எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளனர். வடக்கு மாகாண ஆளுநர் உட்படப் பல அரசியல்வாதிகள் இந்த எதிர்ப்புக்கள் இனவாத அடிப்படையிலானவை எனக் கண்டனம் செய்து வருகின்றனர்.

ஓர் இடத்தில் மக்கள் வழிபாட்டுக்கென ஆலயம் அமைக்கப்பட்டால் அது நியாயமா னது. அதை எதிர்ப்பது இனவாதம்தான். ஆனால் பௌத்த மதத்தவர் வாழாத இடத்தில் விகாரை அமைக்கப்பட்டால் நிச்சயம் அது வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டதல்ல. ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டது. இன்னொரு மத மக்கள்மீது தமது மதத்தைத் திணிக்கும் மேலாதிக்க நோக்கம் கொண்ட முறைகேடான ஒருநடவடிக்கையாகும்.

இது தமிழர்களின் உணர்வை மதிக்காத ஓர் ஆதிக்கப் போக்காகும். ஒரு சாரார் இன்னொரு சாராரை ஒடுக்கும்போது ஒடுக்கப்படுவதை எதிர்ப்பது இனவாதமா? கிறிஸ்தவ மக்களோ முஸ்லிம் மக்களோ ஒருவர் கூட வாழாத பகுதியில் தேவாலயத்தையோ மசூதியையோ அமைக்க சிங்கள பௌத்த மக்கள் அனுமதிப்பார்களா? கடந்த அரசின் காலத்தில் மதத் தலங்களும் தேவாலயங்களும் தாக்கப்பட்டதை மறந்து விட முடியுமா?

ஒரு பௌத்தன் கூட குடியிருக்காத இடங்களில் இந்துக் கோயில்களுக்கு அருகில் விகாரைகளை அமைப்பது இனங்களுக்கிடையே முறுகலையும் மோதலையும் ஏற்படுத்த மேற் கொள்ளப்படும் சதியென்று நம்பாமல் இருக்க முடியுமா?

யாழ். குடாநாட்டில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்குச் சொந்தமான 63 ஏக்கர் காணிகளைப் பொலிஸார் தம்வசப்படுத்த முயற்சியெடுத்தனர். அவற்றை மீளப்பெற மக்கள் எடுத்த முயற்சிகள் யாவும் நிரர்கரிக்கப்பட்டன - முறியடிக்கப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாணம் வந்தபோது, நான் அவரிடம் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தினேன். அவர் எமது நியாயங்களை ஏற்றுக்கொண்டதுடன், உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்களித்தார். அவர் மூலம்தான் இவை விடுவிக்கப்படக் கூடிய சாத்தியம் இருப்பதாகத் தோன்றுகின்றது.

பௌத்த மக்கள் வாழாத பகுதிகளில் புத்தர் சிலைகளையும் விகாரைகளையும் அமைத்தல், தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பதாக அறிவித்துவிட்டு தொடர்ந்தும் அவற்றை ஆக்கிரமித்து வைத்தல், மீள் குடியேற்றச் செயலணியில் வட மாகாண சபையையும் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைக்க மறுத்தல் போன்ற விடயங்கள் மூலம் ஒருபுறம் 'நல்லிணக்கம் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. அந்த அநீதிகளைத் தமிழ் மக்கள் எதிர்க்கும்போது நாம் இனவாதம் பேசுகின்றோம் என்ற தோற்றப்பாடு பன்னாட்டுச் சமூகத்திடம் முன் வைக்கப்படுகின்றது. அப்படியான நடவடிக்கைகள் நல்லிணக்கத்துக்கு உதவப் போவதில்லை.

மிருகங்களின் பாதுகாப்புத் தொடர்பாக அக்கறைப்படும் ஆட்சியாளர்கள், தமிழ் மக்களின் பாதுகாப் புத் தொடர்பாகவும் அக்கறை காட்ட வேண்டும் - என்றார். (வ-5)

# நல்லூர் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் நிர்ணயித்த கட்டணத்துக்கு அதிகமாக அறவீடு

## *நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையிடம் யாழ். மாநகர ஆணையாளர் சுட்டிக்காட்டு*

நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவில், ஒரு சிலவற்றைத் தவிர மிகுதி அனைத்துச் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களிலும் அதிக கட்டணம் அறவிடப்படுகிறது. பல தடவை எச்சரித்தும் அதிகரித்தே கட்டணம் அடியவர்களிடம் அறவிடுகிறார்கள். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்கு ஏற்கனவே முறையிட்டுவிட்டேன்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாநகர ஆணையாளர் பொ.வாகீசன்.

சைக்கிள்களுக்கு 5 ரூபாவும் மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ரூபாவும் அறவிடுமாறு நாம் தெரிவித்திருந்தோம். ஆனால் சைக்கிள்களுக்கு 10 ரூபாவும் மோட்டார் சைக்கிள்களுக்கு 20 ரூபாவும் அறவிடப்படுகிறது. இது அதிகரித்த கட்டணம். நல்லூர் அரசடியிலுள்ள பாதுகாப்பு நிலையம் உட்பட அதிகமான பாதுகாப்பு நிலையங்களும் அதிகரித்த விலையிலேயே அடியவர்களிடமிருந்து பணம் வசூலிக்கின்றன. அதிகரித்த கட்டணமாக அச்சிடப்பட்ட ரிக்கட்களை நாம் பலதடவை பறிமுதல் செய்திருந்த போதும், அவர்கள் திரும்பத் திரும்ப அதிகரித்த கட்டணத்தை அறவிடுகின்றனர். அதுதவிர தலைக்கவசங்களுக்கு என்றும் மேலதிகமாகப் பணம் அறவிடுகின்றனர். அதிகரித்த பண அறிவீடு தொடர்பில் பலர் முறைப்பாடு செய்துள்ளனர். யாழ். மாநகர வளாகத்திலுள்ள பாதுகாப்பு நிலையத்தில் நாம் அறிவித்தபடியே சைக்கிள்களுக்கு 5 ரூபாவும் மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ரூபாவும் கட்டணம் அறவிடப்படுகிறது.

இதற்கு உரிய நடவடிக்கை எடுத்து அடியவர்களிடம் அதிக கட்டணம் அறவிடும் பாதுகாப்பு நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்குச் சில நாள்களுக்கு முன்னரே அறிவித்துவிட்டேன்.

அதுமட்டுமன்றி இம்முறை அதிகரித்த கட்டணம் அறவிட்டதால் அடுத்த முறை தொடக்கம் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பவர்கள், அதற்கு இடங்களைக் கொடுப்பவர்கள் தொடர்பில் கடுமையான நடைமுறைகளைப் புகுத்தவுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். (வ-4)

## 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்ரன்
அசில்லாஸ்
[மோகன்]

பிறப்பு 1962.11.25
இறப்பு 1990.08.25

கண்ணிமைக்கும் நேரத்தில் கயவர்களால்
உம் உயிர் பந்தாடப்பட்டு
26 ஆண்டுகள் ஆகியும்
உம் பிரிவு எம்மை ஏக்கமடைய வைக்கிறது
இருந்தும் உம் ஆத்ம சாந்திக்காக



மண்டைதீவு.
(J 4045)
(14,17,18)
அப்பா, சகோதரர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிகசாலைக்குள் சல்லாபத்தில் ஈடுபட்ட இளைஞன்—யுவதிக்கு மக்கள் கவனிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பாழடைந்த வாசிகசாலையில் சல்லாபத்தில் ஈடுபட்ட இளைஞர் மற்றும் யுவதியைப் பொதுமக்கள் நையப்புடைத்து, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மதியம் நடந்தது.
பாழடைந்த வாசிகசாலையில் சந்தேகத்துக்கு இடமான நடமாட்டம் காணப்பட்டதை அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அவதானித்தார். வாசிகசாலையினுள் சென்று பார்த்தபோது அங்கு சல்லாபத்தில் இளைஞரும் – யுவதியும் ஈடுபட்டிருந்தனர்.
ஊர்ப் பொதுமக்கள் திரண்டு சல்லாபத்தில் ஈடுபட்ட இருவருக்கும் 'முறையான' கவனிப்புக் கொடுத்தனர். அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் அவர்களை ஒப்படைத்தனர். பொலிஸார் இருவரையும் கடுமையாக எச்சரித்து விடுத்தனர். (ற-5-107)

## யூனியன் கல்லூரி அதிபராக தி.வரதன் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஓக.25
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் புதிய அதிபராக தில்லையம்பலம் வரதன் கடமையை நேற்று முதல் பொறுப்பேற்றார். இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும், கிளிநொச்சி முருகானந்தா வித்தியாலய முன்னாள் அதிபருமாவார். யூனியன் கல்லூரியின் அதிபர் ஓய்வு பெற்றதையடுத்து இவர் கடமையைப் பொறுப்பேற்றார். (ற-422)

# தனித்துவம் கொண்டது யாழ். மாவட்டச் செயலகம்

### மாவட்ட செயலர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25
இலங்கையின் ஏனைய மாவட்ட செயலகங்களை விட யாழ். மாவட்டச் செயலகத்துக்குச் சிறப்பான தனித்துவம் உள்ளது.
இவ்வாறு மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ். மாவட்டச் செயலகத்தின் பொன்விழா மலர் நேற்று வெளியிடப்பட்டது. மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. மேலதிக மாவட்டச்செயலர்பசெந்தில்நந்தனனின் வரவேற்புரையைத் தொடர்ந்து, மாவட்டச் செயலர் தலைமையுரை இடம்பெற்றது. தலைமையுரையைத் தொடர்ந்து மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.
மாவட்ட செயலர் தெரிவித்ததாவது–
மாவட்டச் செயலகம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவுற்றுள்ளன. இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலுள்ள மாவட்டச் செயலகங்களை விட யாழ். மாவட்டச் செயலகத்துக்கு தனித்துவம் உள்ளது. முன்னர் இங்கு பணியாற்றிய மாவட்டச் செயலர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் திறமையான செயற்பாடுகளே இதற்குக் காரணம். அவர்கள் எங்களுக்கு முன்னுதாரணமானவர்கள்.




அவர்களின் வழிகாட்டலில் நாம் சிறப்பாகச் செயற்பட வேண்டும். மாவட்டச் செயலகம் 1993 ஆம் ஆண்டு குண்டு வீச்சில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. உடனடியாகத் திருத்தப்பட்டது. 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது சாவகச்சேரி மகா வித்தியாலத்தில் மாவட்டச் செயலகம் சிறிது காலம் இயங்கியது. இடர்களுக்கு மத்தியிலும் தமது பணிகளைச் சிறப்பான முன்னெடுத்த அரச அதிகாரிகளை இந்த இடத்தில் நினைவு கூருகின்றேன்.
அன்றைய காலத்தை விட இன்று நாம் அதிக மனித வளத்தை கொண்டுள்ளோம். நாம் திறம்படச் செயற்பட வேண்டும். இப்பொழுது எமக்கு ஒரு சாதகமான சூழல் அமைந்துள்ளது. யாழ். மாவட்டம் தற்போது அபிவிருத்தியில் முக்கிய கட்டத்தில் உள்ளது. அரச நிதிகளைப் பெற்றுக் கொள்வதில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. நாம் நூறு வீத வெளிப்படைத் தன்மையுடன் சேவைகளை ஆற்ற வேண்டும். தற்போது பொதுமக்கள் தகவல்களை அறிகின்ற சட்டம் வந்துள்ளது. அந்தச் சட்டம் வராவிட்டாலும் நாங்கள் என்ன செய்கின்றோம் என்ற விவரங்களை மக்களுக்கு கொடுக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. எமது சேவைகள் விரிவடைய வேண்டும் – என்றார்.
மதகுருமார்கள், கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராஜா, முன்னாள் மாவட்டச் செயலர்கள், யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-5)

## வாகனத்தைப் பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக.25
அநாதரவாகக் காணப்பட்ட STREEM ST150ZH வர்க்க சிவப்பு நிறமான EPW LZXHCKZ12B0890482 அடிச்சட்டக இலக்கத்தை உடைய மூன்று சில்லு மோட்டார் சைக்கிள் பருத் தித்துறை நீதிவான் மன்றில் பருத்தித்துறைப் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ளது.
அதற்கு உரிமையாளர் யாராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் உரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும், தவறின் 6 மாதத்திற்குப் பின் அரசுடைமை ஆக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## நடுவர் சபை அமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக.25
கந்தர்மடம் சைவபிரகாச வித்தியாசாலையில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்று வரும் நல்லூர் நடுவர் சபை அமர்வு பாடசாலையின் வேறொரு நிகழ்ச்சி காரணமாக எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறாது. எதிர்வரும் 4ஆம் திகதி வழமை போல் அமர்வுகள் நடைபெறும் என நடுவர் சபை தவிசாளர் நா.நித்தியானந்தன் தெரிவித்தார். (ற)

## வாழைக் குலைகளுக்குத் திடீர் கிராக்கி

யாழ்ப்பாணம், ஓக.25
நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தையில் வாழைக்குலைகளுக்குப் பற்றாக்குறையும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளன. சந்தைக்கு குறைந்தளவு வாழைக்குலைகளே தினமும் வந்து சேர்கின்றன.
கதலி, இதரை ஆகியவற்றின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. கதலி கிலோ 120 ரூபாவாகவும் இதரை 70 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.
தெற்கில் இருந்தும் இந்தச் சந்தைக்கு வியாபாரிகள் தினமும் படையெடுத்து வந்து வாழைக்குலைகளை முண்டியடித்து வாங்கிச் செல்கின்றனர்.
நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, நவக்கிரி, உரும்பிராய், ஊரெழுப் பகுதிகளில் இருந்தும் வாழைக்குலைகள் இந்தச் சந்தைக்கு வந்து சேர்கின்றன. (ற-17)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலாவதியான யோக்கட் வைத்திருந்தவருக்குத் தண்டம்

வவுனியா, ஓக. 25
காலாவதியான யோக்கட்டை வியாபார நிலையத்திற்கு விற்பனை செய்ய எடுத்துச் சென்றார் என்று குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது வவுனியா மாவட்ட நீதிவான் மன்று.

வவுனியாவிலிருந்து கூலர் வாகனத்தில் யோக்கட்டை, வியாபார நிலையங்களுக்கு விநியோகம் செய்யச் சென்றபோது அதனை மறித்து வவுனியா பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை செய்தனர். 29 யோக்கட் கப்கள், காலாவதித் திகதி முடிவடைந்த நிலையில் மீட்கப்பட்டன. அவற்றை எடுத்துச் சென்ற நபருக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிவான் மன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற-5-21)



பஸ் நிலையத்துக்குள் திரும்பிய பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதியது. மோட்டார் சைக்கிள் சாரதி சுடுதியாகப் பாய்ந்து உயிர் தப்பினார். இந்தச் சம்பவம் சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பஸ் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்குள் திரும்பியது. கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பஸ்ஸுடன் மோதினார். மோட்டார் சைக்கிள் பஸ் சில்லுக்குள் சிக்கிச் சின்னாபின்னமானது. மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் அதிலிருந்து பாய்ந்ததால் தப்பினார். (ற-5-9)

## கைதடி இல்ல முதியோர்கள் நல்லூர்த் தேர்த் திருவிழாவுக்கு

யாழ்ப்பாணம் ஓக.25
கைதடி முதியோர் இல்ல முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக இந்தமுறை நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவில் கலந்து கொள்வார்கள்.

இல்ல நிர்வாகத்தினரால் மாதாந்தம் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்கு வயோதிபர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இந்த முறை நல்லூர்த் தேர்த்திருவிழாவுக்கு அவர்களை அழைத்துச் செல்லத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். (ற-17)

## சட்டவிரோத மீன்பிடி

### ரூ. 25 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 25
மண்டைதீவுக்கடலில் அனுமதிப்பத்திரம் இன்றி மீன்பிடித்த இருவருக்கு 25ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த இருவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுக் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் பாரப்படுத்தப்பட்டிருந்தனர். இருவரிடம் இருந்தும் 10 கடலட்டைகள் மீட்கப்பட்டதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இருவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனால் தண்டம் விதித்ததோடு கடலட்டை பிடிப்பதற்குப் பயன்படுத்திய உபகரணங்களை அரசுடைமையாக்குமாறும் மன்று உத்தரவிட்டது. (த-107)

## மன்னாரில் இளைஞர்களிடையே மாவா பாவனை அதிகரிக்கிறது

### உடன் நடவடிக்கை எடுக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

மன்னார், ஓக.25
மாவா எனப்படும் போதைப் பாக்கு மன்னார் இளைஞர்கள் மத்தியில் விற்பனை செய்யப்படுகின்றது என்று சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்தனர்.

முறைப்பாடு கிடைத்தால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மன்னார் பசார் ப்குதியில் மாவா எனப்படும் போதைப் பாக்கு விற்பனை மறைமுகமாக நடைபெறுகின்றது. இளைஞர்களே இந்தப் பாக்கை அதிகம் உபயோகிக்கின்றனர். இது பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பரவி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. பாக்கு அடங்கிய ஒரு பக்கெற் 50 ரூபா முதல் 100 ரூபாவரை விற்கப்படுகின்றது.

இளைஞர்கள் இதனை மறைவான இடங்களில் உபயோகிக்கின்றனர். வெற்றிலைக்குப் பதிலாக இதனை உபயோகின்றனர். இளைஞர்களை இலக்கு வைத்தே இந்த விற்பனை நடக்கின்றது. பொலிஸாரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

முன்னர் இந்தப் பாக்கு விற்பனை நடந்தது. பொலிஸாரின் தீவிர நடவடிக்கையால் அது முற்றாக ஒழிக்கப்பட்டது. பசார் வீதியில் வெற்றிலைக் கடைகள் அதிகம் உள்ளன. அந்தப் பகுதியில் மாவா விற்பனை செய்யப்படுகின்றது என்று எமக்குத் தகவல் கிடைக்கவில்லை. இது தொடர் பாக மக்கள் தகவல் வழங்கினால் விரைந்து நடவடிக்கை எடுப்போம்- என்று மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ற-21,ரி4,56)

## 170 தொகுதி இறால் கூடுகள் எரியூட்டி அழிப்பு

முல்லைத்தீவு, ஓக. 25
முல்லைத்தீவு நீதிவான் மன்ற உத்தரவுக்கு அமைய 170 தொகுதி இறால் கூடுகள் மற்றும் 2 தொகுதி தங்கூசி வலைகள் எரியூட்டி அழிக்கப்பட்டன என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் துறை உதவிப் பணிப்பாளர் விஸ்வலிங்கம் கலிஸ்ரன் தெரிவித்தார்.

சட்டத்துக்குப் புறம்பான வகையில் நந்திக்கடல் நீரேரியில் போடப்பட்டிருந்த 170 தொகுதி இறால் கூடுகள் மற்றும் 2 தொகுதி தங்கூசி வலைகளை கடற்றொழில் நீரியல்வளத் துறை அதிகாரிகள் கடந்த 18 ஆம் திகதி கைப்பற்றினர்.

மீட்கப்பட்ட சான்றுப் பொருள்கள் அனைத்தும் உரிமைகோரப்படாத நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் சான்றுப் பொருள்களை எரியூட்டி அழிக்குமாறு உத்தரவிட்டார். (ற-5-107)

## நிபந்தனையை மீறி கடலட்டை பிடித்த மீனவருக்கு தண்டம்

முல்லைத்தீவு, ஓக. 25
அனுமதிப் பத்திரத்தில் வழங்கப்பட்ட நிபந்தனையை மீறிக் கடலட்டை பிடித்த இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார் முல்லைத்தீவு நீதிவான் மன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன்.

மீட்கப்பட்ட கடலட்டைகளை அழிக்குமாறும் உத்தரவிட்டார். கடலட்டை பிடிப்பதற்குப் பயன்படுத்திய டிங்கி படகு தொடர்பான வழக்கு டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

முல்லைத்தீவுக் கடலில் கடலட்டை பிடிப்பதற்கு அனுமதி பெற்றிருந்த நிலையில் வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் இரு மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்தனர். இரு மீனவர்களும் முல்லைத்தீவு மாவட்ட நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ற-5-107)

## நல்லூர்த் தேர்த் திருவிழாவுக்காக விடுமுறை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஓக.25
யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பணியாளர்கள்நல்லூர் ஆலயத்தின் தேர்த்திருவிழாவில் கலந்து கொள்வதற்கு வசதியாக அன்று முழுமையான விடுமுறை வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

வழமையாகவே சில சங்கங்கள் தேர்த் திருவிழாவின்போது பணியாளர்களுக்கு முழுமையான விடுமுறை வழங்குகின்றன.

இந்த முறையும் விடுமுறையை வழங்கவுள்ளன. சில சங்கங்கள் விடுமுறை வழங்குவது குறித்து இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லை என்று பணியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு விடுமுறை வழங்குவது சம்பந்தமாக வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்ததாவது:

விடுமுறை தொடர்பாக அந்தந்தச் சங்கங்களே முடிவெடுக்க வேண்டும். சங்க நிர்வாகங்கள் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்திப் பணியாளர்களுக்கு விடுமுறையை வழங்க முடியும் - என்றார்.

வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் பொ.வாகீசன், கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தலைவர் வ.சிவகுமார் ஆகியோரும் இதே கருத்தைத் தெரிவித்தனர். (ற-17)

## ஆண்டான்குளமும், சூழவுள்ள பகுதிகளும் விரைவில் விவசாயிகளிடம்

### முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 25
ஆண்டான் குளத்தையும் அதன் சூழவுள்ள பிரதேசங்களையும் அங்கு முன்னர் விவசாயம் செய்த விவசாயிகளிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆண்டான்குளம் பகுதியில் போருக்கு முன்னர் தமிழ் மக்களின் வாழ்வாதார வயல் நிலங்களாக விளங்கிய சுமார் 800 ஏக்கர் நிலப் பரப்பு எந்தவிதமான பராமரிப்பும் இல்லாது மரங்கள் வளர்ந்து காணப்படுகின்றன. அடர்ந்த மரங்கள் வளர்ந்த பிரதேசம் வனத்துறையினருக்குச் சொந்தம் என்பதன் அடிப்படையில் இந்தப் பகுதி நிலம் வனத்துறையினரின் கட்டுப்பாட்டுக்குச் சென்றது. போரின் பின்னர் அயல் கிராமங்களில் குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதார நிலம் விடுவிக்கப்படாமையால் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகின்றோம் என்று சுட்டிக்காட்டினர்.

"இந்தப் பகுதியை விவசாயிகளுக்கே வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். முன்னர் விவசாயம் செய்தவர்கள் அடையாளம் காணப்பட்டுக் காணி அளவுகள் இறுதி செய்து அவர்களின் நிலத்தை மீளப்பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தொடர்பாக வன வளத் துறையினரின் கவனத்துக்குக் கொண்டு சென்று மாவட்ட வன வளத்துறையினர் மக்களால் விவசாயம் புரிந்த நிலத்தை விடுவிப்பதற்கான பரிந்துரையை வன வளத்துறையின் அமைச்சுக்கு அனுப்பியுள்ளனர். அமைச்சின் அனுமதி விரைவில் கிடைக்கும். அந்தப் பகுதி எம்மிடம் ஒப்படைக்கப்பட்டதும் நிலங்கள் கையளிக்கப்படும். ஆண்டான் குளத்தையும் சீரமைத்துக் கொடுக்க முடிவு செய்துள்ளோம்- என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ற-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கட்டுக்கரைக் குளத்தில் 75,000 மீன் குஞ்சுகள் விடப்பட்டன

## வடக்கு, மத்திய மீன்பிடி அமைச்சர்கள் இணைந்து வைப்பிலிட்டனர்



மன்னார், ஓக. 25
வடக்கு, மத்திய மீன்பிடி அமைச்சர்கள் இணைந்து மன்னார் கட்டுகரைக் குளத்தில் 75 ஆயிரம் மீன் குஞ்சுகளை வைப்பிலிட்டனர்.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 2016ஆம் ஆண்டுக்கான வடக்கு மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் திட்டத்தின் கீழ் நன்னீர் மீன் குஞ்சுகள் வடக்கில் உள்ள குளங்களில் வைப்பிலிடப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாகவே மன்னார் கட்டுக்கரைக் குளத்தில் மீன் குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டன. குளத்தை மையமாகக் கொண்டு நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்கள் பயனடையும் வகையில் அவை வைப்பிலிடப்பட்டன.

நிகழ்வில் மத்திய மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான், வடக்கு மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாணசபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், தேசிய நீர்வாழ் உயிரினங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், மாவட்ட உத்தியோகத்தர், சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அபிவிருத்திப் பணிகள் சகலவற்றிலும் மத்திய அரசும், மாகாண அரசும் இணைந்து செயற்படுவது போன்று உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலும் ஒன்றிணைந்து செயற்பட்டால் விரைவில் எமது நாடும் அபிவிருத்தி அடைந்து தன்னிறைவான நாடாக மாறும்- என்று வடக்கு மீன்பிடி அமைச்சர் நிகழ்வில் குறிப்பிட்டார். (ற-21)

# வீட்டுத் தேவை, மின் வசதி பூர்த்தியாக்கப்படவில்லை

## கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவு பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஓக. 25
கரைதுரைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் 500 கிலோ மீற்றர் வரையான வீதிகள் சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மக்களின் வீட்டுத் தேவைகள், மின்சார வசதிகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. இவை தொடர்பில் அதிகாரிகள் கவனம் எடுக்காதுள்ளனர்.

இவ்வாறு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொது அமைப்புகள் குற்றஞ்சாட்டின.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரை உள்ளடக்கியது கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகம். வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகைக்கு உட்பட்ட 500 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் சீரமைப்புச் செய்யப்படவில்லை.

45 சதவீதமான மக்களுக்கு இன்று வரையில் வீட்டு வசதி கிடைக்கவில்லை. மின்சார வசதியும் பெருமளவான குடும்பங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை - என்றனர்.

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 13 ஆயிரத்து 195 குடும்பங்களில், 5 ஆயிரத்து 160 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. 859 வீடுகள் பகுதித் திருத்தத்தின் மூலம் சீரமைக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தின் கீழ் 400 வீடுகள் கிடைத்துள்ளன. இன்னும் 5 ஆயிரம் வீடுகளுக்கான தேவை உள்ளது. மின்சாரத்தைப் பொறுத்தவரையில் 8 ஆயிரத்து 180 இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து 700 இணைப்புக்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

குமுழமுனை, தண்ணிமுறிப்பு, தண்டுவான் - குமுழமுனை, குமுழமுனை - அளம்பில், அம்பலவன்பொக்கணை, வலைஞர் மடம் போன்ற முதன்மை வீதிகளுடன், சிறு வீதிகள் எனச் சுமார் 300 கிலோ மீற்றர் வீதிகள் அவசர சீரமைப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது. அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது - என்று கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-5-10)

# கசிப்பு உற்பத்தி நிலையம் கற்சிலைமடுவில் சிக்கியது

## *பொலிஸாரின் இரகசிய சுற்றிவளைப்பில்*

முல்லைத்தீவு, ஓக. 25
இரகசியமான முறையில் நீண்டகாலமாக இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டுபிடிக்கப்பட்டது. கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களுடன், 20 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது. அவற்றை வைத்திருந்த சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கசிப்பு உற்பத்தி நிலையம் தொடர்பான இரகசியத் தகவல் கிடைத்தது.

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலில், போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கருணரட்ணம் ஜெசிந்தன் தலைமையில் குறித்த இடத்துக்குப் பொலிஸ் அணி சென்றது.

கற்சிலை மடுவில் ஓரிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்தனர். அன்றே மற்றுமொரு இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது. குறித்த இடத்திலும் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் வழங்கிய தகவலை அடுத்து அடர்ந்த காட்டுப் பகுதியில் இரகசியமாக இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றி வளைக்கப்பட்டது.

விற்பனைக்குத் தயாரான நிலையில் இருந்த 10 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன. இதன் போதும் சந்கேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5-21-ரி7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரணகம ஆணைக்குழு பரிந்துரையால் குற்றஞ் செய்தோர் தப்பிக்கும் சாத்தியம்

## சாடுகின்றது பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம்

கொழும்பு, ஓக. 25
மக்ஸ்வெல் பரணகம ஆணைக் குழுவின் பரிந்துரைகளைப் பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடுமையாகச் சாடியுள்ளது.

பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தினால் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படை அதிகாரிகள் குற்றவியல் விசாரணைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியது. இது குறித்து பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்டம் மற்றும் கொள்கை இயக்குநர் ஜேம்ஸ்ரொஸ்தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திய மக்ஸ்வெல் பரணகமவின் ஆணைக்குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம்தனது இறுதி அறிக்கையைக் கையளித்தது. போரின் போது மனித உரிமைச் சட்டங்கள், மனிதாபிமானச் சட்டங்களை மீறியவர்களை உள்ளூர் விசாரணைப் பொறிமுறையின் ஊடாக விசாரணை செய்யவேண்டும் என்று பரிந்துரைத்தது.

இந்தப் பரிந்துரை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு எதிரானது. ஐ.நா. தீர்மானம் பொது நலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், நீதித்துறையினர், விசாரணையாளர்களை அங்கீகரித்தது.

குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் தங்கள் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்க அனுமதிக்கப்படவேண்டும். அவர்களுக்குரிய தண்டனைகள் வழங்கப்படவேண்டும். இதன் அர்த்தம் தண்டங்களை அறவிடுவது, பதவி உயர்வை வழங்காமல் விடுவது போன்றதாகும்.

இலங்கை அரசு இந்த அணுகுமுறையைப் பின்பற்றினால் பெரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படைஅதிகாரி ஒருவர் குற்ற விசாரணையிலிருந்து தப்பிக்கலாம்.

தென்னாபிரிக்காவில் பின்பற்றப்பட்ட இந்த முறை காலத்தால் பழையது. பன்னாட்டுத் தராதரங்களை முழுமை செய்யாதது. மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தக்கூடாது - என்றார். (ற-5)

# INVITATION FOR BIDS
## OFFICE OF THE DIVISIONAL SECRETARIAT
### KARACHCHI, KILINOCHCHI

**THE DIVISIONAL SECRETARIAT, KARACHCHI, KILINOCHCHI** is a Governmental Organization under the Ministry of Public Administration invited sealed bids for the various construction works from eligible bidders

| Bid Code | Description of the Work | Estimate (Million) | ICTAD Grade | Bid Bond Rs. | Non-refundable Deposit (Rs.) |
|---|---|---|---|---|---|
| KR/DPC/CON/2016-01 | Construction of Dry Bed & Renovation of Toilet at Vannerikkulam, Construction of Community center at kannakaipuram, Renovation of Road at Anaivilunthan, Drainage Cleaning work & Construction of Common Hall & Renovation of Community center at Skanthapuram, Construction of Common Hall & Renovation of dug well & Building at Akkarayankulam in Kilinochchi. | 6.0 | C7 | 60000 | 2000 |
| KR/DPC/CON/2016-02 | Construction of Community center at Uttuppulam, Construction of Common Hall at Selvanager, Construction of Preschool & Fixing Gate at Konavil, Roof Extension of Common Hall & Boundary wall with Fencing & Construction of Boundary wall for Play Ground & Construction of Dug Well at Puthumurippu in Kilinochchi. | 4.6 | C7 | 46000 | 2000 |
| KR/DPC/CON/2016-03 | Renovation of Road & Construction of Children Park at Ponnager , Construction of Common Hall & Tube Well at Malayalapuram, Construction of Culvert & Dug well at Barathipuram, Construction of Common hall at Kirusnapuram in Kilinochchi | 4.9 | C7 | 49000 | 2000 |
| KR/DPC/CON/2016-04 | Renovation of Road & Construction of Toilet & Dug Well at Uthayaneger East , Construction of Preschool at Uthayanager West , Extension of Community Hall & Construction of Tube Well at Vivekananthanager , Construction of Training Center & Culvert at Ambalkulam in Kilinochchi. | 4.3 | C7 | 43000 | 2000 |
| KR/DPC/CON/2016-05 | Renovation of Road at Thondamannager, Construction of Culvert, Dug Well & Boundary Wall for School at Ananthapuram, Construction of Children park & Dug Well at Ambalnager, Renovation of Road & Construction of Dug Well at Kanakambikaikulam in Kilinochchi. | 5.3 | C7 | 53000 | 2000 |
| KR/DPC/CON/2016-06 | Construction of Culvert & Back Filling of land at Kilitown, Construction of Dry Bed & Dug Well at Thiruvaiyaru, Construction of Boundary Wall for Common Hall & Dug Well at Thiruvaiyaru West in Kilinochchi | 4.1 | C7 | 41000 | 2000 |
| KR/DPC/CON/2016-07 | Construction of Community Center at Periyaparanthan, Renovation of Road at Kanesapuram , Construction of Dry Bed at Maruthanager and Renovation of preschool Land & Children park at Pannagkandy in Kilinochchi | 3.9 | C7 | 39000 | 2000 |
| KR/DPC/CON/2016-08 | Renovation of Road & Construction of Common Cemetery Hall & Wastewater Drainage at Thirunagar north, Roof Extension & Fencing for Community Hall & Construction of Culvert & Dug Well at Thirunagar South ,Renovation of Road & Building at Jayanthinagar, Construction of Boundary Wall for Preschool & Dug Well & Renovation of play Ground at Kanakapuram Kilinochchi. | 6.0 | C7 | 60000 | 2000 |
| KR/DPC/CON/2016-09 | Construction of Community Center at Sivanager, Renovation of Common Hall & Construction of Culvert at Uruththirapuram North, Construction of Culvert & Dug Well at Uruththirapuram East, Renovation of Bund ( 500m) at Uruththirapuram West in Kilinochchi. | 4.2 | C7 | 42000 | 2000 |
| KR/DPC/CON/2016-10 | Renovation of Road at Civic center, Construction of Culvert & Dug Well at Vaddakachchi, Construction of Building & Dug Well at Mayavanoor, Construction of RDS Building, Dug Well & Building at Ramanathapuram and Construction of Culvert at Mavadyamman in Kilinochchi. | 6.9 | C7 | 69000 | 2000 |

1. Bid documents will be issued during office hours until 05th September 2016.
2. Sealed Bids are invited for the works up to 05th September 2016 at 14.00Hrs and will be opened immediately in the presence of bidders or their authorized representatives at Divisional Secretariat, Karachchi, Kilinochchi.
3. The validity should be offered for 30 days from the date of opening and 90 days from time of signing the agreement.
4. Bids should be submitted only on bid documents available at Divisional Secretariat, Karachchi, Kilinochchi on payment of non-refundable bid fee.
5. Prepared Bids adhering to all the conditions specified in the Bid Documents with copy should be put into the bid box at Divisional Secretariat, Karachchi, Kilinochchi or sent by registered post addressed to: **The Chairman, Departmental Procurement Committee, Divisional Secretariat, Karachchi** to receive on or before 05th of September 2016 at 14.00Hrs and Please Insert the bid code in the top of the envelop.
6. If you have any clarification, don't hesitate to Fax on 021-2285633, E-Mail to dpskarachchi@gmail.com on or before 05th of September 2016 at 13.00Hrs.
7. Any expenses arising on the preparation of bid document and submission should not be reimbursed and Late Bids will not be accepted.
8. The office reserves the right to accept or reject any or all offers without assigning any reason what so ever.

**The Chairman**
**Departmental Procurement Committee**
**Divisional Secretariat**
**Karachchi, Kilinochchi.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C/25035)(10.18)

# புதிய அரசமைப்பு தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடக்கும்

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25
இரண்டு மாதங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு யோசனை தொடர்பாக மக்கள் கருத்தறியும் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும்.
இவ்வாறு அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
கிழக்குப்பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
எமது அரசு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கே முன்னுரிமை கொடுக்கிறது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எல்லா அரசியல் கட்சிகளும் தமது யோசனைகளைச் சமர்ப்பிக்க முடியும். இதுபற்றி ஒரு பொதுவான நிலைக்கு வரமுடியும். எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசமைப்பை உருவாக்க முடியும் என்று நாம் நம்புகிறோம். புதிய அரசமைப்பு இரண்டு மாதங்களுக்குள் உருவாக்கப்படும். அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மக்களின் அங்கீகாரத்துக்காக பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும். மக்களின் அங்கீகாரத்துடன் புதிய அரசமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்- என்றார். (ற-5)



# மலேசியா செல்கிறார் மகிந்த

கொழும்பு, ஓக. 25
ஆசிய பசுபிக் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தின் பன்னாட்டு மாநாட்டில் பங்கேற்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மலேசியா செல்லவுள்ளார். இந்த மாநாடு அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி 4 ஆம் திகதி வரை நடைபெறும்.
மகிந்த ராஜபக்சவுடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தினேஸ் குணவர்த்தன, லொகான் ரத்வத்தை, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ ஆகியோரும் மலேசியா பயணம் செய்யவுள்ளனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு அடுத்த மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையிலும், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் முதலாம் திகதி இலங்கை வரவுள்ள நிலையிலும் மகிந்த ராஜபக்ச மலேசியா பயணமாகவுள்ளார். (ற-5)

# பீட்சா விநியோகம் தாமதம் பொலிஸ் முறைப்பாடு பதிவு

கொழும்பு, ஓக. 25
உரிய நேரத்தில் பீட்சா கிடைக்கவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
வீட்டில் நடைபெற்ற விருந்துபசாரத்துக்காக பீட்சாவைக் கொள்வனவு செய்த நபர் ஒருவர், உரிய நேரத்தில் அவை விநியோகம் செய்யப்படவில்லை என்று அதிருப்தி அடைந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.
நீர்கொழும்பில் அமைந்துள்ள பிரபல பீட்சா விற்பனை நிலையமொன்றுக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
நீர்கொழும்பு கிழக்கு பலாங்குதுறைப் பகுதியைச் சேர்ந்த சன்ன முத்துவடுகெ அன்டன் பெர்னாண்டோ என்ற நபரே முறைப்பாடு செய்துள்ளார்.
கடந்த 22 ஆம் திகதி வீட்டில் நடைபெற்ற விருந்துபசாரத்துக்காக பீட்சா விநியோகம் செய்யுமாறு நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் இரவு 7.30 மணி வரையிலும் பீட்சா விநியோகம் செய்யப்படவில்லை என்று தெரிவித்த குறித்த நபர், நீர்கொழும்பு



இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்துப் பேசுவதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான முதன்மை பிரதி உதவிச் செயலர் வில்லியம் ஈ ரொட் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வந்தார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து அரச தலைவர்களுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்தார். சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்திக்க அவர் திட்டமிட்டுள்ளார். (ற-5)



பதினேழாம் நாள் உள்வீதியுலா

## பதினெட்டாம் திருவிழா

### அருள்புரிவார் வடிவேலன்

நல்லை நகர் வடிவேலனுக்குப் பெருவிழா
நற்றமிழ் அதிபதியாம் முருகனுக்குத் திருவிழா
தெருவீதியெங்கும் குதூகலம் குமரனுக்கு அருள்விழா
பெருமை மிகு அலங்காரக் கந்தனுக்குப் பக்திவிழா

வரலாற்றுப் புகழ் நல்லூர் வளநகர்
வந்து தொழுவோருக்குக் கோடி புண்ணியம்
சரவணப்பொய்கையில் உதித்த சரவணபவன்
கார்த்திகேயப் பெண்கள் வளர்த்த கார்த்திகேயன்

அறுபடைவீடுடைய பெருமான் கடம்பன்
நல்லூர்ப் பதியில் அலங்காரக் கந்தன்
வேலாக காட்சிதரு மூலமூர்த்தி வேலாயுதர்
வேண்டும் வரம் யாவும் அருள்வார்

வள்ளி, தெய்வானை சக்திகளை உடையவர்
அள்ளித் தருவார் செல்வங்கள் யாவும்
சிவசக்தியின் மைந்தனாம் முருகன்
சிவனுடன் சோமஸ்கந்தர் எங்கள் பெருமான்

முருகா முருகா எனும் வாழ்த்தொலியுடன்
கர்ப்பூரச்சட்டிகளும் பலநூறு
கருணை பொழியும் எங்கள் கருணாமூர்த்தியைக்
காண ஆயிரம் கண்கள் வேண்டும்

அங்கப்பிரதட்சணம் வீதி நிரப்பும்
பொங்கு தமிழ் பாமாலை முருகப் பெருமானுக்கு
தங்கமயிலேறி வருவார் வீதிவலம்
பாங்குடன் கலாசாரம் பேணி பணிவோம்.

**- சரோஜினி கனகரத்தினம்**, சுழிபுரம்.

### நிறைவாம் வாழ்வு தருவான்

கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததனாலே
கார்த்திகேயன் ஆகிய மூர்த்தியின்
திருவடி தொழுவோம்! நிறைவாம்
வாழ்வைத் தருவான் நல்லை வேலவனே!

- நாயன்மார்கட்டு
**ப.மகேந்திரதாசன்**




# அமெரிக்க கடற்படைச் செயலர் திருமலை கடற்படைத் தளத்தில்

## கூட்டுப் பயிற்சிகளை மேற்பார்வையிடுவதற்கு

கொழும்பு, ஓக. 25
அமெரிக்காவின் கடற்படைச் செயலர் ரே மபுஸ் இலங்கைக்கு வந்தார். அவர் திருகோணமலை கடற்படைத் தளத்தில் நடக்கும் கூட்டுப் பயிற்சிகளைப் பார்வையிட்டார்.
திருகோணமலை டொக்யார்ட் கடற்படைத் தளத்துக்கு கடந்த திங்கட்கிழமை சென்ற அமெரிக்கக் கடற்படைச் செயலர் ரே மபுஸை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜயகுணவர்த்தன வரவேற்றார்.
கடற்படை இல்லத்தில், அமெரிக்க கடற்படைச் செயலருக்கும் கடற்படைத் தளபதிக்கும் இடையில் பேச்சு நடைபெற்றது.
தற்போது முன்னெடுக்கப்படும் இருதரப்புப் பயிற்சிகள், குறித்து கருத்துக்கள் பரிமாறப்பட்டன. பேச்சில் கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
திருகோணமலையில் இடம்பெற்று வரும், அமெரிக்க- இலங்கைக் கடற்படையினருக்கு இடையிலான கூட்டுப் பயிற்சிகளை மேற்பார்வை செய்வதற்கே அமெரிக்கக் கடற்படைச் செயலர் இலங்கை வந்துள்ளார்.(ற-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா.மனித உரிமைகள் சபையின் அனைத்துலக நியமங்களை மேலெழுப்புமா...?

இம்மாதத்தின் இறுதிக்குள் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இயங்கும் நலன்புரி நிலையங்களை அவசர அவசரமாக மூடிவிடுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்து அந்தந்த மாவட்டங்களின் மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை, இருபத்துஇரண்டாம் திகதியன்று ஜனாதிபதி செயலகத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதற்கு ஏற்ப, அவசர அவசரமாகத் தாம் நினைத்த காரியத்தை செய்து முடித்து விடும் போக்கு, முதன்மைத்துவம் கொடுத்து, செயற்படுத்தப்பட உள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தின் பின்னர், மேற்போந்த மும்முரமான முடிவும், செயற்பாட்டுக்கான பணிகளும் வேகவேகமாக, தடல்புடலாக ஒப்பேற்றப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நலன்புரி நிலையங்களில் தங்கிவாழும், காணி எதுவும் இல்லாத மக்களுக்கு உடனடியாக எவ்வகை சார்ந்த பின்னடிப்பும் இன்றி அரச காணிகளை வழங்குமாறும்--

விடுவிக்கப்படக்கூடிய இடங்களைச் சேர்ந்த மக்களுக்கு வீட்டுத் திட்டங்களை வழங்கி அவர்களைக் குடியேற்றுமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கும் முப்பத்தொரு நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்ந்து வரும் 936 குடும்பத்தினர்களையும் --

வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் தங்கி வாழும் 97 குடும்பத்தினர்களையும்--

விரைந்து குடியேற்றுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

மேற்போந்தவை மட்டுமன்றி விரைவில் விடுவிக்கப்பட உள்ளதாக அடையாளப் படுத்தப்பட்டிருக்கும் காணிகளையும் அவற்றின் சொந்தக்காரர்களிடம் கையளிப்பது என்று முடிவாகி உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், முதல் வாரத்தில் இந்த நாட்டுக்கு வருகை தரவுள்ளதால்--

எமது நாட்டு அரசு, தான் அப்பழுக்கற்றது என்று பூசி மெழுகுவதற்கு, அவசர அவசரமாக செயற்பட உள்ளதாக எண்ணத் தோன்றினும்--

உள்நாட்டில், தமிழ் மக்களுக்கான வாழ்வியல் தேவைகளை, ஐ.நாவின் வகுக்கப்பட்ட நியமங்களுக்கு ஏற்பச் செயற்படுத்துவதற்கு, எந்த வகையிலும் பின்னிற்கப் போவதில்லை என்று கட்டியம் கூறும் அரசின் போக்கு நிரந்தரமானதா என்பதும் கேள்விக்குரியதே.

போரினால் பாதிப்புற்று, வாழ்க்கை முற்றிலும் தேய்ந்து போயுள்ள நிலையில், மீண்டும் தமது முந்திய வாழ்க்கை கிடைக்குமா என்று கடந்து சென்ற காலத்தில் ஏங்கித்தவித்த நிலைமை, இனி எப்போதுமே மீண்டும் ஏற்படக்கூடாது.

ஐக்கிய நாடுகள் சபையும் அதன் மனித உரிமைகள் சபையும் கண்ணுக்குள் எண்ணை ஊற்றிப் பார்க்கும் விதத்தில், பக்கம் சாராமல் அனைத்துலக நியமங்களையும் நியதிகளையும் அப்பளுக்கற்று மேலெழுப்ப முனையட்டும். அதுவே வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களின் ஆத்மார்த்தமான வேண்டுகை.

எதிர்பார்க்கலாமா...?




எம்.ஐ.முபாறக்

இலங்கையில் போர் தொடங்கப்படுவதற்கு முன்பிருந்தே தமிழருக்கு எதிரான அடக்கு முறைகள்-கொடுமைகள் தொடங்கப்பட்டுவிட்டன. பௌத்த மேலாதிக்க சிந்தனை கொண்ட ஆட்சியாளர்கள் அரசியல் ரீதியாகவும், வேறு வழிகள் ஊடாகவும் தமிழர்களை நெருக்கத் தொடங்கியதுமே போர் வெடித்தது. அப்போது முதல் தொடங்கப்பட்டவைதான் தமிழருக்கு எதிரான மனித உரிமை மீறல்கள்.

> போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவ தற்காக உள்ளகப் பொறிமுறை ஒன்று அமைக்கப்படும் என்று அரசு அறிவித்தது முதல், அரசுக்கும் படையினருக்கும் இடையிலான உறவில் கீறல்கள் விழத் தொடங்கி விட்டன. இதை நிரூபிக்கும் வகையில் பல நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. இராணுவ அதிகாரி ஒருவர் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர மீது யாழில் வைத்து சீறிப் பாய்ந்தமை இராணுவ- அரச உறவில் ஏற்பட்டுள்ள விரிசலின் உச்சத்தை வெளிக்காட்டியது.

கைதுகள், கடத்தல்கள், காணாமல் ஆக்கப்பட்டமை, கொலைகள் மற்றும் இடம்பெயர்வுகள் என அந்தக் கொடுமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். போர் முடிவுற்றபோதிலும், அந்தத் துன்பவியல் நிகழ்வுகள் முடிவுறவில்லை. போர் முடிந்த பின்னரும் பல வருடங்களாக தமிழர்கள் கொடுமைகளை அனுபவிக்கவே செய்தனர்.

இவ்வாறு சுமார் 3 தசாப்தங்களாக தமிழர்கள் இத்தகைய அட்டூழியங்களை அனுபவித்து வந்த போதிலும், போரை முடித்து வைத்த மகிந்தவின் ஆட்சியிலேயே இந்தக் கொடுமைகள் உச்சத்தை அடைந்தன.

தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநியாயங்கள் தொடர்பாக, உள்நாட்டு அரசியல் அரங்கிலும், சர்வதேச மட்டத்திலும் பேசப்படுகின்றது என்றால், அவை மகிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களாகவே இருக்கின்றன.

இறுதிப் போரின்போது 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்றும், போர்க்குற்றங்கள் இடம்பெற்றன என்றும்-தமிழர் தரப்பினாலும் சர்வதேசத்தாலும் குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு அவை தொடர்பில் விசாரிப்பதற்கான நடவடிக்கைகளும் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்தே வந்தார். இப்போதும் நிராகரிக்கின்றார். ஆனால், இப்போதைய மைத்திரி-ரணில் அரசு இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்துவதற்கும், காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்று கண்டறிவதற்கும் முயற்சித்து வருகின்றது.

போர்க் குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு உள்ளக விசாரணைப் பொறிமுறையை அமைப்பதற்கும், காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்று அறிவதற்குமாக காணாமற் போனோர் அலுவலகம் ஒன்றை நிறுவுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் படையினருக்கு எதிரானவை என்பதால், குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டாலும், படையினர் தண்டிக்கப்படுவது சந்தேகமே. அரசின் செயற்பாடுகள்- அறிக்கைகள் இந்த சந்தேகத்தை வலுப்படுத்துகின்றன.

போர்க் குற்றச்சாட்டுக்களை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என்றும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டாலும் படையினர் தண்டிக்கப்படாது பொறுப்புக் கூறல் மாத்திரம் நிறைவேற்றப்படும் என்றும், அரசு கூறி வருகின்றமை இங்கு கவனிக்கத்தக்கவையாகும்.

படையினர் தண்டிக்கப்படுவதை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். போர்க்களத்தில் எவ்வாறான கொடுமைகள் இடம் பெற்றிருந்தாலும், அவை அனைத்தும் போர் என்ற பதத்துக்குள் தான் அடங்கும் என்ற மனோநிலையில், அந்த மக்கள் இருப்பதுதான் இதற்கு காரணம். மகிந்த தரப்பு இந்த நிலமையை ஊதிப்பெருப்பித்து அவர்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தக்கூடும் என்ற அச்சம் அரசுக்கு இருக்கின்றமையும் மற்றுமொரு காரணமாகும்.

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக உள்ளகப் பொறிமுறை ஒன்று அமைக்கப்படும் என்று அரசு அறிவித்தது முதல், அரசுக்கும் படையினருக்கும் இடையிலான உறவில் கீறல்கள் விழத் தொடங்கி விட்டன. இதை நிரூபிக்கும் வகையில் பல நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

இராணுவ அதிகாரி ஒருவர் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர மீது யாழில் வைத்து சீறிப் பாய்ந்தமை இராணுவ- அரச உறவில் ஏற்பட்டுள்ள விரிசலின் உச்சத்தை வெளிக்காட்டியது.

இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் பாதுகாப்பான ஓர் அரசைத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் புலிகளுக்கு விஷம்; குற்றவாளிகள் இதற்காவது தண்டிக்கப்படுவார்களா?

தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாது என்பதால், படையினரை வழிக்கு கொண்டு வரும் சில யுக்திகளை அரசு கையாளத் தொடங்கியது. போர்க் குற்றச்சாட்டுக்களை நிராகரித்து, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என அவற்றை அழைப்பதும், குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டாலும் படையினரைத் தண்டிக்காது பொறுப்புக் கூறலை மாத் திரம் நிறைவேற்றுவது என்ற நிலைப்பாட்டில் அரசு இருப்பதும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை அமைச்சராக்கியதும் இந்த யுக்திகளில் ஒன்றாகும். இதுபோக,படை அதிகாரிகளை சந்தித்தும் சில தெளிவுபடுத்தல்களை அரசு வழங்கியுள்ளது.

இவ்வாறானதொரு நிலைமையின்கீழ்த்தான், போர்க் குற்றச்சாட்டுக்களை மேலும் வலுப்படுத்தும் வகையில் மற்றுமொரு விவகாரம் தோன்றியுள்ளது.புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களின் உடல்களில் அல்லது உணவில் மெல்லக் கொல்லும் வகையில் விஷம் ஏற்றப்பட்டது என்பதுதான் அந்த விவகாரம்.இதனால்,105 பேர் இதுவரை மரணமடைந்துள்ளனர் என்ற செய்தி தமிழர் தரப்பை மேலும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

போர்க் குற்றச்சாட்டுக்கு சமமாக இந்த விவகாரமும் கையாளப்பட வேண்டும் என்றும், சர்வதேச நிபுணர்களைக் கொண்டு இவர்களின் உடல்கள் சோதிக்கப்பட வேண்டும் என்றும், இப்போது தமிழர்கள் தரப்பில் கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன. இது தொடர்பில் சோதனை நடத்துவதற்கு தயார் என்று அரசு தெரிவித்துள்ள போதிலும்,சோதனையின் முடிவில் உண்மை கண்டறியப்பட்டால் குற்றவாளிகள் அதாவது விஷமேற்றிய படையினர் தண்டிக்கப்படுவார்களா என்ற கேள்வி இப்போது தமிழர் தரப்பில் இருந்து முன் வைக்கப்படுகின்றது. போர்க் குற்ற விசாரணை நடத்துவதற்காக உள்ளகப் பொறிமுறை அமைக்கப்படும் என்று அரசு அறிவித்ததுமே அரசு-இராணுவ உறவில் வெடிப்பு விழத் தொடங்கியது. அந்த வெடிப்பை அடைப்பதற்காக அரசு கடந்த காலங்களில் படாத பாடு பட்டது.குற்றங்கள் நிரூபிக்கப்பட்டாலும் படையினர் தண்டிக்கப்படமாட்டார்கள் என்றும், வேறு வகையிலேயே பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கப்படும் என்றும் கூறி படையினருடனான உறவை சீர் செய்து வருகின்றது.

> போர்க் குற்றச்சாட்டுக்கு சமமாக இந்த விவகாரமும் கையாளப்பட வேண்டும் என்றும் சர்வதேச நிபுணர்களைக் கொண்டு இவர்களின் உடல்கள் சோதிக்கப்பட வேண்டும் என்றும் இப்போது தமிழர்கள் தரப்பில் கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன. இது தொடர்பில் சோதனை நடத்துவதற்கு தயார் என்று அரசு தெரிவித்துள்ளபோதிலும்,சோதனையின் முடிவில் உண்மை கண்டறியப்பட்டால் குற்றவாளிகள் அதவாது விஷமேற்றிய படையினர் தண்டிக்கப்படுவார்களா என்ற கேள்வி இப்போது தமிழர் தரப்பில் இருந்து முன்வைக்கப்படுகின்றது.



இந்த நிலையில்தான், படையினருக்கு எதிரான இன்னொரு குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டாலும் படையினர் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பது நிச்சயம். இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது நிவாரணத்தை வழங்கியே இந்தப் பிரச்சினைக்கு அரசு முற்றுப் புள்ளி வைக்கும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

மொத்தத்தில் படையினரைக் குற்றவாளிகளாகக் காட்டும் எந்தவொரு சம்பவம் தொடர்பிலும், தமிழர்கள் அரசிடம் இருந்து நீதியை எதிர் பார்ப்பது வீண்முயற்சியே.படையினரைத் தண்டிக்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது நிவாரணம் வழங்கியே நீதி என்ற ஒன்று நிலைநாட்டப்படும் என்பது உறுதி.

இதற்கு அப்பால் செல்வது, அரசின் இருப்புக்கு ஆபத்தாகிவிடும் என்று அரசு கருதுகின்றது. பாதிக்கப்பட்ட வர்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க அரசு விரும்பினாலும், அது முடியாத காரியமே. படையினர் விவகாரத்தை வைத்து-பேரினவாதத்தைத் தூண்டி அரசியல் லாபம் அடைவதற்கு ஒரு கூட்டம் காத்திருக்கும் நிலையில்,பாதிக்கப்பட்ட தமிழர்கள் நூறு வீதம் நியாயத்தை எதிர்பார்ப்பது பகல் கனவுதான்.

## உரிய தரப்பினர் கவனம் செலுத்துவார்களா?

விசர்நாய்க்கடிக்கு உள்ளான நபரொருவர் உரிய தடுப்பூசி போட்டுக் கொள்ளத் தவறியதால் மூன்று மாதங்களின் பின்னர் நீர் வெறுப்பு நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாக பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் தடுப்பூசி போடுவிப்பது தொடர்பாக சுகாதாரப் பகுதியினர் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த கடும் முயற்சி எடுத்து வருவது பாராட்டுக்குரியது. அதேபோன்று பொதுமக்கள் மத்தியிலும் விலங்கு விசர்நோய் அபாயம் குறித்து அக்கறையும் அதனைத் தடுப்பதற்காக தத்தமது வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு நோய்த் தடுப்பு ஊசி ஏற்றுவிக்கும் விடயத்தில் அக்கறையும் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமையும் பாராட்டத்தக்க தொன்றே .

ஆனால், கட்டாக்காலி நாய்களுக்கு இத்தகைய விலங்கு விசர் நோய் தடுப்பூசியை ஏற்றுவதற்கு சுகாதாரப் பகுதியினரால் இயலாத நிலையை அவதானிக்க முடிகிறதே. யாழ்.நகரில் மாலை 6 மணிக்குமேல் முக்கிய வீதிகளில் பயணிக்கும் சந்தர்ப்பம் கிட்டும் எவரும் கடை வாசல்களில் வீசப்படும் மீதி உணவுப் பொருள் பார்சல்களுக்குப் போட்டி போட்டுத் தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் கட்டாக்காலி தெருநாய்களது தொல்லைக்கு முகம் கொடுக்க நேர்கிறதே. சில சமயங்களில் ஆக்ரோசமாகத் தமக்குள் சண்டையிடும் அந்தத் தெருநாய்கள் தமதருகில் பாதையில் பயணிக்கும் பயணிகளைக் கடித்துக் காயப்படுத்த முனைவதையும் எம்மால் காண முடிகிறது.

அத்தகைய தெருநாய்களில் ஒன்றுக்கு விலங்கு விசர் நோய் ஏற்பட்டிருந்தால் அந்த நாயால் கடிபடும் எவரும் பாதிப்புக்கு உள்ளாக வாய்ப்புள்ளது. எனவே யாழ்.மாநகர சபை நிர்வாகமும், சுகாதாரப்பகுதியினரும் இதனைக் கருத்தில் எடுத்து, யாழ்.நகரத்தின் முக்கிய தெருவோரங்களில்கூடி, பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகைதொகையற்ற கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தி, அவற்றை அப்புறப்படுத்த முயற்சி மேற் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

த.வெற்றிவேலு
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## மூடநம்பிக்கைக் கருத்துக்களைப் புறம் தள்ளுவோம்

நான் நீண்ட காலமாகவே உதயன் பத்திரிகையின் ஓர் உண்மையான விசுவாசியும் அபிமானியும் ஆவேன். உங்கள் பத்திரிகை நாட்டின் அரசியல் இராணுவச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இராஜதந்திர ரீதியில் உங்களுக்கு உரித்தான பாணியில் செய்திகளை நடுநிலையுடனும் பத்திரிகை தர்மத்தை மீறாமலும் தமிழ் மக்களின் ஆதங்கங்களையும் வெளிப்படுத்தி பிரசுரித்து வருவதை நாம் அறிவோம். நவீன விஞ்ஞானம் அபரிமிதமான வளர்ச்சியுடன் முன்னேறி வரும் இன்றைய காலகட்டத்தில், மூடநம்பிக்கை சார்ந்த விடயங்களுக்கு மக்கள் மத்தியில் இடமேயில்லை. மூடநம்பிக்கைகள் எந்த ரூபத்தில் இருந்தாலும் அவை எங்கள் சமுதாயத்தில் இருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும். இதற்கு உதயன் போன்ற முன்னணிப் பத்திரிகைகள் உதவ வேண்டும்.

யதார்த்த நிலைமை இவ்வாறு இருக்க, கடந்த 05.08.16, 06.08.16 ஆகிய தினங்களில் உங்கள் பத்திரிகையின் 21 ஆம் பக்கத்தில் செல்வம் கொழிக்க என்ற தலையங்கத்தில் சில மூடநம்பிக்கைக் கருத்துக்களை பிரசுரித்துள்ளீர்கள். இவை போன்ற செய்திகள், கருத்துக்கள் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதுடன் எங்கள் அபிமான உதயனின் மதிப்பையும் குறைக்கக் கூடியவை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். உதயன் செய்துவரும், நல்ல, ஆரோக்கியமான விடயங்களை மட்டும் பாராட்டுவது என் (மக்களின்) வேலை அல்ல. உதயன் செய்யக்கூடிய இவ்வாறான தவறுகள் என நான் கருதுபவைகளையும் நீங்கள் கருத்திற் கொள்ள வேண்டும். எனவே மேற்படி என் கருத்துக்களையும் தங்கள் கவனத்தில் எடுத்து வாசகர் திருமுகம் பகுதியில் பிரசுரித்தோ அல்லது இப்படியான மூடநம்பிக்கைக் கருத்துக்களை இனிமேலாவது தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்காமல் விட்டோ, விஞ்ஞான நம்பிக்கைக்கு முன்னுரிமை கொடுப்பீர்களா?

எம்.நெடுமாறன், ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப
... அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம்.
... படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.
எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாலைவேளை இத்தாலியில் நிலநடுக்கம்

## 38 பேர் சாவு; பல கட்டடங்கள் சேதம்



ரோம், ஓக.25

இத்தாலியில் நோர்சியா நகரில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் 6.2 என இது பதிவாகியதாக அமெரிக்க பூகோளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். இதனால் இதுவரை 38 பேர் உயிரிழந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்பட்டது.

6 மைல்கள் ஆழத்தில் நில அதிர்வு உணரப்பட்டது. இந்த நில நடுக்கத்தின் அதிர்வு ரோமிலும் உணரப்பட்டது. நோர்சியா நகரில் 10 கிலோ மீற்றர் அளவுக்கு நிலம் அதிர்ந்ததாகவும், இதனால் கட்டடங்கள் பல சேதமாகியுள்ளன எனவும், உடனடியாகக் கிடைக்கப் பெற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலாவது அதிர்வின் பின்னர் ஒரு மணி நேரத்தின் பின் நோர்சியா நகரின் வட கிழக்குப் பகுதியிலும் 5.5 ரிச்டர் அளவில் அதிர்வு உணரப்பட்டது. அதிகாலை 3:30 மணியளவில் இடம்பெற்ற நில நடுக்கத்தால், சேத விவரம் குறித்த அறிக்கை இன்னமும் வெளியிடப்படவில்லை.

ஆனாலும், மலைப் பிரதேசம் அமட்றைஸில் கட்டடங்கள் சேதமடைந்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது என உள் துறை அமைச்சு தெரிவித் தது.

மிகுந்த பொருளாதாரச் சேதத்தை ஏற்படுத்தியது என தெரிவிக்கப்பட்ட போதும், உயிரிழப்புகள் தொடர்பில் இன்னமும் சரியான தகவல் வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் மீட்புப்படை வீரர்கள், மீட்புப்பணியில் துரிதமாகச் செயற்பட்டு வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (த-ரி4)

# குருதிக் கண்ணீர் வடிக்கும் மாதா

## பொலிவியாவில் அற்புதம்



சேக்ரீ, ஓக.25

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் பியுரோறிக்கோ பகுதியில் உள்ள தேவாலயத்தில் அமைந்துள்ள மாதா சிலையில் இருந்து குருதி வடிந்ததால் பரபரப்பு ஏற் பட்டுள்ளது. மாதாவின் கண்கள், கைகள் ஆகியவற்றில் இருந்து குருதி வடிவதாகக் குறித்த தேவாலயத்தின் பங்குத் தந்தை அறிவித்தார். இதனையடுத்து இந்த அற்புதத்தைப் பார்க்க நூற்றுக்கணக்கான மக்கள் படையெடுத்தனர்.

அத்துடன் வழியும் குருதி குறித்து ஆய்வு செய்ய குருதி மாதிரிகள் ஆய்வு கூடத்துக்கு எடுத்தச் செல்லப்பட்டுள்ளன. மாதா குருதிக் கண்ணீர் வடிப்பதை நேரில் பார்த்தேன் எனப் பலரும் பூரிப்புடன் தெரிவித்தனர். வத்திக்கான் அதிகாரிகள், இந்தச் சம்பவத்தை அற்புதம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளனர். உலகில் இடம்பெறும் சம்பவங்களில் ஒரு சில மட்டுமே வத் திக்கான் அதிகாரத் தரப்பால் அற்புதம் எனப் பிரகடனப் படுத்தப்படுவது வழமையாகும். (த-ரி4)

# தாக்குதலில் காயமுற்றார் போகோஹறாம் தலைவர்

## நைஜீரியக் காட்டில் சம்பவம்

அபுஜா, ஓக.25

போகோஹறாம் அமைப்பின் தலைவர், நைஜீரிய இராணுவத்தினரின் வான் தாக்குதலில் காயமடைந்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்லாமியப் போராளிகள் பிரார்த்தனைக்காக ஒன்றுகூடிய வேளையில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, நைஜீரியப் பிராந்தியத்தின் பாதுகாப்பை ஊக்குவிக்கவும், சமாதானப் பேச்சில் கலந்து கொள்ளவும் நைஜீரியா சென்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

போகோஹறாம் அமைப்பின் தலைவர் அபுபக்கர் சேக்கு உட்பட பல முக்கிய போராளிகள் காயமடைந்ததுடன், பலர் கொல்லப் பட்டதாகவும் நைஜீரிய இராணுவத் தளபதி நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

மேலும், கடந்த வெள்ளிக்கிழமை தொழுகைக்காகச் சாம்பிசா காட்டில் அமைந்துள்ள, ராயி கிராமத்தில் அனைவரும் ஒன்று கூடியபோது வான் தாக்குதல்கள் இடம்பெற்றன.

தலைநகர் அபுஜாவில், நைஜீரிய ஜனாதிபதி முகமது புகாரி, நைஜீரிய இஸ்லாமியத் தலைவர் சுல்தான், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி ஆகியோர் பேச்சுக்குத் திட்டமிட்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.



இந்தச் சம்பவம் தொடர்பில் கெரி, தீவிரவாதம் தொடர்பான கொள்கைகளை உடைத்து, வன்முறைகளில் இருந்து வெளியேற வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையில் போகோஹறாம் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டதாகப் பலமுறை தகவல்கள் வெளியானமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் மற்றுமொரு [illegible] அமைப்புடன் இவர்கள் நட்புப் பாராட்டி வருகின்றதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-ரி4)

தாக்குதலில் கொல்லப்பட்ட முக்கிய போராளிகளின் பெயர்[illegible] படுத்தியதுடன், அதிக எண்ணிக்கையான போராளிகள் காயமடைந்துள்ளதாகவும் அவர் கூறி னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருளுக்கு எதிராக பிலிப்பைன்ஸில் பொலிஸ் அதிரடி

## 1,900 பேர் இதுவரை கொலை

மனிலா, ஓக.25

பிலிப்பைன்ஸில் போதைப் பெருளுக்கு எதிராக இடம்பெற்ற அதிரடி நடவடிக்கையில் இதுவரை ஆயிரத்து 900 பேர் கொல்லப்பட்டனர் என அந்த நாட்டுப் பொலிஸ் அதிகாரி ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்துத் தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதி றொட்றிகோ டியூட்ரேட் பதவிக்கு வந்த 7 வாரங்களில் இவ்வாறான அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்ட்டு வருகின்றன. இதனால் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு தலா 36 பேர் கொல்லப்பட்டனர் என அவர் தெரிவித்தார். கொல்லப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

போதைப் பொருள் பாவனையாளர்கள், கடத்தல்காரர்கள் ஆகியோருக்கு எதிராக எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதும், அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர். நாட்டில் 7 இலட்சம் போதைப் பொருள் பாவனையாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், புதிதாக ஆட்சி அமைத்துள்ள ஜனாதிபதி போதைப்பொருளை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்தார். இதனை அடுத்து இவ்வாறான அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

உயிரிழந்தவர்களில், 750 பேர் போதைப் பொருள் கடத்தலில் நேரடித் தொடர்புடையவர்கள் என்பதால் பொலிஸார் சுட்டுக்கொன்றனர். கடத்தல், கொள்ளைச் சம்பவங்களில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். ஏனையோரின் கொலை தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றார் பொலிஸ்மா அதிபர்.

அத்துடன் 300 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும், அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸில் இடம்பெற்றுள்ள போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கையை அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு கண்காணித்து வருகின்றது. போதைப்பொருளுக்கு எதிராக, பிலிப்பைன்ஸ் அதிபரின் வன்முறைச் செயலை ஏற்கமுடியாது என நியூயோர்க் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (த-ரி4)




## தலமும் இருப்பிடமும்

தட்சிணகைலாச மகாஷேத்திரங்கள் இருக்கப் பெற்றதும் சுவர்க்கத்திலும் பார்க்க அழகுள்ளதுமாகிய இலங்கையின் வடபாகத்தில் வீணாகான புரமென்று சொல்லு கின்ற யாழ்ப்பாணத்தில் மேற்குத்திக்கில் நீர் நிறைந்த குளங்களும் வயல்களும் முன்னே இருக்கவும், உவர் நீரக் கடலும் சமுத்திரமும் தெற்கு, மேற்கு திசைகளில் பொருந்தவும் பெற்றதாய் இவற்றுக்கு நடுவண் சதுரங்கமென்னும் மணற் பூமியில் பொன்னாலயம் என்னும் திவ்யஸ்தலம் இருக்கின்றது. ஆலயத்துக்கு முன்னே குறுக் காகச் செல்லும் தெருக்கரை மார்க்கமாகப் பருத்தித்துறைக்குப் போகலாம். ஆலயத் துக்குமுன் (கிழக்கு மேற்காகச்) செல்லும் மண்தெரு, மூளாய் மார்க்கமாக யாழ்ப்பா ணம் செல்லும் பிரசித்தமான தெருவைச் சந்திக்கிறது.

**தலப்பெயர்கள்**

இத்தலத்துக்கு சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

**சுவர்ணாலயபுரி**

இந்திரன் வசிக்கப்பெற்றதனாலும் இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றிய படியாலும் இப்பெயர் பெற்றது.

**சதுரங்கம்**

ஆலய் உற்பத்திக் காலத்தில் கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெரு மணலில் ஆமையானது விடப்பட்டுக் கல்லானவுடன் அவ்விடத்திலேயே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் இப்பெயர் உண்டாயிற்று. அரங்கம் என்பது விட்டுணுவுக்கு பிரீதியாக அமைந்த தலப் பெயர் பாரத நாட்டிலும் ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் எனப் பல அரங்கங்கள் உள்ளன.

**பொன்னாலயம்**

முன்னொரு காலத்தில் விட்டுணு மூர்த்தியை மகாலக்குமி பூசித்த ஸ்த லம் பொன்னென்னும் பல [illegible]ருளொரு சொல் ஈண்டு இலக்குமியைக் குறித்து நின்றது. அன்றி பொன்னம்பலம் பொன்னரங்கம் என்பன போல இதுவும் ஒரு காலத்துப் பொன்னால் அமைந்த ஆலயமாய் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

**கோயிலமைப்பு**

இந்த ஆலயம் பொன்னாலை என்னும் கிராமத்தின் மேற்கே கிராமத்தைப் பார்ப்பது போல் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் மிக அழகாக விளங்குகின் றது. இதற்கு இப்போது இரு பிரகாரங்களே உள. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஏழு பிரகாரங்கள் இருந்தன. அவற்றில் ஏழாவது பிரகாரத்தின் முன்னுள்ள கணேசர் ஆலயம் இப்போதும் உள்ளது.

இப்போது தேர் ஓடும் வீதியில் அதாவது கோயிலுக்குப் போகின்ற முன் னமைப்பில் இவ்வாலயத்தோடு புராதனமாயமைந்தவரும் வரந்தருபவரு மான நரசிங்க பைரவர் வீற்றிருந்தருளுகின்றார். உட்பிரகாரத்தில் தெற்கே நாகதம்பிரான், வட மேற்கே சனீஸ்வரன் கோயிலும், வடக்கே தீர்த்தக் கிணறும் வன்னியும் அடுத்தாற்போல நவக்கிரக கோயிலும் வசந்த மண்ட பமும், ஈசான திசையில் யாக மண்டபமும் இருக்கின்றன.

**தலப்பெருமை**

செய்தற்கு அரிய பெரிய திருப்பணி குளக்கோட்டு மகாராசனால் செய் யப்பட்டது. அவனால் அக்காலத்தில் அமைக்கப்பட்ட ஏழு வீதிகளும் பின்னே ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களாகக் கட்டப்பட்டன. இப்போதும் சீரிய முறையில் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னே புலவர்களாலும் பக்தர்களாலும் பாடப்பெற்ற பதிகங்கள் அநேகம் இப்போது இல்லாமல் போயின. சிலவே உள்ளன. பறாளாய் விநாயகர் பள்ளு என்ற நூலில் இத்தலப் பெருமை கூறப்பட்டுள்ளது. ❋

## ★★★★★★★★★★ பிரசுர அனுசரணையாளர்கள் ★★★★★★★★★★

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
கட்டடப் பொருள்கள், (மண், கல் சிமேந்து உட்பட)
பல சரக்குப் பொருள்கள், கோயில் அபிஷேகப் பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வட்டுக்கோட்டை. 021 225 0787

**செல்வா ஹாட்வெயார் அன் எலக்ரிக்கல்ஸ்**
எல்லாவிதமான எலக்ரிக்கல் பொருள்களும் விற்கப்படும்.
தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.

**பாலன் மில்ஸ்**
**BALAN MILL**
3kg முதல் 3000kg வரை
தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய் வகைகள் வடித்துக் கொடுக்கப்படும். மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும். அரிசி வகைகள், அரிசி மா என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.
உரிமையாளர்:
ச.தி.சோமசுந்தரம் தனபாலன் T.P: 021 321 2624

**ஸ்ரீ வரதராஜா வெதுப்பகம்**
[illegible] வகைகள்
சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, சுழிபுரம்.

**ஸ்ரீமுருகன் புத்தகசாலை**
**நியூ அக்ரோ சென்ரர்**
சகலவிதமான புத்தகங்கள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், விவசாய உரம், கிருமி நாசினிகள் உபகரணங்கள் விற்பனைநிலையம்.
சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பு.

**நகுலேஸ் ஹாட்வெயார்**
கட்டடப் பொருள்கள் (மண், கல் உட்பட) பெயின்ற் வகைகள் யாவும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
தெல்லிப்பழை வீதி, பண்டத்தரிப்பு.
தொடர்பு: 077 717 4445

**சிவம் களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலைக்கு பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
வழக்கம்பரை, சுழிபுரம்.
077 721 7304 / 021 225 0160

**கரன் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

**ஸ்ரீமுருகன் களஞ்சியம்**
LITRO GAS 2015ஆம் ஆண்டு சிறந்த விற்பனையாளருக்கான விருதுபெற்ற ஒரே நிறுவனம்.
மூளாய் வீதி, மாவடி, வட்டுக்கோட்டை.

**சிவாஸ் மில்**
சகலவிதமான தானிய வகைகளும் அரைத்துக் கொடுக்கப்படும்.
பிள்ளையார் கோயிலடி, காரைநகர் வீதி, மூளாய்.

**சஜீவன்**
பல்பொருள் வாணிபம்
(உதயன் பத்திரிகை முகவர்)
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**கணேசா ஹாட்வெயார் அன் எலக்ரிகல்**
கட்டட பொருள்கள் பெயின்ட் வகைகள், கூரை சீற்றுகள், எலக்ரிக் [illegible] பெற்றுக்கொள்ளலாம்.
காரைநகர் வீதி, மூளாய்.

**கணேஸ் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைக்கு பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

குருப் பெயர்ச்சி, ஒகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை சஷ்டிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுபப்பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

## தனுசு

### மூலம், பூராடம், உத்தராடம், 1ஆம் பாதம் வரை



முல்லைப்பூ சூடும் குருவால் முன்னேற்றப் பாதையில் இருந்த முட்டுக் கட்டைகள் விலகும். கண்ணூறுபடும் விதத்தில் முன்னேற்றம் வரப்போகிறது.

உத்தியோக மாற்றம் உறுதியாகும். உடலில் ஏற்பட்ட வியாதி அகலும். மங்கல நிகழ்ச்சி இல்லத்தில் நடைபெறும். அத்தனைக்கும் மேலாக இந்த குருப்பெயர்ச்சி, ஆற்றலைப் பளிச்சிட வைத்து அதிகாரத்துவ யோகத்தைக் கொடுக்கப்போகிறது.

இரண்டாம் இடத்தைப் பார்க்கும் குருவால் இல்லத்தில் நல்லது நடக்கும். இடம், சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். நான்காம் இடத்தைக் குரு பார்த்தால் தாயின் ஆதரவு கிடைக்கும். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். புகழ், கீர்த்தி அதிகரிக்கும். புனிதப் பயணங்கள் வந்து சேரும். ஆறாமிடத்தைக் குரு பார்ப்பதால் பகைமாறி பாசம் கூடும். எதிரிகள் விலகுவர்.

குரு.பகவான் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை): அரசியல் வானில் கொடிகட்டிப் பறக்கும் யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரும். தந்தை வழி ஒத்துழைப்பும், தனலாபமும் வந்து சேரும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பங்காளிப் பகை மாறும். நினைத்த காரியங்களை உடனடியாகச் செய்து முடிக்க நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

குருபகவான், சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை) எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். இந்த நேரத்தில் திசா புத்திக்கேற்ப தெய்வப் பிரார்த்தனைகளை தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது. குருபகவான், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை): விரயங்கள் அதிகரிக்கும். வீடுமாற்றச் சிந்தனை மேலோங்கும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

தனுசு ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சியில், வழிபாட்டின் மூலமே வளர்ச்சி காண முடியும். குடும்பச் சுமை கூடும். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். உடல்நலத்தோடும், உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள். கணவன்–மனைவிக்குள் அன்பும், பாசமும் பெருகும். குழந்தைகளால் பிரச்சினைகள் அடிக்கடி உருவாகலாம். பெற்ற குழந்தைகளை பின்னணியாக இருந்து கவனித்துக் கொள்வது நல்லது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ரக காலம்**

இந்த முறை குருபகவான் வக்ரம் பெறுவதோடு, அதிகாரமும் பெற்று, துலாம் ராசியில் சஞ்சரிக்கிறார். குரு அதிகாரம் பெறும்பொழுது உங்கள் ராசிக்கு 3,5,7 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே இந்தக் காலத்தில் நன்மைகள் நடைபெறும். பிரச்சினைகள் ஓயும். பிள்ளைகளால் நன்மை கிட்டும். வக்ர கதியில் குரு இயங்கும் பொழுது, ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் பதற்றம் கூடும்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபாடு செய்யுங்கள். நாக சாந்திப் பரிகாரம் செய்வது, ஏற்றஇறக்கமில்லாத வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

# கிருஷ்ணனுக்கு இன்று இனிய பிறந்தநாள்!

இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல காத்தல் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் தாமே பரப்பிரம்மம் என்ற பரம்பொருளாகக் காட்டுவதற்கு ஸ்ரீ கிருஷ்ணனாக அவதாரம் எடுத்த நல்ல நாள் இன்றாகும். இன்றைய நல்ல இனிய கிருஷ்ண ஜெயந்தி தினத்தை அவனுடைய அடியார்கள் அனைவரும் பெரிய திருநாளாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இன்றைய இந்த நல்ல நாள் ஒரு புனிதம் நிறைந்த மிக மகோன்னதமான புண்ணிய நாளாகக் கருதப்படுகின்றது. அனைத்து உயிர்களையும் காத்து இரட்சிக்கின்ற கிருஷ்ண பகவானுடைய ஜனன தினமான ஆவணி மாதத்து கிருஷ்ண பட்சத்து அட்டமித் திதியும் ரோகிணி நட்சத்திரமும் ஒன்றாக இணைந்து கூடிவரும் நள்ளிரவு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியாகும்.

இந்தப் புண்ணிய தினம் மகாவிஷ்ணு மூர்த்தியின் பெருமாள் கோயில்களில் பெருவிழாவாகக் கொண்டாடப்படும். விஷ்ணு பக்தர்கள் இன்று விரதமிருந்து கிருஷ்ண ஜெயந்தியின் போது நாராயண தோத்திரங்களையும் தாலாட்டுப் பாடல்களையும் பாடிக் கண்ணன் பிறந்த பிற்பாடு நாளைக் காலை பாறணை பண்ணி விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

கிருஷ்ணனுக்குரிய இந்த விரத நாளில் துளசி இலையால் பூ மாலை போலத்தொடுத்து பகவானுக்குச் சாத்தக் கொடுக்கவேண்டும். யசோதையின் வயிற்றில் இருந்து நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பகவான் பிறந்ததாகக் கூறப்படுகிறது. வெண்ணெய் திருடி உண்ட கிருஷ்ணன் குறும்புகள் பல செய்து திருவிளையாடல் புரிந்ததாகவும் புராண வாயிலாக அறிகின்றோம். பெண்கள் குளிக்கும்போது ஆடைகளை ஒளித்து வைத்து விளையாடியதாகவும், பின்னலைப் பின்னின்று இழுத்ததாகவும், பழங்கள் பலவற்றைக் கடித்துத் தின்றதாகவும், எச்சிற்படுத்திக் கொடுத்ததாகவும் அறிந்த யசோதை குறும்பு தாங்க முடியாமல் கிருஷ்ணனை உரலிலே கட்டிப் போட்டதாகவும் சொல்லப்படுகிறது. இன்றைய கிருஷ்ண ஜெயந்தி முடிந்த நாளைய தினம் உறியடி உற்சவமும் நடைபெறுவது பெருமாள் கோயில்களில் வழக்கமாகும். இந்த விரதம் நோற்பவர்கள் இன்று முழுநாளும் எதுவும் உண்ணாமல் நோன்பு காத்து நள்ளிரவு கண்ணன் பிறந்ததும் கோபிகாணங்கள் பாடித் தோத்திரங்களையும், பக்திப் பாடல்களையும் அன்போடு இசைத்து நாளைக் காலை பெருமாள் கோயிலில் வழங்கப்படும் காயம் வாங்கியுண்டு விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

துளசி என்னும் கற்புக்கரசிக்குப் பிரம்மா காட்சிகொடுத்து வரங்களை ஈந்தார். அதே நேரத்தில் இராதையால் சபிக்கப்பட்ட சுதாமன் என்பவனும் சங்கசூடன் என்ற பெயரில் பூமியில்வந்துபிறந்தான். அவனுக்கும்துளசிக்கும்திருமணம் நடந்தது. துளசி மிகுந்த் பக்தியுடன் கணவனே கண்கண்ட தெய்வம் என்று கற்புக்கரசியாக வாழ்ந்து வந்தாள்.

சங்கசூடன் தன் இஷ்டப்படி தேவர்களுடன் முரண்பட்டுப் பல கொடுமைகளைச் செய்தான். அதனால் சங்கசூடனை அழித்து விடுமாறு தேவர்கள் கிருஷ்ணரை வேண்டவே கிருஷ்ணன் போர் தொடுத்தான். போரிலே கிருஷ்ணரால் சங்கசூடனைக் கொல்ல முடியவில்லை. துளசியின் கற்பு அவனைக் காப்பாற்றியது. இதையறிந்த கிருஷ்ணன் சங்கசூடனைப் போல மாறுவேடம் பூண்டு ஒரு மாலையுடன் துளசி இருக்குமிடம் சென்றார். அவளும் தனது கணவன் என நினைத்துப் பாதபூசை செய்தாளாம். அதனால் துளசியின் கற்புக்குப் பங்கமேற்பட்டது. அதற்குப் பிறகு நடந்த போரில் சங்கசூடன் கொல்லப்பட்டான். நடந்தவற்றை அறிந்த துளசி கிருஷ்ணனைக் கோபித்து, பகவானாக இருக்கும் நீங்கள் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு மனிதரைப்போல நடந்து என் கணவரைக் கொன்று விட்டீர்களே. ஆதலால் கல்லாகிப் போவீராக என்று சாபமிட்டாள். உடனே இராதை பகவானுக்கே சாபம் கொடுத்தால். நீ மனித ஜென்மத்தை விட்டு ஒரு செடியாகக் கடவாய்! என்று அவளும் சாபங்கொடுத்தாள். அந்தவேளையில் அங்கே வந்த நாரதர் இராதையை ஒருவாறு சாந்தப்படுத்திச் சமாதானமாக்கி பகவான் பத்தினி சாபத்தால் கண்டகி நதியில் கல்லாக மாறியிருப்பார். வஜ்ரகிரீடம் என்ற பூச்சி அந்தக் கல்லைத் துளைத்து பல விதவிதமான வடிவங்களை உண்டாக்கும். அந்தக் கல் வடிவங்கள் சாளக்கிராமம் என்று அழைக்கப்படும். [illegible] அவளு [illegible] ஜென்மத்தில் கிருஷ்ணனைச் சேருவாள் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும்அன்றிலிருந்து யார் யார் துளசியைச் சாளக்கிராமத்தோடு (கிருஷ்ணனோடு) சேர்த்து வழிபாடாற்றுகிறார்களோ, அவர்களுக்கு நன்முத்தி நிச்சயம். துளசிச் செடியால் கிருஷ்ணனை வழிபட்டுப் பூஜிக்கின்றவர்கள் தீர்க்க சுமங்கலிகளாக வாழ்வார்கள். கலியுகத்தில் துளசிச் செடி அருமருந்தாக அடியார்களுக்குப் பயன்படும் என்று துளசிப் பெண்ணின் பெருமைகளையும் எடுத்துக் கூறினார். இது முதலாக கிருஷ்ண பகவானுக்குத் துளசி இலை பூசைப்பொருளாக மாறியது.



இன்று விரதமிருந்து நல்வாழ்வு வாழ அவன் திருவருளையே நாடி நிற்போமாக.



# கடல் விழுங்கும் கிராமம்!

> முஸ்லிம்களின் தனிப் பெரும் அரசியல் தலைவர்களென மார்தட்டிக் கொள்ளும் சிலரது கண்கள் ஒலுவில் கடலரிப்பு விடயத்தில் திறந்துள்ளதாகத் தெரிகின்றபோதிலும் அதிலும் நீயா?நானா? சித்து விளையாடத் தொடங்கியுள்ளதாகவே தெரிகிறது. அமைச்சராகவிருக்கும் முஸ்லிம்கட்சி ஒன்றின் தலைவர் ஒலுவில் கடலரிப்பு விவகாரத்துக்குத் தீர்வு காணும் நோக்குடன் துறைமுக அதிகார சபை உயரதிகாரிகளுடன் பேசி அந்த அதிகாரிகளை நேரில் அழைத்து வருவதாகவும் உரிய திகதியை ஊடகங்கள் மூலம் அறிவித்தார். அவ்வளவுதான் முஸ்லிம்களின் தலைவன் நான்தானே என முழங்கும் மற்றொரு முஸ்லிம் கட்சியின் தலைவரும் அமைச்சருமான மற்றொருவர் அடித்து விழுந்து ஓடோடி ஒலுவிலுக்கு வந்துள்ளார்.

ஏ.எல்.எம்.சலீம்



கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒலுவில் கிராமம் தனி முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமமாகும்.

பிரதானமாகக் கடல்வளத்தின் மூலம் மீன்பிடித்தொழிலை நம்பி வாழ்ந்தவர்கள் இந்தக் கிராம மக்கள்.

பெரும்பான்மை முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அந்தக் கட்சிக்கு முழு ஆதரவு வழங்கும் கிராமம் இது.

இதனாலும் தனிப்பட்ட பிடிப்பினாலும் மறைந்த முஸ்லிம் காங்கிரஸின் நிறுவுநர் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்தக் கிராமத்தையும் இங்குள்ள மக்களையும் மிகவும் நேசித்தார்.

இந்த நேசத்தின் பிரதி பயனாகவே அவரது எண்ணக்கருவில் ஒலுவில் துறைமுகமும் ஒலுவில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் உருவாகக் காரணமாக அமைந்தன.

ஆனால் அஷ்ரப்பின் மறைவுக்குப்பின் அவரது நல்நோக்கு முன் கொண்டு செல்லப்படாததும் பின்வந்த தலைமையின் அசண்டையீனமும் இன்று ஒலுவில் மக்களைப் பெரும் துயருக்கும் அல்லலுக்கும் உள்ளாக்கியுள்ளது.

## துறைமுகம்

குறிப்பாக ஒலுவில் துறைமுகத்துக்கென சுமார் 300 ஏக்கர் காணியை 2017 இல் ஒலுவில் கடற்கரைப்பிரதேசத்தில் அரசு சுவீகரித்துக் கொண்டது.

இதனால் தமது வளம் பொருந்திய தென்னம் தோட்டங்களையும் காணிகளையும் இழந்தவர்களுக்கு முழு நட்டஈட்டுத் தொகையும் இதுவரை வழங்கப்படாத நிலமை நீடித்து வருகின்றது.

அன்று துறைமுக வேலைக்காக ஒலுவில் கடல் நீரேந்துப்பகுதி பெரிய கற்கள் கொண்டு மூடப்பட்டது.

இதன் விளைவால் ஏற்பட்ட கடலலை நகர்வுகள் துறைமுகத்துக்கு அடுத்துள்ள பிரதேசங்களை ஆட்கொண்டது. இதன் தொடர் கடலரிப்பு விளைவுகளால் சுமார் 600 மீற்றர் தூர நிலப்பரப்பைக் கடல் தன்வயப்படுத்திய தகவலுமுண்டு. துறைமுகநிர்மாணம் தொடர்பிலான ஆரம்ப ஆய்வு அறிக்கைகள் புறந்தள்ளப்பட்டதாகவும் இப்பொழுது பேசிக் கொள்ளப்படுகின்றது.

## மீனவர் பாதிப்பு

இதேவேளை இத்துறைமுக நிர்மாணத்தால் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடல் மீன்பிடி வெகுவாகக் குறைந்து மீனவர்கள் வாழ் வாதாரத்தில் பேரிடியும் விழுந்துள்ளது.

இந்த நிலையில்தான் கடலரிப்பு படுமோசமாக அதிகரித்துள்ளது. கொஞ்சம் கொஞ்சமாக ஒலுவில் கிராமத்தை இன்று கடல் விழுங்கிக் கொண்டிருக்கின்றது.

சுமார் 2 சதுர கிலோமீற்றர் நிலமும் அதிலிருந்த தென்னை மரங்களும் கட்டடங்களும் நீர்த்தாங்கியும்கூட ஏற்கனவே கடலால் அடித்துச் செல்லப்பட்டு விட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடலோரத்தில் எஞ்சியிருக்கும் சுற்றுலா விடுதியும், வெளிச்ச வீடும்கூட கடலால் விழுங்கப்பட்டு விடக்கூடிய அபாயமுள்ளது.

இப்பொழுது உக்கிரமடைந்துள்ள கடலரிப்பைத்தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு எதிராக ஒலுவில் மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளனர்.

அண்மையில்கூட ஒலுவில் மக்கள் திரண்டு இந்த அரசியல்வாதிகளின் கவனத்தைத் திருப்பவென ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றையும் நடத்தினர்.

## கண் திறந்ததா?

இதன் பின்னர் முஸ்லிம்களின் தனிப் பெரும்அரசியல்தலைவர்களென மார்தட்டிக் கொள்ளும் சிலரது கண்கள் ஒலுவில் கடலரிப்பு விடயத்தில் திறந்துள்ளதாகத் தெரிகின்ற போதிலும் அதிலும் நீயா? நானா? என்ற போட்டி விளையாடத் தொடங்கியுள்ளதாகவே தெரிகிறது. அமைச்சராகவிருக்கும் முஸ்லிம்கட்சி ஒன்றின் தலைவர் ஒலுவில் கடலரிப்பு விவகாரத்துக்குத் தீர்வுகாணும் நோக்கு டன் துறைமுக அதிகார சபை உயரதிகாரி களுடன் பேசி அந்த அதிகாரிகளை நேரில் அழைத்து வருவதாகக்கூறி உரிய திக்தியை ஊடகங்கள் மூலம் அறிவித் தார்.

அவ்வளவுதான் முஸ்லிம்களின் தலைவன் நான்தானே என முழங்கும் மற்றொரு முஸ்லிம்கட்சியின் தலைவரும் அமைச்சருமான மற்றொருவர் அடித்து விழுந்து ஓடோடி ஒலுவிலுக்கு வந்தார்.

கூடவே துறைமுக அதிகார சபை அதிகாரிகளையும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளையும் அழைத்து வந்து முன்கூட்டியே மக்களை மறக்காத தன் சேவையின் சிறப்பை வெளிப்படுத்தினார்.

முஸ்லிம் அரசியல் நிலமை, தலைவர்களின் சமூகப்பற்று, சேவை எந்த உச்சாடத்திலிருக்கிறது பார்த்தீர்களா? என ஒலுவில் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அத்துடன் எமது தலைவர்கள் எனப்படுவோரின் சேவைவேகம், ஒலுவிலை கடல் கொஞ்சம், கொஞ்சமாக விழுங்கும் வரை எங்கு முடங்கிக் கிடந்ததோ? எனவும் கேள்வி எழுப்புகின்றனர்.


## கோரிக்கை

ஒலுவில் துறைமுகத்தினால் ஏற்பட்ட கடலரிப்புக்கு நிரந்தரத் தீர்வினை அரசு பெற்றுத்தர வேண்டும் என்றும், துறைமுக அபிவிருத்தி என்ற பெயரில், நிம்மதியிழந்து அபாயத்தை எதிர் நோக்கியிருக்கும் தமக்குத் தற்காலிக தீர்வு தேவையில்லை என்றும், பெரிய கற்களை கடல் அலைத்தடுப்புக்குப் போடுவதற்குப் பதிலாக அணை அமைத்துத்தர வேண்டுமெனவும் ஒலுவில் மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நடக்குமா காரியம்? கிடைக்குமா நிம்மதி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம் வாங்க...




# வரலாற்றில் இன்றைய தினம்

1543 - ஜப்பானில் முதன்முதலாக ஐரோப்பியர் வருகையுடன் சுடு கலன்களும் வந்து சேர்ந்தன.
1580 - அல்காந்தரா போரில் ஸ்பெயின் போர்த்துக்கல்லைத் தோற்கடித்தது.
1609 - வெனெரியன் சட்டவாளர்களுக்குத் தனது முதலாவது தொலைநோக்கியைச் செயற்படுத்திக் காட்டினார்.
1630 - இலங்கை ரந்தெனி வெலவில் கண்டி அரசால் போர்த்துகேயப் படைகள் தோற்கடிக்கப்பட்டன.
1825 - பிரேசிலிடமிருந்து, உருகுவே சுதந்திரப் பிரகடனம் செய்தது.
1830 - பெல்ஜியப் புரட்சி தொடங்கியது.
1875 - ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதலாமவர் ஆனார் கப்டன் மத்தியினது லெப்.இங்கிலாந்து டோவரிலிருந்து, பிரான்ஸ் கரையை 22மணித்தியாலத்தில் சென்றடைந்தார்.
1898 - 700 கிரேக்க குடிமக்களும், 17 பிரித்தானிய பாதுகாவலர்களும், கிறீன் தீவுத் தூதுவரும் துருக்கிய கும்பலொன்றால் கிரேக்க ஹெறக்ளினில் படுகொலை செய்யப்பட்டனர்.
1933 - சீன சிச்சினில் டயக்ஸி நிலநடுக்கத்தில் 9,000 பேர்வரை உயிரிழந்தனர்.
1939 - தேவைப்படும்போது வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து போலந்தைக் காப்பாற்றும் உறுதிப் பிரமாணத்தை போலந்து இராணுவக் கூட்டு ஏற்படுத்தியது.
1950 - வேலை நிறுத்தம் ஒன்றை முறியடிப்பதற்காக, தேசிய புகையிரதப் பாதையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு இராணுவத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஹாரி ரூமன் கட்டளை.
1980 - சிம்பாவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இணைந்தது.
1981 - வொஜேயர் 2 விண்கலம் சனிக் கிரகத்தை நெருங்கியது.
1989 - வெஜேயர் 2 விண்கலம் சூரிய குடும்பத்தில் இரண்டாவது கடைசிக் கிரகமான நெப்ரியூனை நெருங்கியது.
1991 - பெலாரஸ், சோவியத்யூனியனிடமிருந்து சுதந்திரம் பெற்றது.
1992 - வைத்தியசாலையில் வைத்து தயான் ஜயதிலகவுக்கு ஜே.ஆர். ஜயவர்த்தன சார்பில் நோட்டீஸ் கையளிப்பு.
1995 - யாழ்.மக்களின் அவல நிலை குறித்து ஐ.நாவுக்கு விவரமாக அறிக்கையென இங்கு வந்த ஐ.நா.அதிகாரி ஹொலண்ட் ஹட்சன் தெரிவிப்பு.
2005 - எதிர்காலத்தில் தமிழ்மொழி மூலமான கல்வித்துறை எந்தவித பாரபட்சங்களுக்கும் உள்ளாகாதென ஜனாதிபதி சந்திரிகா உறுதி.
2006 - இலங்கை நெருக்கடி தொடர்பாக இராஜ தந்திர மட்டங்களில் ஒஸ்லோவில் ஆலோசனை. சொல்ஹெய்ம்-ரணில்-ஷியாம் சரண் தனித்தனியாகவும் கூட்டாகவும் சந்திப்பு.

# உலகப் பழமொழிகள்

**ஆஸ்திரேலியா**

1. அறிவுள்ள குழந்தை மகிழ்ச்சியுள்ள தந்தையை உருவாக்குகிறது.
2. நான்கு கால்களுள்ள குதிரையும் வழுக்கி விழும்.
3. காலத்துக்குப் பொருந்த உரைப்பது கவலையைக் குறைக்கிறது.
4. ஐந்து வயது மகனை அரசனைப் போலவும் பதினாறு வயதுவரை மாணவனாகவும், அதற்கு மேல் தோழனாகவும் கருதி நடத்த வேண்டும்.
5. காலத்துக்கு ஏற்ற சொல் கவலையைக் குறைக்கும்.
6. பணமும் மகிழ்ச்சியும் ஜென்ம விரோதிகள்
7. கவலையின் பாரம் அழகை அழிக்கிறது.
8. விளக்கைத் தூண்டு; உடைத்து விடாதே.



# காட்டை உலுக்கிய அதிசயப் பொருள்!

அது ஒரு பெரிய காடு. அந்தக் காட்டின் ஓரத்தில் சாலை ஒன்று உள்ளது. அந்தக் காட்டில் அடிக்கடி தீ பற்றிக் கொள்ளும். அதனால், அதிகாரிகள் வந்து காட்டைப் பார்வையிடுவார்கள். ஒருநாள் முயலை விரட்டிக்கொண்டு ஓடிய நரியின் முதுகில் பொத்தென்று ஒன்று விழுந்தது. அலறிக்கொண்டே திரும்பிப் பார்த்தது நரி. வெயில் பட்டு பளபளணமின்னியது அந்தப்பொருள். அந்தப்பொருளுக்குள் ஒரு திரவம். நரி பயத்துடன் பின்நோக்கிச் செல்ல, இதுதான் நல்ல வாய்ப்பு என முயல் ஓடிவிட்டது. நரி, அந்தப் பொருளையே உற்றுப் பார்த்தது. காற்று பலமாக வீசும்போது அது அசைந்ததும், பயம் அதிகமானது. அந்த வழியாகச் சென்ற கரடியை அழைத்துக் காட்டியது. கரடிக்கும் அது என்னவென்று தெரியவில்லை. ஆனால், நரி போன்று கரடி பயப்படாமல், காலால் நகர்த்தி, முகர்ந்து பார்த்தது. கரடி அதைக் கையில் எடுத்த போதிலும் ஒன்றும் ஆகவில்லை.

கரடி, நரியை முறைத்தவாறு, நீ சரியான பயந்தாங்கொள்ளி. காட்டில் ஏதாவது அதிசயப் பொருள் கிடைத்தால், சிங்கராஜாவிடம்தான் கொடுக்க வேண்டும். இதை, ராஜாவிடம் கொடு என்றது.

நரி பயத்துடன் பார்த்தது. கரடி, நரியின் முதுகில் செல்லமாய் அடித்து, சரி, நானே கொண்டுவருகிறேன். நீ துணைக்கு வா என்றது.

ஒரு பாறைக்கு முன் வந்து நின்ற சிங்கராஜாவின் காலடியில் அந்தப் பொருளை வைத்தது கரடி. சிங்கம் சத்தம் எழுப்ப, காட்டிலிருந்த எல்லா விலங்குகளும் அங்கு கூடின. எந்த விலங்குக்கும் அந்தப் பொருள் என்னவென்றே தெரியவில்லை. இது எங்கிருந்து கிடைத்தது? என்று கேட்டது சிங்கராஜா.

ராஜா, இது வானத்திலிருந்து விழுந்தது என்றது நரி.

வானத்திலிருந்தா என்றபடி அந்தப் பொருளைப் புரட்டிப் பார்த்தது சிங்கம். அப்போது, அதன் உள்ளேயிருந்த திரவம் கொஞ்சம் கசிந்து கீழே விழுந்தது. மற்ற விலங்குகள் பயந்து விலக, நரி ஓடியேவிட்டது.

மரத்திலிருந்து தாவி வந்த குரங்கு, அந்தப் பொருளை உற்றுப் பார்த்து, இதை ஏற்கெனவே எங்கோ பார்த்திருக்கிறேன். ஆம்... மனிதர்கள் இதை வைத்திருப்பார்கள் என்று சொன்னது.

மனிதர்கள் நம்மை அழிப்பதற்காக இதை அனுப்பினார்களோ என விலங்குகள் பயந்தன.

எவரும் பயப்பட வேண்டாம். இந்தப் பிரச்சினையைக் காட்டு உளவு அதிகாரி சிறுத்தையார் சரிசெய்வார் என்றது சிங்க ராஜா. சிறுத்தை அங்கே வந்து நின்றது. அந்தப் பொருளைப் பத்திரமாக, ஒரு கொடியால் இணைத்து முதுகில் கட்டிக்கொண்டது.

அடுத்த நாள் காட்டுத் தீ ஏற்பட்டு, மரங்கள் எரிந்தன. சிறுத்தை நெருப்புக்குப் பயந்து ஓடும்போது, முதுகிலிருந்த அந்தப் பொருள் நெருப்பு அருகே விழுந்து, உருகி, மறைந்துவிட்டது. அதைப் பார்த்த விலங்குகளுக்குப் பயம் அதிகமானது.

அடுத்து வந்த நாள்களில், காடுகளில் தொடர்ந்து அதேபோன்ற பொருள்கள் கிடைத்தன. சிலவற்றில் திரவம் இல்லை. இந்தப் பொருள்களை அருவியில் தூக்கி எறிந்துவிடலாமே என்றது புலி.

நெருப்பிற் பட்டு காணாமற்போனதுபோல, தண்ணீரில் என்னாகுமோ? தண்ணீரெல்லாம் வீணாகிவிடும் என்று மறுத்தது சிறுத்தை.

சிங்கராஜா கோபத்துடன், இந்தப் பிரச்சினைக்கு என்னதான் தீர்வு? எனக் கேட்க, நாளை முடிவு கட்டுகிறேன் என்றது சிறுத்தை.

அடுத்த நாள், இதுவரை சேர்ந்த அந்தப் பொருள்களை காட்டுக்கு அருகே, சாலையின் நடுவே கிடத்தியது சிறுத்தை. அப்போது, ஜீப் வரும் சத்தம் கேட்டு புதருக்குள் ஒளிந்துகொண்டது.

ஜீப் நின்றது. அதில் இருந்த அதிகாரிகளும் டிரைவரும் இறங்கினர். சாலையில் கிடந்த அந்தப் பொருள்களைப் பார்த்து, இவ்வளவு தண்ணீர்ப் போத்தல்கள் எப்படி வந்தன? இதை விலங்குகள் விழுங்கினால் ஆபத்து என்று தெரியாதா? என்றார் ஒருவர்.

அப்போது அவருக்கு இருமல் வர, டிரைவர் தண்ணீர்ப் போத்தலைக் கொண்டுவந்து தந்தார். அவர் அதைத் திறந்து குடிப்பதை, மறைந்திருந்த சிறுத்தை பார்த்தது. சாலையில் கிடந்த போத்தல்களை எடுத்து ஜீப்பில் போட்டார் டிரைவர். ஜீப் புறப்பட்டது.

சிறுத்தை, காட்டுக்குள் சென்று நடந்தவற்றை சிங்கராஜாவிடம் கூறி, அது தண்ணீர்ப் போத்தல்தான். ஆனால், பிளாஸ்டிக்கால் செய்யப்படும் அந்தப் போத்தல் ஆபத்தானதாம். எத்தனை ஆண்டுகள் மண்ணில் இருந்தாலும் அழியாதாம். அதைக் கடிக்கவோ, விழுங்கவோ கூடாது என்றது.

அனைத்து விலங்குகளும் நிம்மதிப் பெருமூச்சுவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒன்றின் சிறப்புக்கு பலவற்றின் பங்களிப்பு அவசியம்

■ அன்ரனி பீற்றர்

ஒரு பொருளின், ஒருசெயலின் சிறப்பை அல்லது உயர்வைக் கூறிவிட இன்னும் பல பொருள்கள், செயல்கள் தேவைப்படுகின்றன. தனித்து நான் மட்டும் வாழ்கின்றேன் என்றால் வரலாறோ இலக்கியமோ வேறெதுவும் தேவையில்லை. இன்னும் ஒன்றையோ பலவற்றையோ வைத்துக் கொண்டுதான் ஒன்றின் சிறப்பை, உயர்வை மதிப்பிடலாம். இதுவே வாழ்க்கை நியதியாகவும் உள்ளது. இந்த விதியின் மூலமே சிறந்ததின் தரம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இதன் அடிப்படையில் ஆண் மட்டுமோ? அல்லது பெண் மட்டுமோ வாழ்வது சிறப்பில்லை. ஓர் இனமோ – ஒருமதமோ, ஒரு மொழியோ மட்டும் பேசுகின்ற மக்கள் உலகில் வாழவில்லை. காலநிலையின் வேறுபாட்டுக்கு அமைய மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு, கலை, கலாசாரம், தொழில் முறைகள் அமைந்து காணப்படுகின்றன. சில அளவீடுகளின் அடிப்படையில் தான் அதிகமானது, குறைவானது என்றும் சிறந்தது சிறப்பில்லாது உயர்ந்தது உயர்வில்லாதது என்றும் - நல்லது கெட்டது என்றும் – அளவீடு காணப்பட்டு தரம் உரைக்கப்படுகின்றது.

ஒரு செயலை எடுத்துக் கொண்டால், கல்வியிலோ ஒரு விளையாட்டிலோ, பாட்டிலோ, நடிப்பிலோ, வேறு கலைகளிலோ ஒருவர் சிறந்தவர் என மதிப்பீடு செய்ய பலர் அந்தச் செயற்பாடுகளிலே, பங்கு கொண்டு போட்டியிடுவதன்மூலம், முதலிடம் பெறுபவர் என்று நாம் தேர்வு செய்து அறிவிக்கின்றோம். எனவே தனியொருவர் தன்னை மதிப்பீடு செய்து தன்னை அறிவிப்பதை சமூகமோ உலகமோ ஏற்றுக்கொள்ளாத வரையில் அது பூச்சியமானதே. பூச்சியத்தின் முன்னோ அல்லது பின்னோ வேறு இலக்கங்கள் சேராத வரை பூச்சியம் பெறுமதியற்றதே. தனியொருவன் சமூகத்தை நேசித்தால் தான் அவனால் மாற்றத்தைக் கொண்டுவர முடியும். சமூகம் என்ற பன்மையிலே தான் ஒருவரின் ஒருமையின் தரம் உயர்வாகக் கணிக்கப்படும்.

பலவகையான மலர் களின் பார்வையில்தான் ஒரு மலர் அழகு நிறைந்தது என்று கணிக்கப்படுகின்றது. இவ்வாறு பல உதாரணங்கள் மூலமாக ஒன்று மட்டும் சிறப்பாகாது. பலவற்றில் இருந்து அது தெரிவு செய்யப்படுவதன் மூலமே முதலிடத்தையோ முதற் பரிசையோ பெறுவதற்குத் தகுதி உடையதாகின்றது.

சர்வாதிகாரப் போக்கோ அல்லது ஜனநாயகம் என்று கூறிக் கொண்டு நடைபெறும் முதன்மைப்படுத்தல் அல்லது முதன்மைமயமாக்கல் ஆளுகையோ பன்மைச் சமூகங்களைக் கொண்ட எமது நாட்டிலும் எக்காலத்திலும் பன்மையில் ஒருமையை கொண்டுவர வாய்ப்பே இருக்காது. ஆண்டாண்டு பிழைவிட்டு மாண்டு போகின்றோமே ஒழிய பாண்டவருக்கு வனவாசமும் கௌரவருக்கு அஞ்ஞாத வாசமும் தொடர்கின்றது. கண்துஞ்சாது உழைத்தும் மிஞ்சாத வாழ்வு பஞ்சாகப் பறக்கின்றது. நாம் ஒன்றாகும் வரையில் நன்றான வாழ்வு எமக்கில்லை இதை உணராத வரையில் சரணாகதியே தான் பன்மையில் ஒருமை வருமோ?

ஒரு சிறு கதை. ஒரு தந்தைக்கு மூன்று பிள்ளைகள் தந்தையானவருடன் பிள்ளைகள் உறவுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றால் மூன்று பிள்ளைகளுக்கும் சொத்தைச் சமமாகப் பிரித்துக் கொடுத்தால் சகோதரர்களுக்கிடையே ஒற்றுமையும் தந்தையோடு நல்லுறவும் தொடரும். ஒருவருக்கு மட்டும் சொத்தைக் கொடுத்து மற்றும் இருவருக்கும் சில சலுகைகள் மட்டும் கொடுத்து பின்பு பார்த்துக் கொள்ளுவோமென்றால் சகோதரர்களுக்குள் நல்லுறவு இருக்காது பன்மையில் ஒருமை மலராது பகையே வளரும்.

ஒன்று சிறப்புடைய பலவற்றின் பங்களிப்பு அவசியமானது என்று பார்த்தோம். எம் தமிழர் பிரதேசங்களில் எம்மைநாமே வலுப்படுத்திக்கொள்ள முதலுடைய எத்தனை பேர் எம் பிர தேச பொருளாதார அபிவிருத்தியை வளப்படுத்துகின்றறோம். முன்பெல்லாம் உடை (பெனியன்) தயாரிப்பு, கண்ணாடிப் பொருள்கள் தயாரிப்பு, இரும்புப் பொருள்கள் தயாரிப்பு, விவசாயப் பொருள்கள் பயிர் வகைகள் தயாரிப்பு, பனம் பொருள்கள் தயாரிப்பு, புகையிலைப் பொருள்கள் தயாரிப்பு, பான வகைகள் தயாரிப்பு, சமையலுக்கான உணவுப் பொருள்கள் தயாரிப்பு இப்படி இயங்கிய எம்பிரதேச வளங்களில் எத்தனை உற்பத்தி மூலதனங்கள் செயற்படுகின்றன. பன்மையில் ஒருமைப்பாட்டைக் காணாமல் மலிவு நுகர் பொருள்களே எம் தேவையை நிறைவு செய்கின்றன. இறக்குமதிப் பொருள்களிலே எம் இயந்திர வாழ்வும் தொடர்கின்றது. இதனாலே ஓய்வில்லை - முயற்சியில்லை ஆரோக்கிய வாழ்வுக்கு ஆலோசனைகளும் பரிசோதனைகளும் செய்கின்ற நிலையங்களே நகரத்திலும் கிராமத்திலும் இடம்பிடித்துள்ளன. இவைகளால் எம்மிடையே அபிவிருத்தி பெருகுமோ? நோய் விருத்தியே பெருகும்.

ஒரு காலத்தில் ஒவ்வொருவர் வீட்டுப்பூச் சாடியிலும் மிளகாய் செடிகள் காய்த்துப் பயன் பெற்றனர். தேவை என்ற ஒருமை எல்லோரையும் செயற்பட வைத்தது. இன்று தேவைக்கு அதிகமாக மலிவுவிலையில் நுகர்வுப் பொருள்கள் கிடைப்பதால், நாம் முயற்சியற்று இருக்கின்றோம். எமது ஆற்றல்கள் பயனற்றவையாக மழுங்கடிக்கப்படுகின்றன. முயற்சி செய்தால் பயனுண்டு முயல்வாரே வாழ்வில் மகிழ்வார். இகழ்வார் ஏற்றமுறார்.

கட்டுரையாளர்
(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)

# சவால்களைத் தகர்த்தெறிந்து சாதித்துக் காட்டியது பிரேஸில்

31ஆவது ஒலிம்பிக் தொடர் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோவில் கடந்த 5ஆம் திகதி ஆரம்பித்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை (இலங்கை நேரப்படி) முடிவடைந்தது. ஒலிம்பிக் தொடரை நடத்திய முதல் தென்னமரிக்க நாடு என்ற வகையில், நிகழ்கால உலகின் ஏகப்பட்ட சாவால்களைச் சந்தித்து சாதித்துக் காட்டியுள்ளது பிரேஸில்.

ரியோ ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் பிரேஸிலால் ஒலிம்பிக் தொடரை நடத்த முடியாது என்றும் -ஒலிம்பிக் தொடரைப் பிற்போடுமாறும் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்துக்கு ஏகப்பட்ட அழுத்தங்கள் வந்து குவிந்தன. இந்த அழுத்தங்களுக்கு மூன்று காரணங்கள் முதன்மையாகச் சொல்லப்பட்டன.

முதலாவது பயங்கரவாத அச்சுறுத்தல். ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாகஅறிவித்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேற்) அமைப்பு ரியோ ஒலிம்பிக் தொடர் தனது முதன்மை இலக்குகளில் ஒன்றென இந்த வருடத்தின் ஆரம்பத்தில் தெரிவித்தது.

குறித்த அமைப்பால் பிரான்சின் கால்பந்தாட்ட அரங்கொன்றுக்கு அருகில் தாக்குதல் நடத்தப்பட்டமையை அடுத்து ஒலிம்பிக்கிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது கைவரிசையைக் காட்டும் என்ற அச்சம் மிகையாகவே இருந்தது.

எனவே சில நாடுகள் ஒலிம்பிக்கை கைவிடுமாறு வலியுறுத்தின. ஆனால், ஒலிம்பிக் தொடர் கைவிடப்பட் டால் அது பயங்கரவாதத்துக்கு எதிராக ஒட்டுமொத்த உலக நாடுகளுக்கும் கிடைத்த தோல்வியாகிவிடும் என்று தெரிவித்த பிரேஸில், கிட்டத்தட்ட 90 ஆயிரம் பொலிஸார், படை வீரர்கள், ஒரு இலட்சம் கண்காணிப்புக் கமராக்கள், ஆயிரத்துக்கு மேற்பட்ட உளவாளிகள், ஆளில்லாத கண்காணிப்பு விமானங்கள் என வரலாறு காணாத பாதுகாப்பை வழங்கித் தொடரை வெற்றிகரமாக நடத்திக் காட்டியுள்ளது.

பிரேஸிலுக்கு இருந்த இரண்டாவது பெரிய சவால், சிகா வைரஸின் தாக்கம். அமெரிக்க, தென்னமெரிக்க நாடுகளில் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியிலும், இந்த வருடத்தின் ஆரம்பத்திலும் சிகா எனும் வைரஸ் விரைவாகப் பரவி வந்தது. சிகா வைரஸின் தாக்கம் அதிகம் உள்ள இரண்டாவது நாடு பிரேஸில். நுளம்புகளால் பரவும் இந்த வைரஸ் கர்ப்பிணிப் பெண்களைத் தாக்கினால் பிறக்கும் குழந்தைகள் மூளை வளர்ச்சி குறைந்தவர்களாக பிறப்பார்கள்.

எனவே வீராங்கனைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சிகா வைரஸின் தாக்கம் இல்லாது போகும் வரை ஒலிம்பிக் தொடரை பிற்போடுமாறு ஐரோப்பிய நாடுகள் பலவும் வலியுறுத்தின. ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர், குறித்த வைரஸுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த பிரேஸில் 90 சதவீதம் ஆரோக்கியமான சூழலை உருவாக்கி வீராங்கனைகளின் பங்குபற்றலை உறுதிப்படுத்தியது.

மூன்றாவது சவால் கட்டுமானங்கள். ஒலிம்பிக் தொடர் ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அதற்குரிய கட்டுமானங்களில் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம் அதிருப்தி தெரிவித்தது. ஆனால் உலகின் கணிப்பைப் பொய்யாக்கி சகல வசதிகளுடனும் ஒலிம்பிக்கை செவ்வனே நிறைவேற்றியுள்ளது பிரேஸில். மொத்தத்தில் பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர் தோமஸ் பெச் சொன்னதைப்போல், ஒலிம்பிக் தொடரை நடத்திய முதல் தென்னமரிக்க நாடு என்ற வகையிலும், அதிக சவால்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட ஒலிம்பிக் தொடர் என்ற வகையிலும் ரியோ ஒலிம்பிக் வரலாற்றில் இடம்பிடித்துள்ளது என்பது நிதர்சனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்த பெண்ணிடம் காதலை சொல்வதை விட கஷ்டமானது....



மேனேஜரிடம் லீவு சொல்வது

என்னைப் பொண்ணு பார்க்க வந்தப்போ நான் என்ன கலர் சேலை கட்டியிருந்தேன்?



தண்ணி லொறில அடிபட்டுச் செத்தவனுக்கு வண்டி நம்பர் எப்படி ஞாபகம் இருக்கும்.



பொலிஸ்: நீ செலுத்தி வந்த பஸ் எப்படி அக்ஸிடன்ட் ஆச்சு. தண்ணி அடிச்சிருந்தியா.

சாரதி: ஐயோ! சேர் நான் தண்ணி அடிக்கல்ல. அப்ப பஸ் எப்படி மோதுச்சு என்டு எனக்குத் தெரியல்ல. நான் நல்லா தூங்கிட்டேன் சேர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 6 | | | 7 |
| 6 | | 3 | 5 | | 9 | 2 | | 1 |
| | | | | | | 6 | | |
| 1 | | 7 | | | | | 6 | 2 |
| | 2 | | | | | | 3 | |
| 5 | 3 | | | | | 4 | | 8 |
| 3 | 6 | | | | | | 2 | |
| 2 | | | 3 | | 1 | 8 | | 6 |
| 9 | | | 2 | 6 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறு வன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 8 | 3 | 9 | 6 | 4 | 7 | 2 |
| 9 | 7 | 3 | 4 | 2 | 1 | 6 | 8 | 5 |
| 6 | 4 | 2 | 7 | 5 | 8 | 1 | 3 | 9 |
| 3 | 1 | 9 | 8 | 7 | 4 | 2 | 5 | 6 |
| 2 | 6 | 7 | 9 | 1 | 5 | 8 | 4 | 3 |
| 4 | 8 | 5 | 6 | 3 | 2 | 7 | 9 | 1 |
| 7 | 2 | 1 | 5 | 8 | 9 | 3 | 6 | 4 |
| 5 | 3 | 6 | 1 | 4 | 7 | 9 | 2 | 8 |
| 8 | 9 | 4 | 2 | 6 | 3 | 5 | 1 | 7 |

பிரியா சுப்ரமணியம்

உடைந்த கண் ணாடியை போலத் தான் சிதைந்த நம்பிக்கைகளும்...



# தமிழ்ச் சினிமாவில் முதன்முறையாக அஜித் படத்தில் வெர்ஷாஸ்கா அணைக்கட்டு

இயக்குநர் சிவா இயக்கத்தில் அஜித் தன்னுடைய 57 ஆவது படத்தில் நடித்து வருகிறார். ஹொலிவூட் தரத் துக்குத்தயாராகும்இந்தப்படத்தின்படப்பிடிப்புக்கள்விறுவிறுப் பாக இடம்பெற்று வருகிறது. அண்மையில் வெர்ஷாஸ்கா அணைக்கட்டுபகுதியில் (Verzasca Dam) இந்தப்படப்படப்பிடிப்பு இடம்பெற்றுள்ளது. இதற்கு முன் பொலிவூட் படமான (தூம் 3) படத் தின் சில காட்சி கள் அங்குதான் படமாக்கப்பட்டது. ஆனால் ஒரு தமிழ் படம் அங்கு படமாக்கப்படுவது இதுவே முதன்முறை எனச் சினிமா வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். வாழ்க்கைத் தரம் வியத்தகு அளவில் உயரும். தொழில், வியாபார வளர்ச்சி பெற, நண்பர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில், சுப விடய பேச்சு நடந்தேறும்.

**இடபம்:** நண்பரின் வழிகாட்டுதலால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**மிதுனம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற, புதிய வாய்ப்பு உருவாகும். எதிலும் நேர்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியா பாரம், அபரிமிதமான வளர்ச்சி பெறும். லாபம் உயரும். முக்கிய வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கடகம்:** உங்களின் அணுகுமுறையில் மாற்றம் உண்டாகும். அக்கம் பக்கத்தினர், அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில்,' வருமானம் திருப்தி தரும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** உறவினரின் பாசம், வியப்பைத் தரலாம். தொழில், வியாபாரத்தில், குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**கன்னி:** சொந்தப் பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினரைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான லாபம் கிடைக்கும். வெளியூர் பயணத்தில் இனிய அனுபவம் உண்டாகும்.

**துலாம்:** எதையும் திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தாமதமான பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி மனப்பான்மை குறையும். அதிக அளவில் பணவரவு கிடைக்கும். பிள்ளைகளின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழிலில் உருவாகிற சிரமங்களைச் சரிசெய்வது அவசியம். வருமானம் சுமார். பணியாளர்கள், பணியில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மகரம்:** எவரிடமும் விதண்டாவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மறைமுகப் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும். உடல் நலத்துக்கு மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம்.

**கும்பம்:** நற்செயலில் ஈடுபட்டு பாராட்டு பெறுவீர்கள். அதிக உழைப்பால், தொழிலில் புதிய சாதனை புரிவீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். அரச வகையில் உதவி கிடைக்கும்.

**மீனம்:** நல்லோரின் ஆலோசனையால், நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். லாபம் படிப்படியாக உயரும். மாணவர்கள், கல்வியில் வளர்ச்சி பெற, கூடுதல் பயிற்சி மேற்கொள்ளவும்.



நோயாளி: காதுக்குள்ள ரயில் ஓடுற மாதிரி சத்தம் கேட்குது டாக்டர்.
(செக் பண்ணிவிட்டு டாக்டர்)
எனக்கு ஒண்டும் கேட்கலையே?
நோயாளி: அப்படியா?
அப்போ ஏதாவது [illegible]
நின்றிருக்குமோ?



உங்களை இப்படி குருதி வாற மாதிரி அடிச்சிட்டு உங்க மனைவி ஏன் தலைமறைவாகிட்டாங்க?
அவ ரொம்ப பயந்த சுபாவம் இன்ஸ்பெக்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நாளை**
**ஆவணி-10**
வெள்ளிக்கிழமை
-26.08.2016
திதி: நவமி மு.இ.09.02
நட்சத்திரம்: ரோகிணி
பி.ப. 2.17
ராகுகாலம்:
10.35-12.05 வரை
சுபநேரம்:
06.05-07.35 வரை

# முட்டை வடை




**தேவையான பொருள்கள்**


முட்டை–5
கடலை மா –ஒரு தேக்கரண்டி
இஞ்சி – அரைத்தது
உள்ளி – அரைத்தது
மிளகாய்த்தூள்–ஒரு தேக்கரண்டி
எண்ணெய் –பொரிப்பதற்கு

செய்முறை : முதலில் முட்டையை வேக வைத்து வட்டமாக வெட்டிக் கொள்ளவும். பின்பு கடலை மா, அரைத்த இஞ்சி, உள்ளி, மிளகாய்த்தூள், உப்பு சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். இந்தக் கலவையை முட்டையில் தடவி எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுக்கவும். முட்டை வடை தயார். இதனை சிறுகுழந்தைகளும் விரும்பி உண்பார்கள்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 40 | 60 | 80 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 50 | 50 | 60 | 40–50 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 160 | 120 | 120 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 100 | 90 | 100 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 60 | 50 | 70 | 60 | 60 | 40 | 100 | 60 |
| பாகல் | 120 | 80 | 100 | 100 | 100 | 80 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 150 | – | 140 | 160 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 100 | 90 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 60 | 90 | 80 | 80 | 90 | 60 |
| பூசணி | 80 | 40 | 50 | 80 | 40 | 80 | 70 | 40 |
| தக்காளி | 50 | 60 | 60 | 60 | 40–50 | 60 | 120 | 40 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 120 | 80–100 | 40 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20–30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 100 | 160 | 100 | 80–90 | 200 | 200 | 140 |
| புடோல் | 40 | 50 | 40 | 60 | 40–60 | 40 | 70 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 | 100–120 | 160 | 90 | 80 |
| வெண்டி | 40 | 50 | 50 | 60 | 60–80 | 80 | 70 | 20 |
| போஞ்சி | 150 | 180 | 200 | 180 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 100 | 100–120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 35 | 25–30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 100–120 |
| தேசிக்காய் | 80 | 200 | 240 | 280 | 140 | 120 | 120 | 150 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 120 | 140 | 160 | 140 | 240 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 | 40 | 80 | 120 | 120 | 50 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | 700 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 300 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | – | 500 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 1000 | 800 | – |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 500 | 500 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 500 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 400 | 400 | 450 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 500 | 300 | 400 |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 400 | – | 400 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 150 | – |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 200 | 170 |
| மதனம் | 150 | 200 | – | 400 | 300 | – | 250 |
| கொய் | 100 | 150 | 50 | 70 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 500 | 200 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 400 | 300 | – |

# பிரிட்ஜ் பராமரிப்பு

- பிரிட்ஜை சமையலறையில் வைக்கக் கூடாது. புகை பட்டு நிறம் போய்விடும்.
- பிரிட்ஜை அடிக்கடி திறக்கக் கூடாது. திறந்தால் உடனே மூடிவிட வேண்டும். இது மின்சாரத்தை மிச்சப்படுத்த உதவும்.
- பின்பக்கம் உள்ள கம்பி வலைகள் சுவரை ஒட்டி இருக்கக் கூடாது. அந்த வலையில் தண்ணீர் படக் கூடாது. பின்புறம் படியும் ஒட்டடையை மெதுவாகத் தென்னந்துடைப்பம் மூலம் அகற்ற வேண்டும்.
- பிரிட்ஜை துடைக்கும்போது ஈரத்துணி அல்லது போர்ம் போன்றவற்றைக் கொண்டு துடைக்கக் கூடாது. உலர்ந்த துணி கொண்டு துடைக்க வேண்டும்.
- வெளியூர் செல்லும்போது பிரிட்ஜைக் காயவைத்துச் செல்ல வேண்டும். மாதமிருமுறை பிரிட்ஜுக்கு விடுமுறை கொடுக்கவும்.
- பிரீசரில் உள்ள ஐஸ் தட்டுகள் எடுக்க வரவில்லை எனில் கத்தியைக் கொண்டு குத்தக் கூடாது. அதற்குப் பதில் ஒரு பழைய காஸ்கட்டைப் போட்டு அதன்மேல் வைத்தாலோ அல்லது சிறிது கல் உப்பைத் தூவி வைத்து அதன் மேல் ஐஸ் தட்டுக்களை வைத்தாலோ சுலபமாக எடுக்க வரும்.
- பிரிட்ஜிலிருந்து வித்தியாசமாக ஓசை வந்தால் உடனடியாக ஒரு மெக்கானிக்கை அழைத்துச் சரி பார்க்க வேண்டும்.
- அதிகப்படியான பொருள்களை அடைத்து வைக்கக் கூடாது. ஒவ்வொரு பொருளுக்கும் காற்று செல்வதற்கு ஏற்ப சிறிது இடைவெளி விட்டு வைக்க வேண்டும்.
- பிரிட்ஜுக்குக் கண்டிப்பாக நில இணைப்புகள் கொடுக்க வேண்டும்.
- பிரிட்ஜை காற்றோட்டம் உள்ள அறையில் மட்டுமே வைக்க வேண்டும். பிரிட்ஜின் உள்ளே குறைந்தப் பொருள்களை வைத்தால் மின்சாரம் குறைவு என்பது தவறான கருத்தாகும்.
- பிரிட்ஜின் உட்பகுதியைச் சுத்தம் செய்யும்போது கண்டிப்பாக சோப்புக்களை உபயோகப்படுத்தக் கூடாது. இது உட்சுவர்களை உடைக்கும். மாறாக சோடா உப்பு கலந்த வெந்நீரை உபயோகிக்கலாம்.
- உணவுப் பொருள்களைச் சூட்டோடு வைக்காமல் குளிர வைத்துப் பின்னர் வைக்க வேண்டும். வாழைப்பழத்தை எக்காரணத்தைக் கொண்டும் பிரிட்ஜில் வைக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையைக் கொண்டாடும் டிமோ



டிமோ நிறுவனத்தின் ஆதரவுடன், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் மாணவர்களால் வடிவமைப்புச் செய்யப்பட்ட டி-மொறா பி 1 என்ற பந்தயக் கார், உலகில் இடம்பெற்று வருகின்ற மிகப் பெரிய மோட்டார் விளையாட்டுப் போட்டியான 'போர்முலா ஸ்ருடண்ட் 2016' நிகழ்வில் 3 விருதுகளை வென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'போர்முலா ஸ்ருடண்ட் 2016' போட்டியானது அண்மையில் ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்றதுடன், பெருமதிப்புமிக்க இந்த நிகழ்வில் இலங்கையிலிருந்து முதற்றடவையாக இந்த அணி பங்குபற்றியிருந்ததாகக் கூறப்பட்டது. இந்தப் போட்டியில் 30 நாடுகளிலிருந்து, 130 இற்கும் மேற்பட்ட அணிகள் போட்டியிட்டிருந்தன. இயந்திரவியல் பொறியியல் கற்கை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்தப் போட்டியானது ஐரோப்பாவில் மிகவும் பிரபலமான கல்விசார் மோட்டார் விளையாட்டுப் போட்டியாக அமைந்துள்ளதுடன், தொழிற்றுறை மற்றும் பிரபல பொறியியலாளர்களின் ஆதரவையும் பெற்றுள்ளதென டிமோ கூறியுள்ளது.

உலகெங்கிலுமுள்ள பல்கலைக்கழகப் பொறியியல் மாணவர்கள் நிலையான மற்றும் வலுவான நிகழ்வுகளில் போட்டியிடுவதற்கு, ஒரு வருடத்தில் தனி ஆசனத்தைக் கொண்ட பந்தயக் கார் ஒன்றை வடிவமைத்து, கட்டியெழுப்புமாறு சவால் விடுவதுடன், பந்தயக் காரின் சோதனை ஓட்டங்கள் மற்றும் தொழிற்படுதிறனைத் தெளிவாக விளங்கி, அவற்றை வெளிக்காண்பிப்பதற்கு இங்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

மொரட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து இதில் க்லந்துகொண்ட அணிக்கு முற்றுமுழுதான அனுசரணையை டிமோ வழங்கியதுடன், ஹர்னகலவின் தலைமையின் கீழ் இந்த அணியில் 18 பேர் இடம்பெற்றிருந்தனர். இதில் இரு அணி நிலை விருதுகளும், மிகத் திறமையாக வாகனத்தை ஓட்டும் ஆற்றலுக்காக இந்துருவ முனசிங்கவுக்கான விருதுமாக மொத்தமாக 3 விருதுகளை இந்த அணி வென்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (த)

# காஷ் பொனான்சாவின் ஆறாவது வெற்றியாளர்

தேசிய அலைப்பேசி சேவை வழங்குநரான மொபிடெல் நிறுவனத்தின் 2016 ஆண்டுக்கான "காஷ் பொனான்சா பரிசிழுப்புத்திட்டமானது வாடிக்கையாளரிடையே அதிக பிரபல்யமடைந்து வருவதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இதன் மூலம் மாதாந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் அது கூறியுள்ளது.

மொபிடெல், 2016ஆம் ஆண்டு முழுவதும் 35 கோடி ரூபா பெறுமதியான பணப் பரிசைத் தமது வாடிக்கையாளர்களிடையே பகிர்ந்தளிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அத்துடன் மாதாந்தம் தெரிவு செய்யப்படும் மாபெரும் வெற்றியாளருக்கு ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான மிட்சுபிசி மொன்டெரோ எஸ்.யு.வி. ரக மோட்டார் வண்டிகளை வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 5 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் மொண்டேரோ ரக வாகனங்களை வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அம்பலாங்கொடையைச் சேர்ந்த, ஷானிகா ஸ்ரீமாலி, வாரியபொலவை சேர்ந்த, ஜே.எம்.துஷாந்த ஜயலத், படல்கும்புரயைச் சேர்ந்த ஆர்.எம். ரோஷான பிரியதர்ஷன மற்றும் நிட்டம்புவைச் சேர்ந்த திருமதி ஆர்.எம்.பீ.பி.பி. குமாரி மற்றும் தனமல்விலயைச் சேர்ந்த திருமதி பீ. ஏ. குசுமாவதி ஆகியோர் கடந்த சீட்டிழுப்பின்போது மொன்டேரோ ரக கார்களை வெற்றி பெற்றிருந்தனர் என்று மொபிடெல் கூறியுள்ளது. 6ஆவது மாத வெற்றியாளராக பதவியா ஸ்ரீதிஸ்ஸபுர பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.டி. நிமால் ஜெயசிங்க பெற்றுகொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காஷ் பொனான்சா களியாட்டம் மற்றும் இசை நிகழ்ச்சியுடன் பரிசளிப்பு விழாவும் மொரட்டுவை சொய்சாபுர விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. நிமால் ஜெயசிங்க, மிட்சுபிசி மொன்டெரோ ரக மோட்டார் வாகனத்தை மொபிடெல் நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி நளின் பெரேராவிடமிருந்து பெற்றுக் கொண்டார் என்று கூறப்பட்டது.

இனிவரும் நாள்களிலும் மேலும் 6 மொன்டரோ ரக வாகனங்களை தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கவுள்ளதாக மொபிடெல் கூறியுள்ளது. (த)

## வணிகம்



# நுட்பம்



## இருமடங்கு மின்சக்தியை வழங்கும் மின்கலங்கள்

தொடுதிரைக் கைபேசிகளில் தரப்பட்டுள்ள சிறப்பம்சங்களுக்கு அமைவாக அவற்றில் பயன்படுத்தப்படும் மின்கலங்கள் விரைவாக மின்னேற்றம் அற்றுப் போகின்ற நிலையில், தற்போது பாவனையிலுள்ள மின்கலங்களை விடவும் இரண்டு மடங்கு நேரத்துக்கு மின்சக்தியை வழங்கக்கூடிய மின்கலங்களை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.


குறித்த மின்கலங்களை உருவாக்கிய விஞ்ஞானிகள் தெரிவித்ததாவது-

தற்போதைய மின்கலங்கள் ஒரு முறை மின்னேற்றிய பின்னர் 200 மைல் தூரப் பயணங்கள் வரை பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், இந்தப் புதிய மின்கலத்தின் உதவியுடன் ஒரு முறை மின்னேற்றம் செய்துவிட்டு 400 மைல்கள் வரை துணிந்து பயணிக்க முடியும்.- என்றனர். இதேவேளை இந்த மின்கலங்கள் அடுத்த வருடத் திலேயே சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சூரியனைவிட எடையுடைய புதிய நட்சத்திரம்

சூரியனை விட அதிக எடையுள்ள நட்சத்திரத்தை இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவொன்று கண்டுபிடித்தது.

பால் வீதியை ஆராய்ச்சி செய்து வரும் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இந்த ஆராய்ச்சிக்குழு பூமியில் இருந்து 11 ஆயிரம் ஒளி ஆண்டுக்கு அப்பால் உள்ள சூரியனை விட அதிக எடையுள்ள இளம் நட்சத்திரம் ஒன்றை கண்டுபிடித்தது. சூரியனை விட 30 மடங்கு நிறை கொண்ட இந்த இளம் நட்சத்திரத்தை தொடர்ந்து ஆய்வு செய்தால், பால் வீதியில் பெரிய பெரிய நட்சத்திரங்கள் எப்படி உருவாயின என்பது தெரிய வரும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அந்த இளம் நட்சத்திரம் தன் பகுதியில் உள்ள மூலக்கூறுகளை எல்லாம் ஈர்த்து தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அப்படி அந்த இளம் நட்சத்திரம் முழுமை அடையும் போது மிகப்பெரிய நட்சத்திரமாக மாறும் வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.




CSE COLOMBO STOCK EXCHANGE

24/8/2016

www.cse.lk

| [illegible] | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -15.46 | 6,588.30 | **6,603.76** |
| S&P SL20 | -14.16 | 3,613.80 | **3,627.96** |
| வியாபாரப்புரள்வு | | 1,317,020,800 | 1,805,756,928 |
| உள்நாட்டு- கொள்வனவு | | 980,474,688 | 1,298,664,704 |
| விற்பனை | | 744,163,712 | 896,272,576 |
| வெளிநாட்டு- கொள்வனவு | | 336,546,144 | 507,092,224 |
| விற்பனை | | 572,857,088 | 909,484,352 |



1417/2/3, K.K.S.Road, Jaffna. 0212221455

பங்குச் சந்தை தகவல்கள்

| அதிகூடிய பங்குபரிமாற்றம் | [illegible] | இறுதி விலை | பங்குகள் | [illegible] |
|---|---|---|---|---|
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N0000 | 165 | 1,290,596 | 212,978,229 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N0000 | 915 | 227,348 | 208,024,721 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.N0000 | 56 | 2,469,586 | 140,696,906 |
| றோயல் செராமிக்ஸ் | RCL.N0000 | 124.5 | 730,800 | 90,603,340 |
| சிலோன் கிரேன் எலிவேட்டர்ஸ் | GRAN.N0000 | 88.3 | 999,943 | 89,809,887 |
| ரெகஸ்டேட் யோவஸ் | TJL.N0000 | 40 | 1,300,784 | 52,024,165 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N0000 | 26 | 1,907,037 | 49,728,990 |
| லங்கா ஐ.ஓ.சி. | LIOC.N0000 | 42.3 | 813,998 | 34,444,819 |
| சம்பத் வங்கி | SAMP.N0000 | 256 | 119,977 | 30,632,863 |
| டிஸ்டிலரீஸ் | DIST.N0000 | 268 | 109,118 | 29,249,750 |



கருத்தரங்கு

மாலை 4.00 – 5.00 (26.08.2015)

பங்குப்பரிவர்த்தனை-யாழ்க்கிளை கேட்போர்கூடம்,

அனுமதி இலவசம்

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| [illegible] | 295 |
| [illegible] | 227 |
| விலை உழைப்பு | 13.6 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்கள்...

அச்சம் காரணமாக தமிழ் – முஸ்லிம் மாணவர்கள் நேற்றுமுன்தினமே பல்கலைகழக வளாகத்தில் இருந்து வெளி யேறிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பல்கலைகழக நிகழ்வொன்றுக்காக குறிஞ்சிக்குமரன் கோவிலுக்குச் சென்று திரும்பும் வழியில் கடந்த திங்கட்கிழமை இரவு 7.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த 20 பேர் கொண்ட சிங்கள மாணவ குழுவினரால் தமிழ் – முஸ்லிம் மாணவர்கள் சிலர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

தலைக்கவசம், தடிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் காயமடைந்த நான்கு மாணவர்கள் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சையின் பின்னர் வெளியேறினர். மேலும் சில மாணவர்களுக்கு சிறு சிறு காயங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த தாக்குதல் குறித்து பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

முதலாம் வருட தமிழ் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் இதற்கு முன்னரும் இடம்பெற்ற போதிலும், அவை குறித்த தகவல்கள் பெரிதாக வெளியில் வெளிவருவதில்லை என பாதிக்கப்பட்ட மாணவர்கள் கூறினர்.

இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவர்கள் பல்கலைக்கழக விடுதிகளிலிருந்து வெளியேறி வீடுகளுக்குத் திரும்பிவிட்டதால், அவர்கள் வரும்வரை முதலாம் மற்றும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு பேராதனைப் பல்கலைகழக நிர்வாகம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது .

(வ-4)

## மக்கள்....

விசாரணையாளர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். நியமிக்கப்பட்டுள்ள ஐவர் அடங்கிய குழுவில் அனைவரும் உள்நாட்டவர்கள். இந்த அலுவலகத்தின் செயலாளராக மனோ தித்தவத்த நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் ஏனையவர்களும் உள்நாட்டவர்கள் தான்.

பன்னாட்டு நிபுணர்களின் ஆலோசனை அவசியமானால் அவர்கள் ஒரு உடன்படிக்கையின் அடிப்படையில் இணைத்துக்கொள்ள ஏற்பாடுகள் காணப்படுகின்றன. விசாரணைகள் அனைத்தும் உள்நாட்டு விசாரணையாளர்கள் மூலமே மேற் கொள்ளப்படும் – என்றார்.

அரசின் இந்த அறிவிப்பு தொடர்பில் நல்லிணக்க தேசியச் செயலணியின் உறுப்பினரான திருமதி சித்திரா மெளனகுரு தெரிவித்ததாவது:

உள்ளூர் விசாரணையாளர்களை நியமித்திருந்தால் அது மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்காத செயற்பாடுதான். உள்ளூர் விசாரணையாளர்கள் நியமிக்கப்படுவதாக இருந்தால், அவர்கள் அரசியல் சாராதவர்களாக நிபுணத்துவம் உடையவர்களளாக இருக்கவேண்டும் என்று மக்கள் வலியுறுத்தினர். இந்த விடயத்தில் அரசு மிக அவசரப்பட்டு விட்டது. மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வின் அறிக்கை இந்த மாத இறுதியில் முன்வைக்கப்படவுள்ளது. அதில் மக்கள் என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்பதை அறிந்து செயற்படுத்தியிருக்கலாம் – என்றார்.

காணாமற்போனோர் விடயத்தில் தொடர்ச் சியாக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருபவரும், நல்லிணக்கச் செயலணியின் மன்னார் மாவட்ட தலைவருமான அருட்தந்தை செபமாலை தெரிவித்ததாவது:

மக்கள் பன்னாட்டு விசாரணையாளர்கள் தேவை என்றே வலியுறுத்தினர். இல்லாவிடின் கலப்பு விசாரணையாளர்கள் கேட்டிருந்தார்கள். உள்நாட்டு விசாரணையாளர்கள் – விசாரணையில் துளியளவும் நம்பிக்கையில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

மக்களின் கருத்தறியும் அமர்வு நடைபெற்று வரும் நிலையில் இவ்வாறு செய்வது துரோகத்தனமான செயல். அரசு அவசரப்பட்டு இதனைச் செய்துள்ளது. அரசு மேலும் மேலும் மக்களை ஏமாற்றுகின்றது. மக்கள் எங்களது அமர்வுகளில், இந்த அமர்வுகள் கண்துடைப்புக்கே நடக்கின்றது என்று குற்றம் சுமத்தியிருந்தனர். அதனை உண்மையாக்கும் வகையிலேயே அரசு செயற்படுகின்றது. காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதிலேயே அரசு மக்களின் கருத்தைப் புறக்கணித்துச் செயற்படுகின்றது என்றால், போர்க்குற்றச்சாட்டு விசாரணைப் பொறிமுறையில் மக்களின் கருத்தை ஏற்றுக்கொள்ளும் என்று எப்படி நம்புவது. இந்த அரசையும் நம்ப முடியாது என்றார்.

(வ-5-101)

## விக்கியின்...

தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் கிராமத்தில் சுற் றுலா மையம் அமைப்பது தொடர்பில் நாடாளு மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவா னந்தா கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், "வடக்கிலுள்ள இந்த இடம் குறித்து தகவல் வழங்கியமைக்கு நன்றி. அங்கு சுற்றுலாக் கிராமம் அமைப்பது குறித்து ஆராயப்படும். அங்கு சென்று ஆராயுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கின்றேன். வடக்கு மாகாணசபை முன்னெடுக்கும் விடயங்களில் தலையிட நான் விரும்பவில்லை. எனினும், வடக்கு மாகாண முதலமைச்சர், உங்கள் (டக்ளஸின்) நண்பராக இருப்பதால் அவரிடம் கூறி 6 மில்லியன் ரூபா முதலீடு செய்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துமாறு கோருங்கள். கொழும்பு அரசு ஏதாவது ஒன்றைச் செய்ய முயற்சித்தால் அதை வடக்கு மாகாண முதலமைச்சர் விரும்புவதில்லை. அண்மையில், வடக்கு மாகாண முதலீட்டாளர் மாநாடு நடைபெற்றது. அவர் அதில் கலந்துகொள்ளவில்லை. எனினும் மக்களுக்குத் தேவையான அபிவிருத்திகளை அரசு செய்யும்" – என்றார் அமைச்சர்.

(உ-5)

## நல்லூரில்...

கொண்டு ஆசியுரை வழங்கினார் நல்லை ஆதீன முதல்வர்.

ஆலயச் சூழலில் காணப்படும் கட்டமைப்பு, பொலிஸாரின் செயற்பாடு, வர்த்தகர்களின் செயற்பாடு, சுகாதாரம் பேணப்படுகின்ற செய்தி அனைத்தும் இந்த வருடம் சிறப்பாக இருக்கின்றது என்று அவர் பாராட்டினார்.

"யாழ். மாநகர சபை ஆணையாளர் எடுத்துள்ள முயற்சி அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. தொடர்ந்தும் இந்தக் கட்டமைப்பைப் பேணவேண்டும். சுண்டலும், கச்சானும் பெரிய பிரச்சினையாக இருக்கின்றன. ஆலய வீதியை அலங்கோலப் படுத்துகின்றன. அதனாலேயே அவற்றை தடைசெய்ய வேண்டும்.

எங்களுடைய சமயம் விரதங்களையே வலியுறுத்துகிறது. விரதத்தாலேதான் இறைவனுடைய அன்பைப் பெற்றுக் கொள்ளலாம். சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொள்வதால் அல்ல என்பதைச் சைவசமய மக்கள் புரிந்துகொள்வதில்லை. அதனைப் புரிய வைப்பது எங்கள் மாநகர சபையின் பணி என்பதைத் தெரி விக்கின்றேன்" – என்றார் நல்லை ஆதீனம்.

(உ-5-ரி7)

## யாழ்.கோட்டை யில்....

பணிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

கோட்டையின் அகழியை ஆழப்படுத்தும் போது அதிலிருந்து எடுக்கப்பட்ட கழிமண் கோட்டையின் உட்புறத்தில் சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் போடப்பட்டது. அந்தக் கழிமண்ணை வேறு தேவைக்காக பைகளில் போட்டுக்கொண்டிருந்த போது, குண்டுகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் கைக்குண்டு ஒன்றும் நேற்றையதினம் மோட்டார் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டது. அவை நேற்றுச் செயலிழக்கச் செய்யப்பட்டன.' என்று யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். கோட்டையிலேயே பெரும் சமர் இடம் பெற்றது. இதன்போது கோட்டையை இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் மாறி மாறி கைப்பற்றி சண்டைகளை தொடுத்திருந்தனர்.

(வ-4,21,ரி7)

## ஜனாதிபதி....

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆஸ்திரேலியாவின் மிகவும் பிரபலமான ஸ்னோவிமவுண்டன்ஸ் எஞ்ஜினியரிங் நிறுவனம் ஊழல் நடவடிக்கை யொன்றில் ஈடுபட்டுள்ளமை பெயர் பாக்ஸ் ஊடகம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்தது. தற்போது இந்த ஊழல் குறித்து ஆஸ்திரேலிய சமஷ்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த ஊழல் குற்றச்சாட்டுகளுடன் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தொடர்புபடுத்தப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட நிறுவனத்தின் வெளிநாட்டுப் பணியாளர்கள் இலங்கையில் கழிவு நீர்த் திட்டமொன்றை பெற்றுக்கொள்வதற்காக அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கியுள்ளனர். 2.3 மில்லியன் டொலர் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே அவர்கள் இவ்வாறு இலஞ்சம் வழங்கியுள்ளனர்.

இந்தத் திட்டம் வழங்கப்பட்ட போது அமைச்சராகவிருந்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவரது ஆலோசகரும் இந்தத் திட்டத்துக்காக அரசியல் நன்கொடையைக் கோரியுள்ளனர்.

2009ஆம் ஆண்டு உலக வங்கியால் முன்னெடுக்கப்பட்ட அணைக்கட்டு திட்டத்துக்கு வழங்கப்பட்ட நிதி தொடர்பில் சந்தேகத்துக்கு இடமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டங்கள் காணப்படுகின்றன. அதற்குப் பதில் சிறிசேன குறிப்பிட்ட அணைக்கட்டுத் திட்டத்தை எஸ்.எம்.ஈ.சி. நிறுவனத்துக்கு வழங்கவேண்டும் என்ற ஏற்பாடும் காணப்பட்டுள்ளது.

சமீபத்தில் பதவிநீக்கம் செய்யப்பட்ட எஸ்.எம்.ஈ.சியின் இலங்கை முகாமையாளர் மின்னஞ்சல் ஒன்றில் தான் இலங்கை அமைச்சருக்கும், அவரது ஆலோசகருக்கும் வழங்கவுள்ள இலஞ்சத்தின் அளவு குறித்து தெரிவிக்கவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சில தரப்புகளுக்குப் பணம் வழங்குவதற்கு தான் முன்னுரிமை வழங்கவேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட நிறுவனம் அரசியல் நன்கொடை கோரப்பட்டதை ஏற்றுக்கொண்டுள்ள அதேவேளை, இலங்கை அமைச்சரால் கோரப்பட்ட பணம் வழங்கப்படவில்லை என்பது உள்ளக விசாரணையின் மூலம் உறுதியாகியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(வ-4)

## பயங்கரவாதச்...

நேற்று முன்தினம் சபை ஒத்திவைப்புப் பிரேரணை முன்வைத்தார். இவ்வாறான தொரு நிலையிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(வ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி ஆலாலசுந்தரம்



காரைநகர், நந்தாவில், களபூமியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஆலாலசுந்தரம் 24.08.2016 புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவரான ஆலாலசுந்தரத்தின் மனைவியும் ஞானாம்பிகை (ஆசிரியர்-வியாவில் சைவ வித்தியாலயம்), சிவஞானம் (ஆசிரியர்- வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் யோகமலரின் (ஆசிரியர்- கொக்குவில் இந்துக்கல்லூரி) மாமியும் சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் துளசிகன், யதுசன், எழில்வேணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில், களபூமி,
காரைநகர். (ஜே/4036)(12.18)

தகவல்:
சிவஞானம் (மகன்)

### சவரிமுத்து அன்ரனி (மாமா)



பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, இருபாலையை வசிப்பிடமாகக் கொண்ட சவரிமுத்து அன்ரனி 22.08.2016 திங்கட்கிழமை கொழும்பில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து மற்றும் செலஸ்ரினா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அலோசியஸ் - பிரான்ஸிஸ்கா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நீற்ரா (அக்கா) வின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இன்று (25.08.2016) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு A.F. Raymond Funeral Palour இல் வைக்கப்பட்டு மாலை 5 மணியளவில் ஆராதனைகளின் பின்னர் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய் யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
சகோதரி
குடும்பத்தினர்.

077 4553 450 (ஜே.4040) (13.18)

### திருமதி பூமணி சூரியர்



இலந்தைக்காடு வல்வெட்டித்துறையை (உடுப்பிட்டி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி சூரியர் 22.08.2016 திங் கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமன் - சிவப்பி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூரியர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, செல்லையா, சின்னத்துரை, மயில்வாகனம், கந்தையா, ரத்தினம் மற்றும் பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சிதமலர் (றஞ்சி), குலராசா (சிங்கன் - சுவிஸ்), இராசசுலோசனா (ஜெயந்தி), மல்லிகாதேவி (குண்டு - கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இலந்தைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலந்தைக்காடு
வல்வெட்டித்துறை,
(உடுப்பிட்டி) (ஜே.4043) (13.18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA
## VACANCIES

Applications will be received by me up to 23rd September 2016 from suitably qualified candidates for the following posts;

**1.POST – TECHNICAL OFFICER GRADE.II SEG.A**

(Vacancies exist at the Department of Bio-Technology & Department of Engineering Technology of the Faculty of Technology, Kilinochchi Premises)

**Qualifications:**

National Diploma in Technology in the relevant field of specialization or its equivalent qualifications

| | |
|---|---|
| Salary Scale | : U-MT1(II) Rs.18,360-7x185;9x245-21,860 p.m |
| Selection | : By Practical Test and Interview |
| Age Limit | : Not more than 40 years |

(*Note - Age limit is not applicable for applicants in the Government Departments/ State Corporation and statutory bodies.)

**2.Draughtsman (Lowe Grade)**

(Vacancy exist at the Faculty of Engineering, Kilinochchi Premises)

**Qualifications:**

Qualifications in Draughtsmanship obtained at a Draughtsman Examination of Government Department or from a recognized institution.

| | |
|---|---|
| Salary Scale | : U-MT1(IIIA) Rs.16,535-7x155;10x185-19,470 P.M |
| Selection | : By Interview |
| Age Limit | : Not more than 45 years |

(*Note - Age limit is not applicable for applicants in the Government Departments/ State Corporation and statutory bodies.)

**Statutory Benefits:**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of **"Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self- addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 23.09.2016**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

**Registrar**
**22.08.2016**


# கருணாவைப் பிடித்து தூக்கில் போடுங்கள்

## கருத்தறியும் செயலணியிடம் ஏறாவூர் முதியவர் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 25

எனது மனைவி, பிள்ளைகள், உறவினர்களைப் படுகொலை செய்த விடுதலைப்புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதியான கருணா அம்மானை உடன் கைதுசெய்யுங்கள். எமது குடும்பத்தை அழித்தவர்களுக்கு சாவுத் தண்டனை வழங்கினாலே எனது ஆத்மா சாந்தியடையும்.

இவ்வாறு மக்கள் கருத்தறியும் செயலணியிடம் வேதனையுடன் தெரிவித்தார் காமிது லெப்பை மீராசெய்கிப் என்ற வயோதிபர்.

போர்க்குற்ற விசாரணைகளை எவ்வாறு முன்னெடுப்பது என மக்களிடம் கருத்தறியும் செயலணியின் அமர்வு நேற்று ஏறாவூர் நகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் எனது வீட்டுக்கு ஆயுதங்களுடன் வந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் எனது மனைவி, 6 பெண்பிள்ளைகள் உள்ளிட்ட ஒன்பது பேரை வெட்டிக்கொலை செய்தனர்.

கொலையாளிகள் தற்போது எங்கிருக்கிறார்கள் என எனக்குத் தெரியாது. ஆனால், இந்தப் படுகொலைக்குப் பொறுப்பாக இருந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாணத் தளபதி கருணா அம்மான் உயிருடன் இருக்கின்றார். அவரை உடன் கைதுசெய்து விசாரித்தால் உண்மைகள் வெளிவரும். எமது குடும்பத்தை அழித்தவர்களுக்கு சாவுத்தண்டனை வழங்கினாலே எனது ஆத்மா சாந்தியடையும்.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் எந்தப் பகையும் இல்லை. நாம் தொடர்ந்தும் ஒற்றுமையாகவே வாழ விரும்புகின்றோம். சகோதர இன ஒற்றுமைக்காக முழுமையான பங்களிப்பை அரசு வழங்கவேண்டும்–என்றார். (வ-4)

### பிரதான சந்திகளில் சமிக்ஞை விளக்குகள் அமைக்கும் பணி ஆரம்பம்

யாழ். மாவட்டத்தில் பிரதான சந்திகளில் சமிக்ஞை விளக்குகளை அமைக்கும் இரண்டாம் கட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.கோப்பாய் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவோடு இரவாக சமிக்ஞை விளக்குகளை பொருத்துவதற்கான கம்பங்கள் நடப்பட்டுள்ளன.ஏனைய இடங்களிலும் இதற்கான கம்பங்கள் நாட்டப்படவுள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி தகவல்கள் தெரிவித்தன.

வேம்படிச்சந்தி, ஆரியகுளம் சந்தி, திருநெல்வேலிச்சந்தி, சுன்னாகம் சந்தி, நெல்லியடிச் சந்தி போன்ற சந்திகளில் இதற்கான கம்பங்கள் நாடப்படும்.

இந்த வீதி சமிக்ஞை விளக்கும் பொருத்தும் பணிகள் யாவும் செப்ரெம்பர் மாதத்தில் நிறைவு பெற்றுவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)

### நாடாளுமன்றில் இலத்திரனியல் வாக்கெடுப்புக் கருவி

நாடாளுமன்றில் இடம்பெறும் வாக்கெடுப்பை, இலத்திரனியல் கருவியின் மூலம் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்தார்.

எதிர்வரும்வரவுசெலவுத்திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னர் இதனை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.நாடாளுமன்றநிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், இலத்திரனியல் முறைமையை பயன்படுத்துவது தொடர்பில் நீண்டகாலமாக கலந்துரையாடப்பட்டு வந்திருப்பினும், இதுவரையில் அது நிறைவேறாதுள்ளது. இந்நிலையில் அதனை நிறைவேற்ற எண்ணியுள்ளேன் என்றார். (வ-4)

### மாங்குளம்....

ளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவின் பிரேரணைகளுக்கு அமைய சிறப்புப் பொருளாதார வலயத்துக்குப் பதிலாக சிறப்புப் பொருளாதார நிலையங்கள் இரண்டை அமைக்க முடிவு செய்யப்பட்டது. மாங்குளத்திலும் மற்றையது வவுனியா மதகுவைத்த குளத்திலும் அமைப்பதற்கு கிராமிய பொருளாதார அமைச்சர் பி.ஹரிசன் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு நேற்று முன்தினம் அனுமதி வழங்கப்பட்டது.

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலர்கள், பொருளாதார வலயம் அமையவுள்ள பிரதேசங்களின் பிரதேச செயலர்கள், அமைச்சர் பி. ஹரிசன் ஆகியோருக்கு இடையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுயில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

இரண்டு இடங்களிலும் உடனடியாக வேலைகளை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது மாங்குளத்தில் ஏற்கனவே உள்ள மரக்கறி மீன் விற்பனைச் சந்தையை அபிவிருத்தி செய்து பொருளாதார வலயமாகப் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. (வ-5-10)


**துயர் பகிர்கின்றோம்**



எமது பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவை நடத்திவரும்

**திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம்**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/ சுருவில் றோ. க. த.க.பாடசாலைச் சமூகம்,**

**APPLICATION FOR DIPLOMA COURSE IN COUNSELLING PSYCHOLOGY**

The applications are called for the above one year course and following are the prerequisites.

1. All Pass in G.C.E. (A/L)
2. Commitment to contribute to the Psychological health of people
3. Dedication for professionalism
4. Fair knowledge of English

Special application form is available at the office at minimal rate. Final date of submission of application is before the 15th September, 2016. Only a limited number of suitable applicants will be selected for the course.

Rev. Fr. Rajendram Stalin
Director
AHAVOLI: Institute of Counselling Psychology
(Affiliated to National University of Ireland, Galway)
St.Patrick's Road, Jaffna.
Contact number in Office Hours: 021 222 2856
(14049) (13.18.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்திரியின் உத்தரவை அலட்சியம் செய்கிறது நிதியமைச்சு

## குற்றஞ்சாட்டுகின்றனர் வாகன இறக்குமதியாளர்கள்

கொழும்பு, ஓக. 25

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு அறவிடப்படும் வரி தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த பணிப்புரையை நிதியமைச்சு அலட்சியம் செய்துள்ளது என்று வாகன இறக்குமதியாளர்கள் குற்றம் சுமத்தினர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் போது இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான தீர்வைச் சடுதியாக அதிகரிக்கப்பட்டது.

இதன் காரணமாக வரவு–செலவுத் திட்டத்துக்கு முன்னதாக இறக்குமதி செய்யப்பட்ட போதிலும், இலங்கையை வந்தடைந்திராத வாகனங்களுக்கும் அதிகரித்த வரி விதிக்கப்பட்டது. அதில் சிறு அளவில் வாகன இறக்குமதியில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்கள் பாதிப்புக்குள்ளாகினர். வரவு – செலவுத் திட்டத்துக்கு முன்னதாக இறக்குமதி செய்யப்பட்ட தமது வாகனங்களுக்கு அதிகரித்த வரி அறவிடப்படுதல் அநீதியானது என்று அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, குறித்த வாகனங்களுக்குக் குறைந்த பட்ச வரியை அறவிடுமாறு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன உத்தரவிட்டிருந்தார்.

நிதியமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதியின் உத்தரவை அலட்சியம் செய்திருந்ததுடன், குறித்த வாகனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் காரணமாக சுமார் 50 வர்த்தகர்கள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என்று கூறப்பட்டது. (ஜ–5)

# திருக்கேதீஸ்வரத்தில் விகாரை அமைப்பு; பதிலளிக்க கால அவகாசம் கோரியது அரசு

கொழும்பு, ஓக. 25

திருக்கேதீஸ்வரம் கோயிலுக்கு மிக அண்மையிலுள்ள தமிழருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமான முறையில் விகாரையொன்று நிர்மாணிக்கப்படுகின்றதா எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிப்பதற்கு இருவார கால அவகாசத்தை புத்தசாசன அமைச்சு கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்றின்போது, கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனே நீதி மற்றும் பௌத்தசாசன அமைச்சரிடம் மேற்படி வினாவைத் தொடுத்தார்.

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம் கோவில் இந்து மக்களின் புனித வழிபாட்டுத் தலம். இந்தக் கோவிலுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கணபதிப்பிள்ளை விஜயகுமார் என்பவருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமான முறையில் விகாரையொன்று நிர்மாணிக்கப்படுகின்றதா என்பதை அமைச்சர் அறிவாரா?

சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரையின் நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸின் கேள்விகள் ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றிருந்தன.

இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு நீதி, புத்தசாசன அமைச்சு இருவார கால அவகாசத்தைக் கோரியுள்ளது. (வ–5)

## மரண அறிவித்தல்கள்

### மேரி சன்றா (SR.Zandra)




அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி சன்றா (SR.Zandra) அவர்கள் நேற்று (24.08.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.08.2016) வியாழக்கிழமை பி.ப 2.15 மணியளவில் கார்மேல்மடம் கோயில் வீதியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு 3 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கார்மேல் மடத்தின் மேலாளர்.
அருட்சகோதரி ஜொய்ஸ் மாறி, யாழ்ப்பாணம்.

### திருமதி பரமேஸ்வரி நவரத்தினம்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் அக்கராயன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நவரத்தினம் தற்போது பண்டத்தரிப்பில் நேற்று (24.08. 2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா இராசம்மா தம்பதியினரின் மூத்தமகளும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் -ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் ஜெயசேகரம் (அக்கராயன் குளம்), ஜெய்ப்பிரபா (இந்தியா), ஜெயவற்சலா (ஆசிரியர் அக்கராயன் குளம்), ஜெயமகேந்திரன் (கணக்காளர் கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.08. 2016) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்: குடும்பத்தினர்
0778334786

# குத்தகைக் காணிகளில் பண்ணைகளை இயக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை

## மாகாண விவசாயப் பிரதிப் பணிப்பாளர் கவலை

வவுனியா, ஓக. 25

விவசாய உற்பத்திப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டுப் பத்து வருடங்கள் கடந்துள்ளன. சிறப்பாக உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும் நிரந்தரக் காணி இல்லாமல் தனியார் காணிகளிலேயே குத்தகைக்குப் பண்ணைகளை இயக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்றும் தொடர்கின்றது.

இருந்தாலும் வவுனியாவில் உள்ள இளைஞர் விவசாய அமைப்புக்கள் முன் வந்தால் அவர்களுக்குக் கொடித் தோடை (பசன்புறூட்) கன்றுகளை வழங்கி கிராம மட்ட வேலைத்திட்டத்தில் ஊக்குவித்து ஆலோசனைகள் வழங்கிச் செயற்பட எப்போதும் தயாராகவே இருக்கிறோம்.

இவ்வாறு வவுனியா மாவட்ட – மாகாண விவசாய பிரதிப் பணிப்பாளர் ரி.யோகேஸ்வரன் தெரிவித்தார். வவுனியா கூமாங்குளம் பகுதியில் நல்லெண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியா விவசாய மாவட்டம். எனினும் இங்கு விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் பொருள்கள் மூலப் பொருள்களாகவே விற்பனை செய்யப்பட்டுவிடுகின்றன. விவசாயிகள் உடனடியாக அந்தப் பொருள்களை விற்பனை செய்யும்போது குறைந்தளவிலேயே விலை கொடுக்கப்பட்டு அவை கொள்வனவு செய்யப்படுகின்றன. பொருள்களின் விலை உயர் வடையும்போது காத்திருந்து அவற்றை விற்றால் நன்மை கிடைக்கும். விவசாயிகளிடம் பெறப்படும் விவசாய மூலப் பொருள்களைக் கொள்வனவாளர்கள் குறைந்தளவிலேயே கொள்வனவு செய்கின்றனர். பின்னர் அவற்றைச் சுத்தப்படுத்தி அதை நன்றாகப் பொதி செய்து அதிக விலையில் விற்பனை செய்கின்றார்கள். இதனால் விவசாயிகள் மேலதிகமாகப் பெறக்கூடிய வருமானத்தை இழக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் பல பகுதிகளில் கிராமமட்ட அமைப்புக்களை உருவாக்கி அதனூடாகப் பலருக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கின்றோம். விவசாயத் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட பெண்களால் முன்னெடுக்கப்படும் விவசாய உற்பத்தி அமைப்புகளில் கூமாங் குளம் அம்பாள் அமைப்பினரின் பண்ணையில் நல்லெண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து நல்லெண்ணெயை உற்பத்தி செய்து அதனூடாகக் கிடைக்கும் வருமானத்தில் எமக்குச் சிறிய தொகையைக் கொடுத்துவிட்டு கிடைக்கும் இலாபத்தை இங்கு பணிபுரிபவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

தரமான தயாரிப்புக்களை நாம் மேற்கொள்ளும்போது அதற்குப் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு கிடைக்கும். செட்டிகுளத் தில் உழுந்து உற்பத்திப் பண்ணை, ஓமந்தையில் அரிசி மா உற்பத்திப் பண்ணை, மணிப்புரத்தில் தேங்காய் எண்ணெய் உற்பத்திப் பண்ணை, சாந்தசோலையில் குரக்கன் போன்றவற்றை உற்பத்தி செய்து அங்குள்ள கிராம அமைப்புக்களுடன் இணைந்து கிராம மட்ட வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

இவ்வருடத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வவுனியா கண்டி வீதியில் பிறவுண் கம்பனிக்கு அருகில் உணவகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நாளாந்தம் சுமார் ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தைப் பெறுகின்றது. அதில் அதிக வருமானத்தை அங்கு பணிபுரிபவர்கள் பெற்று வருகின்றார்கள். எமது திணைக்களத்தில் நிறைய உற்பத்திகள் செய்வதற்கான வழிகள் உள்ளன. அவற்றைப் பொது மக்கள் சரிவரப் பயன்படுத்த முன்வர வேண்டும். பொதுமக்கள் முன்வந்து தமது உற்பத்தி பொருள்களைத் தயாரித்து பல வழிகளில் விற்பனை செய்வதற்கு இங்கு பொருளாதார உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் உதவி புரிய தயாராக உள்ளன.

எமக்கு மத்திய, மாகாண அரசுகளிடமிருந்து போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. அதைப் பயன்படுத்திக் கிராமமட்ட வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால் கிராம மட்டத்தில் ஆரம்பிக்கப்படும் உற்பத்தி ஆலைகளுக்கு நிரந்தரக் காணியில்லை. அதனால் குத்தகைக்குப் பெற்று நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இந்தச் செயற்றிட்டம் இடம்பெற்று வருகின்றபோதும் இதுவரை சொந்த காணிகள் இன்றியே இயங்கி வருகின்றது – என்றார்.

இந்த நிகழ்வில் கூமாங்குளம் பொது நூலக நூலகர், விவசாய பாட விதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனா ஆசிரியர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம், இளைஞர் விவசாய அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (த-4-21)

# மரண அறிவித்தல்

## அருட்சகோதரி சன்றா (Zandra)

கார்மேல் சபை (இளைப்பாறிய ஆசிரியை யாழ் பரியோவான் கல்லூரி ,கொழும்பு -புனித பெனடிக்ற் கல்லூரி )



சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்சகோதரி சன்றா அவர்கள் 24.08.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற மேரி யோசவ் - ஞானமணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் மதுரம் செபஸ்ரியன் (லண்டன்) ராணி வியஜசிங்கம், தவராஜ் (லண்டன்), யோகாகிறிஸ் தோப்பர் (லண்டன்), புவிராஜ் (பணிப்பாளர்- நிதி அமைச்சு, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் கோயில் வீதியில் உள்ள கார்மேல் மடத்தில் (Bosco Convent) வைக்கப்பட்டு இறுதி ஆராதனைக்காக இன்று 25.08.2016 பி.ப 2.30 மணியளவில் யாழ் புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனனவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பகலிரவு டெஸ்ட்டை இந்தியா பரிசீலனை

பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களுக்கு மாறுவது தொடர்பாக, குறித்த வகை ஆட்டமொன்றை நடத்தி பரிசீலனை செய்து வருகிறது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. டெஸ்ட் ஆட்டங்களில் விறுவிறுப்புத்தன்மையைக் கொண்டுவரும் நோக்கிலும், ரசிகர்களை டெஸ்ட் ஆட்டங்களை நோக்கிப் படையெடுக்க வைக்கும் விதத்திலும் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை அறிமுகம் செய்தது பன்னாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. ஏற்கனவே சில பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள் நடந்து முடிந்துவிட்டபோதிலும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை குறித்த வகை ஆட்டத்துக்கு மாறுவது தொடர்பாக இன்னும் முடிவெடுக்கவில்லை.

இந்த நிலையில் ரெய்னா, யுவராஜ் தலைமையில் இந்தியா ரெட், இந்தியா கிரீன் என்ற இரு அணிகளுக்கு இடையில் பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தை நடத்தி வருகிறது இந்திய கிரிக்கெட் சபை. ஆட்டத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா ரெட் 161 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் இந்தியா கிரீன் நாள்முடிவில் 116–7 என்றிருந்தது. மொத்தத்தில் முதல் நாளிலேயே 17 இலக்குகள் வீழ்ந் துள்ளன. எனவே பகலிரவு டெஸ்ட் ஆட்டங்கள் பந்துவீச்சுக்குச் சாதகமானவை எனத் தெரிகிறது. இந்திய அணியில் பந்துவீச்சு வரிசையைவிட துடுப்பாட்ட வரிசையே பலம் என்பதால் பகலிரவு டெஸ்ட் ஆட்டத்துக்கு இந்திய கிரிக்கெட் சபை மறுக்கவும் வாய்ப்புள்ளது. (ம)

## கிண்ணத்தைத் தீர்மானிக்கும் இறுதி டெஸ்ட்

நியூசிலாந்து – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

தொடரில் இரண்டு ஆட்டங்கள். எனவே ஒரு ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி கிண்ணத்தை இழக்க வாய்ப்பில்லை. முதலாவது ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டு சமநிலையில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தென்னாபிரிக்காவிலுள்ள செஞ்சூரியன் மைதானத்தில் நாளை மறுதினம் இரண்டாவது டெஸ்ட் ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணத்தை வெல்லும் என்பதால் ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரம் மழையின் ஆதிக்கமும் அவ்வப்போது இருக்கலாம் என்று எதிர்வு கூறப்படுகி றது. (ம)

# இன்னும் ஒருசில வாரங்களில் முதலிடம் பிடிக்கும் இந்தியா

## கோக்லி தெரிவிப்பு

பன்னாட்டு டெஸ்ட் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்திலுள்ள இந்திய அணி, இன்னும் சில வாரங்களில் முதலிடத்தைப் பிடிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் தலைவரான கோக்லி.

தரப்படுத்தலில் பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது. இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் தொடரின் நான்காவது ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இந்த டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றிருந்தால் தரப்படுத்தலில் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடித்திருக்கலாம். ஆனால் முதல் நாளில் வீசப்பட்ட 22 பந்துப்பரிமாற்றங்களே இந்த ஆட்டத்தில் வீசப்பட்ட ஒட்டுமொத்த பந்துப் பரிமாற்றங்களுமாகும். ஏனைய நான்கு நாள்களும் மழையாலும், ஈரப்பதத்தாலும் பாதிக்கப்பட்டது.

இதனால் இந்தியாவுக்குத் தரப்படுத்தலில் சறுக்கல் நிலை ஏற்பட்டது. இந்தியாவின் சறுக்கல் நிலை பாகிஸ்தானுக்கு வாய்ப்பாக அமைய அந்த அணி முதலிடத்தைப் பிடித்தது. இந்த நிலையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

எமக்கும், முதலிடத்தில் உள்ள பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள புள்ளி இடைவெளி மிகவும் குறைவாகவே இருப்பதால் பாகிஸ்தானின் ஆதிக்கம் குறைந்த கால நீடிப்புத்தான். இன்னும் சில வாரங்களில் பாகிஸ்தானைப் பின்தள்ளி முதலிடத்தைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அடுத்த சில தொடர்கள் எமது சொந்த மண்ணில் நடைபெறவுள்ளமை எமக்கு இன்னும் அதிக வாய்ப்பு என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)





## கேரத் ஓய்வு பெற்றமைக்கு மகிழ்ச்சி தெரிவித்த சிமித்

ஒருநாள் ஆட்டங்களிலிருந்து கேரத் ஓய்வு பெற்றமைக்கு ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித் மகிழ்ச்சி தெரிவித்த சம்பவம் தற்போது வெளிவந்துள்ளது. இதை சிமித்தே வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி டெஸ்ட் தொடரை 3:0 என்ற கணக்கில் இழந்தது. 6 இன்னிங்ஸ்களில் 5 தடவைகள் சிமித், கேரத்தின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர் முடிந்த பிற்பாடு இலங்கை வீரர்கள் ஆஸ்திரேலிய வீரர்களின் ஓய்வறைக்குச் சென்று உரையாடியுள்ளனர். அப்போது கேரத்தின் பந்துவீச்சை வெகுவாகப் பாராட்டிய சிமித், நல்லவேளை நீங்கள் ஒருநாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டீர்கள். எனவே நான் ஓட்டங்களைக் குவிக்கலாம் என்றாராம். இதை சிமித் தற்போது வெளிப்படுத்தியுள்ளார். (ம)

## அனுசரணையை இழந்தார் றயன்

ஒலிம்பிக் தொடர் நடைபெற்றபொழுது தம்மிடம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவித்து சர்ச்சையை ஏற்படுத்திய அமெரிக்க நீச்சல் வீரர்களில் ஒருவரான றயனின் அனுசரணை நிறுவனங்கள் அவருடனான ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளன.

ரியோ ஒலிம்பிக் நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது வீரர்கள் தங்கியிருந்த ஒலிம்பிக் கிராமத்தை விட்டு வெளியேறிய நான்கு அமெரிக்க நீச்சல் வீரர்கள் மதுபோதையில் பெற்றோல் நிரப்பு நிலையமொன்றில் தகராறு செய்ததோடு மாத்திரமல்லாது, பொது இடத்தில் சிறுநீர் கழித்தமை காரணமாக பாதுகாப்பு அதிகாரியொருவரால் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டனர். இவர்களில் பிரபல நீச்சல் வீரரான றயனும் ஒருவராவார். நிரப்பு நிலையத்தைச் சேதப்படுத்தியமையால் அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரே அவர்கள் விடுவிக்கப்பட்டனர். தமது குற்றத்தை மூடிமறைக்க முயன்ற வீரர்கள் தம்மிடம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவித்ததுடன் பிரேஸிலின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மீதும் அதிருப்தி தெரிவித்தனர். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் தவறு வீரர்களிடத்தில் இருப்பது உறுதியானது. இதனை நான்கு நீச்சல் வீரர்களும் ஏற்றுக்கொண்டனர். இதையடுத்து நீச்சல் ஜாம்பவானான றயனுடனான ஒப்பந்தத்தை நான்கு நிறுவனங்கள் நிறுத்தியுள்ளன. இதனால் றயனுக்கு கோடிக்கணக்கான இழப்பு ஏற்பட்டுள்ளது. (ம)






சீனாவைப் பின்னுக்குத் தள்ளி 36 வருடங்களுக்குப் பின்னர் ஒலிம்பிக் தொடரில் இரண்டாம் இடம் பிடித்த பிரிட்டன் அணி நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பியது. இதனையடுத்து விமான நிலையத்தில் அந்த அணிக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி விளையாட்டு மைதானம் புனரமைக்கும் பணிகள் துரித கதியில்

சாவகச்சேரி, ஓக. 25
சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தின் துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.
சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தைப் புனரமைக்கும்படி குறித்த பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் வேண்டு கோள் விடுத்திருந்த நிலையில், சாவகச்சேரி நகரசபையின் வாகனங்கள் மூலம் அங்கு காணப்பட்ட புற்கள் மற்றும் பற்றைகளைத் துப்பரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.
குறித்த விடயம் தொடர்பாக நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசனுடன் தொடர்புகொண்டு கேட்டபொழுது, தென்மராட்சிப் பிரதேசத்தில் தரமான மைதானம் இல்லாததால் பிரதேச வீரர், வீராங்கனைகள் தமது பயிற்சிகளைச் சீராகப் பெறமுடியாத நிலை காணப்பட்டது.
இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் விதமாகவே சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தின் துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கிட்டத்தட்ட ஏழு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்த மைதானம் 400 மீற்றர் தடத்தைக் கொண்ட மைதானமாகப் பயன்படுத்தக்கூடியதாகவும், அதேநேரம் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம் உட்பட பல விளையாட்டுக்களுக்கான பயிற்சிகளை மேற்கொள்ளும் விதமாகப் புனரமைக்கப்படவும், விளையாட்டரங்கு அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
எனவே குறித்த திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குமாறு மாகாண விளையாட்டு அமைச்சிடம் கேட்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.
(ம-9)

# அரையிறுதியில் சென். பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 25
யாழ். மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 17 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளது.
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.
அதிகபட்சமாக கபில்ராஜ் 37 ஓட்டங்களையும், ஜதுசன் 32 ஓட்டங் களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென். பற்றிக்ஸ் அணியின் சார்பில் ரதீசன் 4 இலக்குகளையும், நிருசன், அனோசன் இருவரும் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
116 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மட்டும் இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக அனோசன் 50 ஓட்டங்களையும், டில்சான் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பில் கபில்ராஜ், ஜங்கரன், யதுசன், சௌரெப்பன் நால்வரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம-23)



# பள்ளிக்குடா இளந்தளிர் சம்பியன் ஐயனாரின் கால்பந்துத் தொடரில்

யாழ்ப்பாணம், ஓக. 25
ஐயனார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் பள்ளிக்குடா இளந்தளிர் அணி சம்பியனானது.
பூநகரி ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. பூநகரி பள்ளிக்குடா இளந்தளிர் அணியை எதிர்த்து கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது.
2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது பள்ளிக்குடா இளந்தளிர் அணி. சிறந்த வீரனாக பூநகரி பள்ளிக்குடா இளந்தளிர் அணியின் சுமன் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக இளந்தளிர் அணியின் சாரு தெரிவானர். (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 25
பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பி ளான் குறிஞ்சிக் குமரன் அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் அணியும், மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், மாலை 5 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணியும் மோதவுள்ளன. (ம-422-108)



## கலைவாணியின் விளையாட்டுக்கள்

கலைவாணி சனசமூக நிலையம் எதிர்வரும் 11 ஆம் திகதி சில விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது.
ஆண்களுக்கான பளு தூக்குதல், இருபாலாருக்குமான குண்டு எறிதல், கயிறு இழுத்தல், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம், சங்கீதக் கதிரை ஆகியன அவ்வாறு இடம்பெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் சிலவாகும். பங்குபற்ற விரும்புவோர் கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.
(ம-422-23)

# சுழல் பந்துவீச்சின் மட்டில் வடக்கு வீரர்கள் தடுமாற்றம்

## தெரிவித்தார் தலைமைப் பயிற்சியாளர்



யாழ்ப்பாணம், ஓக. 25
வடக்கு மாகாண கிரிக்கெட் வீரர்கள் சுழல்பந்துவீச்சை வீசுவதிலும் எதிர்கொள்வதிலும் பின்னடைவைச் சந்திக்கிறார்கள், தடுமாறுகிறார்கள் எனத் தெரிவித்தார் வடக்கு மாகாணப் பயிற்றுநர் அமில சுரங்க பின்னத்துவ.
வடமாகாணத்தின் தலைமைப் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றுள்ள பின்னத்துவ, உதயனுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார். வடக்கு மாகாணத்தில் ஏகப்பட்ட திறமையான வீரர்கள் உள்ளனர். குறிப்பாக துடுப்பாட்டம் சிறந்த முறையில் உள்ளது. ஆனால் இங்குள்ள ஒரே பிரச்சினை சுழல் பந்துவீச்சின் மட்டிலேயே உள்ளது.
துடுப்பாட்ட வீரர்கள் சுழல் பந்துவீச்சை எதிர்கொள்வதில் சிறிது தடுமாற்றம் காட்டுகிறார்கள். அதேபோல் சுழல் பந்துவீச்சாளர்களின் நுட்பங்களில் சிறிய தவறுகள் உள்ளன. இவற்றை ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் சரி செய்துவிடலாம்.
இவ்வாறான குறைபாடுகள் நீக்கப்பட்டு தேசியத்துக்குத் தேவையான வீரர்களை வடக்கில் இருந்து உருவாக்குவதே எனது நோக்கம் என அவர் மேலும் தெரிவித்தார்.
(ம-23)



யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர்கள், உத்தியோகத்தர்களுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மாகாண, மாவட்ட பயிற்றுநர்களின் முகாமையாளர் கேம மெண்டிஸின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையை தவறவிட்ட சந்திமல்



தொடர்ச்சியாக அதிக அரைச் சதங்களைப் பதிவுசெய்த இலங்கை வீரர் என்ற அடைவு மட்டத்தை சந்திமல் நூலிழையில் தவற விட்டார்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் சந்திமல் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மேலதிகமாக இரண்டு ஓட்டங்களைப் பெற்று அரைச் சதத்தை நிறைவுசெய்திருந்தால் இது அவருக்கு தொடர்ச்சியாக ஆறாவது அரைச் சதமாக அமைந்திருக்கும். தொடர்ச்சியாக அதிக அரைச்சதங்களைப் பதிவுசெய்த பட்டியலில் குமார் சங்கக்கார, சனத் ஜெயசூரிய, டில்சான் ஆகியோர்-6 அரைச் சதங்களுடன் முதலிடத்தில் உள்ளனர். இவர்களுடன் குறித்த பட்டியலில் சந்திமல் இணைவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், வெறும் இரு ஓட்டங்களால் அவர் அதைத் தவற விட்டார். ஒட்டுமொத்தமாக இந்தப் பட்டியலில் பாகிஸ்தான் வீரர் ஜாவீட் மியான்டாட் ஒன்பது அரைச்சதங்களுடன் முதலிடத்தில் உள்ளார். (ம)

கிராம அலுவலர்(GS) விசேட இறுதி கருத்தரங்கு
வெள்ளி (26/08)
சனி (27/08)
ஞாயிறு (28/08)
காலை 9.30-3.30 மணிவரை
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)
வவுனியா(CBA)
மன்னார் (BCS)
நெல்லியடி (Science center)
சித்தங்கேணி(Subra)
நிலையங்களிலும் GS வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
நேர அட்டவணை அலுவலகங்களில்
T.P 0766883394

# ஆஸ்திரேலியாவுக்குத் தக்க பதிலடி; முறையாகக் கவனித்தது இலங்கை



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் 82 ஓட்டங்களால் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது இலங்கை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக குணதிலக மற்றும் டில்சான். மூன்றாவது பந்துப்பரிமாற்றத்தில் குணதிலகவை போல்ட் செய்தார் ஸ்ராக். அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் லையனிடம் போல்ட் ஆனார் டில்சான். 12 ஓட்டங்களுக்கு ஆரம்ப இணையை இழந்தது இலங்கை. மெண்டிஸ், சந்திமல் இணை ஆஸியின் பந்துவீச்சு வரிசையை மிகையாகவே சோதித்தது. மேலதிக இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இலங்கை. அரைச்சதம் கடந்தார் மெண்டிஸ். இரு ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் சந்திமல். சந்திமலை வீழ்த்திய சுழல் வீரர் சாம்பாவே மெண்டிஸையும் வீழ்த்தினார். மத்தியூஸ், குசல் ஜெனித் பெரேரா இணை மத்திய வரிசையைப் பலப்படுத்தியதுடன் பெரியதொரு இலக்கை நிர்ணயிக்கக்கூடிய அடித்தளத்தை அமைத்தது. அவ்வப்பொழுது சிக்சர்களும் இருந்தன. இருவரும் அரைச்சதம் கடந்தனர். 57 ஓட்டங்களுடன் மத்தியூஸையும், 54 ஓட்டங்களுடன் குசல்பெரேராவையும் வீழ்த்தினார் பல்க்நெர். முடிவில் இலங்கை 288 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பில் ஸ்ரார்க், சாம்பா, பல்க்நெர் மூவரும் தலா மூன்று இலக்குகளையும், லையன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸிக்கு, அதன் ஆரம்ப வீரரான வோர்ணரை வீழ்த்தி பதற்றத்தைக் கொடுத்தார் திசர பெரேரா. அடுத்த சில நிமிடங்களில் பிறிதொரு ஆரம்ப வீரரான பின்ஞ்சும் பெரேராவிடம் சிக்கினார். தற்போது ஆஸ்திரேலியா 16-2. நிலைக்க முற்பட்ட சிமித்தை 30 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் அபொன்சோ. பெய்லியும் அபொன்சோவிடம் சிக்கினார். பெய்லி, தான் எதிர்கொண்ட 46 பந்துகளில் ஓர் பவுண்டரியைத்தானும் பதிவுசெய்யவில்லை. ஹென்றிக்ஸ் ஏமாற்றினார். வேட், ஹெட் இணை போராட்டம் காட்டியது. இணைப்பாட்டமாக 62 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இந்த இணை களத்திலிருந்தபோது ஆஸியின் பக்கமும் ஆட்டம் இருப்பதாகக் கருதப்பட்டது. 76 ஓட்டங்களுடன் வேடை வீழ்த்தி இணைப்பாட்டத்தை பிரித்தார் திசர பெரேரா. முடிவில் 206 ஓட்டங்களில் ஆஸ்திரேலியா சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் இலங்கையின் சார்பில் அபொன்சோ 4 இலக்குகளையும், திசர பெரேரா 3 இலக்குகளையும், மத்தியூஸ் 2 இலக்குகளையும், பிரசன்னா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)

# மிக நீண்ட இடைவெளியின் பின் பயிற்சிக்குத் திரும்பினார் மலிங்க



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க, தனது காயத்திலிருந்து மீண்டு படிப்படியான பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக இந்த வருடம் முழுவதும் மலிங்க ஓய்விலிருக்க பணிக்கப்பட்டுள்ளார். இதனால் கடந்த மூன்று மாதங்களாக கிரிக்கெட்டிலிருந்து வெகுதூரத்திலிருந்த அவர், தற்போது குறுகிய நேரப்பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளார். இலங்கை-ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கு முன்பாகவும் மலிங்க சிறிது நேரம் பயிற்சியில் ஈடுபட்டாராம். இருப்பினும், டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரிலும் மலிங்க களமிறங்கமாட்டார் போன்ற தகவல்களே இலங்கைக் கிரிக்கெட்டால் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அறியவருகிறது. (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் தொழில்தேடுவோருக்கானது
ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சி முறையான ஆங்கில பாடநெறி
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 27.08.2016
மாலை 03.00 - 05.00
3 மாதங்களில நீங்கள் சுயமாக ஆங்கிலம் பேசுவதற்கான 100 வீத பிரக்டிகல் பேச்சுப்பயிற்சி
முன்பதிவின் அடிப்படையில் இன்னும் ஒருசில இடங்களே உள்ளன!
SAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
யாழில்40 வருடங்களாக AF இன் பயணம்.
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.
இலவசம்: PHOTOCOPIES, படிப்பதற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர் : யாழ், வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.



ஆரம்பம்: 28.08.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

சிறுநீரகம் தேவை
இருசிறுநீரகங்களும் செயலிழந்துள்ள 27 வயதுடைய நோயாளி ஒருவருக்கு A+ அல்லது O+ இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகங்கள் உடன் தேவை.
சன்மானம் வழங்கப்படும்.
077 573 4277, 077 844 8215

விற்பனைக்கு உண்டு
பண்டத்தரிப்பு பிரதான வீதியில் தற்போது மக்கள் வங்கி இயங்கிக் கொண்டிருக்கும் கட்டடத்தில் 3 கடைகளும் அதன் பின்புறம் வீட்டுடன் 4 பரப்புக் காணியும் விற்பனைக்கு உள்ளன.
(தரகர் வேண்டாம்)
(J-4031)(12.18)
077 157 9176, 077 801 4335



Receptionist
The candidate should be 18-25 years of age. Candidate should be pass A/L exam. With fluency in Tamil, English and Sinhala will be an added advantage. Candidate should be pleasant, active,well mannered, and polite and possess excellent Skills in communication. Candidate should be able to manage all operation of the front office. School leavers will be also considered Good knowledge in Ms Word, Power point and Outlook. Salary+Commission+EPF+ETF.
Interested candidates please submit your CV's, with a recent photograph through post them into the following address,
MCA CAMPUS, No [illegible], Adiyapatham Road,Kalviyankadu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.